
மேற்கு வங்கச் சிறப்பிதழ் — I

கல்கி

KALKI 7.8.88 ரூ. 2.



தத்ரூப இயற்கை வர்ணம், அங்கே நீங்கள் அரங்கிலிருப்பது போலவே இருக்கும்.



PHX TRENDSET
ஒலிம்பிக் ஸ்டார்

இப்போது, ஸியோல் நகருக்கு வெளியே நடைபெறும் ஒலிம்பிக்ஸை நீங்கள் உங்கள் வீட்டில் அமர்ந்தபடியே கண்டு களிக்கலாம்—உறுதுணை நவீனப் பொலிவுள்ள புதிய வெர்ட்டிகல் PHX டிரெண்ட்ஸெட். இதனை நெருங்கி உற்று நோக்குவீரானால் புரியும்...

சிறநுட்ப உத்தியாகிய குரோம் ஸர்க்யூட், வர்ணங்களை நிரந்தர இயற்கைப் பண்போடு நிலைபெறச் செய்கிறது.

இதுநாளையப் புதுநவீன ஆடியோ தொழில்நுட்பம், 12 வாட் உச்ச அவுட்புட் நிலையிலும் தெள்ளத் தெளிவான ஒலி வழங்குகிறது.

வேறெந்த டெலிவிஷன் செட்டையும் விட மேம்பட செயல்படுவதற்கென ஆறு இதர ஆட்டமேட்டிக் சிறப்புகள் அடங்கியது PHX ஒலிம்பிக் ஸ்டார்.

மேலும், எப்போதேனும் சர்விஸிங் உங்களுக்கு தேவைப்படுமானால், பிலிப்ஸ்- பயிற்சிபெற்ற தொழில் வல்லுனர், ஃபோன் மூலம் கூப்பிடு தூரத்திலே எட்டுகிறார் உங்களுக்கு. புதிய PHX டிரெண்ட்ஸெட். இதனை நெருங்கிப் பார்வையிடுங்களேன்.




தவிர, PHX 20Cயும் கிடைக்கிறது.

பைகோ எலக்ட்ரானிக்ஸ் அண்ட் எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட்

இது ஹாலந்து நாட்டு N.V. பிலிப்ஸ் கம்பெனியின் இணை நிறுவனமாகும்.

* 1988 ஒலிம்பிக்ஸின் அதிகாரபூர்வமான ஏற்பாட்டு ஆதரவாளர்கள்.



“தனி மாநிலமே எங்கள் லட்சியம்...”

—கெய்சிங் சிறப்புப் பேட்டி

கூர்க்காலாந்து என்ற தனி மாநிலக் கோரிக்கையை விட்டுக் கொடுத்தும், ‘‘டார்ஜிலிங் கூர்க்கா மலைக் கவுன்சில்’’ என்ற அமைப்பை ஏற்றுக் கொண்டும் முத்தரப்பு ஒப்பந்தத்தில் ஜூலை முப்பதாம் தேதி கையெழுத்திடுகிறார் கெய்சிங். மலைக் கவுன்சில் எனபதோடு ‘‘கூர்க்கா’’ என்ற சொல்லும் இவரது கௌரவத்தைக் காக்கச் சேர்க்கப்பட்டுள்ளது. தனி மாநில உரிமை பெறாவிட்டாலும் புதிய கூர்க்கா மலைக் கவுன்ஸிலுக்குப் பல அதிகாரங்கள் வழங்கப்படும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே பெரும்பாலும் இதில் அங்கம் வகிப்பார்கள். ஒப்பந்தம் கையெழுத்தாவதையொட்டி அமைதி திரும்பும் என்றும் டார்ஜிலிங் வட்டாரத்தின் பாழ்பட்டுப் போன பொருளாதாரம் மீண்டும் துளிர்த்துத் தழைக்கும் என்றும் எல்லாத் தரப்பிலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் தனி மாநிலக் கோரிக்கையைக் கெய்சிங் முற்றிலும் மறந்து விடுவாரா? மாட்டார், தற்காலிகமாகத்தான் விட்டுக் கொடுத்திருக்கிறார் என்றுதான் இந்தப் பேட்டி உணர்த்துகிறது. பேட்டி காணப் பட்ட தேதி 11.7.88.

கல்கி: உங்களின் கூர்க்காலாந்துப் போராட்டம் எப்படி ஆரம்பமானது? அதன் பின்னணியைக் கொஞ்சம் விளக்குங்களேன்......

சுபாஷ் கெய்சிங்: கடந்த 79—இல் பிரதமராக இருந்த மொரார்ஜி, நேபாளி மொழி அந்நிய மொழியென்றும் நேபாளிகள் அந்நிய தேசத்தவர்கள் என்றும் பேசினார். அந்தப் பேச்சு எங்களுக்கு அதிர்ச்சியைத் தந்தது. பாகிஸ்தானிலிருந்தும் பங்களா தேஷிலிருந்தும் வந்த ஆயிரக்கணக்கான மக்கள் இந்தியாவில் சட்டபூர்வமான குடி

மக்களாக இருக்கும்போது நாங்கள் மட்டும் எப்படி அந்நியவர்கள் ஆவோம்? இந்த (டார்ஜிலிங்) மண்ணில் நாங்கள் காலம் காலமாக வசித்து வருகிறோம். இந்தப் பகுதி, 1850 — ஆம் ஆண்டு அப்போதைய நேபாள மன்னரான ரன்பகதூர்ஷா, ஆங்கிலேயருக்கு இனாமாகத் தந்த நிலப்பரப்பு. இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு இந்தப் பகுதியும் இந்தியப் பகுதியே; நாங்களும் இந்தியக் குடிமக்களே. இருப்பினும் நாங்கள் இந்தியக் குடிமக்கள்தான் என்பதற்கு எந்தவிதமான ஆவணமும் இல்லை. நாங்கள் இந்தியக் குடிமக்கள்தான் என்று கெஜட் அறிவிப்பு வெளியிடப்படவில்லை. இந்த நிலையில்தான் மொரார்ஜியின் பேச்சு எங்களையொரு போராட்ட நிலைக்குத் தள்ளியது. மேலோட்டமாக நாங்கள் இந்தியக் குடிமக்கள்தான் என்றாலும் அதையே எழுத்து பூர்வமாக — கெஜட் அறிவிப்பாக வெளியிட வேண்டும்என்று போராட்டத்தைத்தொடர்ந்தோம்.

கல்கி: உங்களின் இந்தக் கோரிக்கையைச் சட்டமன்றத்திலும் பாராளுமன்றத்திலும் எடுத்துச் சொல்லியிருக்கலாமே?

கெய்சிங்: சட்டமன்றத்திலும் பாராளுமன்றத்திலும் இருப்பவர்களெல்லாம் பதவிக்காக ஆளுங்கட்சியிலிருக்கும் சந்தர்ப்பவாதிகள். அவர்கள் ஒருபோதும் எங்கள் குறைகளை எடுத்துச் சொன்னதில்லை.

கல்கி: சட்டமன்றத்திலிருக்கும் உங்கள் பகுதி உறுப்பினர்கள் கூர்க்கா இனத்தவர்கள்தாமே, உங்களின் நியாயமான கோரிக்கைகளை ஏன் ஆதரிக்கவில்லை?

கெய்சிங்: அவர்கள் கூர்க்கா இனத்தவராக இருந்தாலும் பதவி வெறி பிடித்த சந்தர்ப்பவாதிகளாயிற்றே! அவர்கள் எப்படி எடுத்துச் சொல்லுவார்கள்?

கல்கி: அவர்கள் சொல்லா விட்டால் போகிறார்கள்... நீங்களே அரசுக்கு அமைதியான முறையில் எடுத்துச் சொல்லியிருக்கலாமே?

கெய்சிங்: எடுத்துச் சொன்ன என்னைத் தான் மாநில அரசு ஓர் எதிரியாக நடத்துகிறது. எங்கள் மக்களை அடிமைகளைப் போல் நடத்துகிறது.

கல்கி: இவற்றைப் போக்க உங்கள் விடுதலை முன்னணி வேட்பாளர்களைத் தேர்தலில் போட்டியிடச் செய்து வெற்றி பெற்று அவர்கள் மூலம் குறைகளை எடுத்துச் சொல்லலாமே!

கெய்சிங்: அப்படி நாங்கள் வெற்றி பெற்று விடக் கூடாது என்பதற்காகத்தான் அரசு முன்பு ஐந்து சட்டமன்றத் தொகுதிகளாக இருந்த டார்ஜிலிங் பகுதியை நான்கு சட்டமன்றத் தொகுதியுள்ளதாகக் குறைத்திருக்கிறது. அதனால்தான் கூர்க்காக்கள் அதிகம் வசிக்காத இஸ்லாம்பூர், சோப்ரா போன்ற பகுதிகளை எங்கள் நலன் கருதி டார்ஜிலிங் பகுதியிலிருந்து நீக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் இப்போது சேர்த்துக் கொண்டிருக்கிறோம்.

கல்கி: உங்கள் கோரிக்கைகள் எந்த அளவுக்கு நியாயமானவை என்றாலும் அதை எடுத்துச் சொல்வதற்கு வன்முறையைத்தானா கையாள வேண்டும்?

கெய்சிங்: யார் சொன்னது, நாங்கள் வன்முறையாளர்கள் என்று? ஒரு ஜனநாயக நாட்டில் போராட்டத்திற்கான சிறந்த வழிமுறை சாத்வீகமான தேர்தல் பகிஷ்கரிப்புத் தான் என்று நாங்கள் உணர்ந்திருக்கிறோம். அதனால்தான் நாங்கள் கடந்த 68—லிருந்து இன்று வரை தேர்தல் பகிஷ்கரிப்பை எங்கள் போராட்ட நெறியாகக் கொண்டு பகிஷ்கரித்து வருகிறோம். வன்முறையில் நம்பிக்கை வைத்திருந்தால் இதைச் செய்வோமா?

கல்கி: நீங்கள் வன்முறையிலேயே ஈடுபடவில்லை என்கிறீர்களா?

கெய்சிங்: நிச்சயமாக இல்லை. வன்முறையை முழுமையாக எதிர்க்கும் முதல் ஆள் நான்தான். இங்கே நடக்கிற வன்முறைகளெல்லாம் மத்திய—மாநில அரசுகளின் தூண்டுதலால் அவற்றின் போலீஸார் நடத்துபவைகளே. நாங்கள் அவர்களின் வன்முறை நடவடிக்கைகளிலிருந்து தற்காத்துக் கொள்வதற்காகவே போராடுகிறோம்.

கல்கி: சரி, அப்படியே வைத்துக் கொண்டாலும் தற்காப்புக்கான ஆயுதங்களை நீங்கள் எங்கிருந்து பெறுகிறீர்கள்?

கெய்சிங்: ஆயுதங்களா, நாங்கள் பெறுகிறோமா! சுருக்கமாகச் சொல்லப் போனால் டார்ஜிலிங் பகுதியில் உற்பத்தியாகிற ஜி.ஐ. பைப்புகளைத் தவிர வேறு எந்த ஆயுதங்களையும் நாங்கள் அறியோம். அப்படி ஆயுதங்களை நாங்கள் வைத்திருந்தால் பன்னிரண்டு செவிட்டு ஊமை கூர்க்கா இளைஞர்களைத் தீவிரவாதிகள் என்று சொல்லி மத்திய ரிசர்வ் போலீஸார் சுட்டுக் கொன்றபோது நாங்கள் சும்மா இருந்திருப்போமா?

கல்கி: அப்படியானால் இங்கே குண்டு வைத்து வெடிக்கச் செய்பவர்கள் யார்?

கெய்சிங்: சந்தேகமென்ன, அரசாங்கம் தான்!

கல்கி: அரசாங்கமே அப்படிச் செய்ய வேண்டிய காரணம்?

கெய்சிங்: நீங்கள் இதை அரசாங்கத்திடம் தான் போய்க் கேட்க வேண்டும். எனக்கென்ன தெரியும்?

கல்கி: ஜோதிபாசு அரசுக்குத் தொல்லை தருவதற்காகத்தான் ராஜீவ் அரசு சிக்கிம் முதல்வர் பண்டாரி (இ. காங்கிரஸ்) மூலம் உங்களுக்கு நிதியுதவி செய்து உங்கள் போராட்டத்தை ஊக்கப்படுத்தி வருவதாகச் சொல்லப்படுகிறதே?

ஐம்பத்திரண்டு வயதாகும் சுபாஷ் கெய்சிங்கின் அப்பா ஒரு தேயிலைத் தோட்டத்தில் கண்காணிப்பாளராக இருந்தவர். அவர் பெயர் புத்திமான் கெய்சிங். தமது பதினாறாவது வயதிலேயே தமக்குப் பதினெட்டு வயது என்று பொய் சொல்லி ராணுவத்தில் சேர்ந்து விட்டார் கெய்சிங். ஆறு வருஷம் ராணுவப் பணியில் இருந்திருக்கிறார்.

தனி மாநிலக் கோரிக்கைப் போராட்டத்தை 1979—ல் ஆரம்பித்தார். 1980, ஏப்ரல் ஐந்தாம் நாள் கூர்க்கா தேசிய விடுதலை முன்னணியை நிறுவினார். மனைவி பெயர் பன்குமாரி சுபா. இரண்டு குழந்தைகள்.

கெய்சிங் மிகச் சிறந்த கவிஞர், நாவலாசிரியர். இருபதுக்கும் மேற்பட்ட நாவல்களை நேபாளி மொழியில் எழுதியிருக்கிறார். சமூக மனோதத்துவ விஷயங்கள்தான் இவர் நாவல்களுக்குக் கரு.

ஏழாவது படிக்கும் போதே கவிதை எழுதத் துவங்கி விட்ட கெய்சிங்கின் முதல் கவிதையின் தலைப்பு 'மாட்டோ'. இதன் பொருள் நிலம் (தாய் நாடு) என்பதாகும். யார் நிலத்தை இழக்கிறார்களோ, அவர்கள் எல்லாவற்றையுமே இழந்து விடுவார்கள் என்பதுதான் அந்தக் கவிதையின் சாரம்.



கெய்சிங்: அது சுத்தமான பொய். சிக்கிம் முதல்வருக்கும் எங்களுக்கும் ஒரு தொடர்பும் இல்லை. எங்களுக்கு நிதி வசதியும் ஒரு பிரச்னை அல்ல; எங்கள் மக்களிடையே சென்று கையை நீட்டினால் ஒரே நாளில் லட்சக்கணக்கில் வசூலாகும்.

கல்கி: உங்கள் போராட்டம் வங்காள மக்களுக்கே எதிரானதா? இதையேன் கேட்கிறோமென்றால் டார்ஜிலிங் மலைப் பகுதியிலிருந்து வங்காளிகள் வெறியேற வேண்டுமென்று ஓரிடத்தில் சுவரில் எழுதப்பட்டிருந்ததைக் கண்டோம்.

கெய்சிங்: மேற்கு வங்க அரசின் காலனி ஆதிக்க முறைக்குத்தான் நாங்கள் எதிரானவர்களே தவிர, வங்க மக்களின் எதிரிகள் அல்ல.

கல்கி: அரசாங்கம் உங்களைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்த போது, பேச்சு வார்த்தையை டெல்லியிலோ அல்லது பாட்னாவிலோ வைத்துக் கொண்டால்தான் வருவேனென்றும் கல்கத்தாவில் வைத்துக் கொண்டால் வரமாட்டேனென்றும் நீங்கள் கூறியதற்கு என்ன காரணம்? டெல்லியை விட, பாட்னாவை விட கல்கத்தாதானே வங்கத்தின் தலைநகர் என்ற முறையில் உங்களுக்கு மிகவும் நெருக்கமான நகரம்!

கெய்சிங்: என்னை ஓர் எதிரியாகப் பாவிக்கிற வங்க அரசின் தலைநகருக்கு நான் சென்றால் நான் பாதுகாப்பாகத் திரும்ப முடியாது என்கிற பயம்தான் காரணம். அங்கே சென்றால் மாநில அரசு என்னை என்ன வேண்டுமானாலும் செய்யலாம். என்னால் அதை முழுமையாக நம்ப முடியவில்லை.

கல்கி: மத்திய—மாநில அரசுகள் உங்களிடம் பேச்சு வார்த்தை நடத்தும் போது இந்திரஜித் என்ற பத்திரிகையாளர் உங்கள் கூடவே இருக்க வேண்டும் என்று பிடிவாதமாக இருக்கிறீர்களே, அதற்கு என்ன காரணம்?

கெய்சிங்: டெல்லியிலிருக்கும் எனது உண்மையான நண்பர் அவர்தான். அதனால்தான் அவர் என்னோடு இருக்க வேண்டும் என்பதில் குறியாய் இருக்கிறேனே தவிர வேறு காரணங்களால் அல்ல.

கல்கி: கடந்த ஜூனில் டெல்லியில் நடந்த முத்தரப்புப் பேச்சு வார்த்தைக்குப் பிறகு, இனியோர் ஒப்பந்தம் ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது. இனியாவது பிரச்னை ஓயுமா?

கெய்சிங்: மத்திய—மாநில அரசுகள் எங்களுக்கு என்ன தரப் போகின்றன என்பது தெரியவில்லை. 'மலை வளர்ச்சிக் கவுன்சில்' என்கின்றன. டார்ஜிலிங் பகுதி ஏற்கெனவே வளர்ச்சியடைந்த பகுதி. இந்நிலையில் 'வளர்ச்சிக் கவுன்சில்' என்கிற பெயர் எதற்கு? அதுவே முரண்பாடு. எங்களுக்குத் தேவை இந்தியக் குடியுரிமை பற்றிய கெஜெட் அறிவிப்பு. அதுதான் முக்கியம்.

கல்கி: ஆக, அது இல்லாத வரை ஒப்பந்தத்திற்கு ஒப்புக்கொள்ள மாட்டீர்களா?

கெய்சிங்: ஒப்பந்தத்தின் மூலம் அவர்கள் என்ன தரப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. என்ன தந்தாலும் அது எங்களுக்குச் சாதகமாக இருந்தால் அவசியம் ஏற்றுக் கொள்ளுவோம். ஆனால் அதனாலேயே எங்களின் லட்சியமான தனி மாநிலக் கோரிக்கையை விட்டு விட்டோம் என்று அர்த்தமாகி விடாது. எத்தனை ஒப்பந்தங்கள் வந்தாலும் தனி மாநிலம் ஒன்றுதான் எங்கள் லட்சியம். அதிலிருந்து நாங்கள் பின்

வாங்க மாட்டோம்.

கல்கி: உங்களின் இந்தத் தனி மாநில லட்சியம் பிறகு மெல்ல மெல்லத் தனி நாடு கோரிக்கையாகி விடுமோ?

கெய்சிங்: ஒருபோதும் ஆகாது. இந்திய அரசியல் சட்டத்திற்குட்பட்ட நிலையில் தான் எங்கள் கோரிக்கை இருக்கும். நாங்கள் எப்போதும் இந்தியர்களாக இருப்பதையே விரும்புகிறோம்.

கல்கி: முன்பு நீங்கள் நேபாள மன்னருக்கு எழுதிய கடிதத்தில் உங்களின் தனி நாடு கோரிக்கையை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டிருந்தீர்களாமே?

கெய்சிங்: அது சுத்தப் பொய்.

கல்கி: நீங்கள் கடிதமே எழுதவில்லையா?

கெய்சிங்: கடிதம் எழுதியது உண்மை. ஆனால் அது 1850-ம் ஆண்டு நேபாள மன்னர் ஆங்கிலேயருக்கு டார்ஜிலிங் பகுதியைத் தானமாகக் கொடுத்த விவரங்களைப் பற்றியதே தவிர, தனி நாடு கோரிக்கைக்கு ஆதரவு கேட்டு அல்ல.


கல்கி: உங்கள் இயக்கத்திலேயே உங்களுக்கு எதிர்ப்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறதே?

கெய்சிங்: இரண்டொருவர் அப்படி இருக்கலாம். ஆனால் ஒட்டுமொத்தமாக அனைவரும் என் தலைமையில் நம்பிக்கை வைத்து, இயக்கத்தை வழி நடத்திச் செல்லும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.

கல்கி: உங்கள் லட்சியமான தனி மாநிலக் கோரிக்கை என்பதே நீங்கள் சுலபமாக முதல்வராவதற்குத்தான் என்று சொல்லப்படுகிறதே?

கெய்சிங்: முதல்வர் பதவி என்பது எனக்குப் பெரிய விஷயமே அல்ல. நான் ஓர் எழுத்தாளன். தனி மாநில லட்சியம் நிறைவேறிய பிறகு அமைதியாக உட்கார்ந்து எழுதுவதையே விரும்புகிறேன்.

தொகுப்பு: **ப்ரியன்**



சமீபத்தில் நடந்த ஒரு சர்வதேச ஏலத்தில், ஒரு கிலோ சூப்பர் தரமான டார்ஜிலிங் டீ இரண்டாயிரத்து எழுநூறு ரூபாய்க்கு விலை போனது என்றால், அதன் மணம், சுவையை நாம் உணர்ந்து கொள்ளலாம். டார்ஜிலிங்கில் விளையும் டீக்கு உலக மார்க்கெட்டில் அத்தனை கிராக்கி.

1823-ம் ஆண்டிலேயே வியாபார நோக்கம் கொண்ட பலர் இந்திய டீயின் பெருமையை உணர்ந்து கொண்டு, இந்தியாவை மொய்க்க ஆரம்பித்து விட்டனரென்றாலும் 1839-ம் ஆண்டில்தான் வியாபார ரீதியாய் இந்திய நாட்டின் டீ, எட்டுப் பெட்டிகளில் 'பாக்' செய்யப்பட்டு, கிழக்கிந்தியக் கம்பெனியால் லண்டனுக்கு அனுப்பப்பட்டு, அங்கே ஏலம் விடப்பட்டது.

உலகிலேயே, வேறு எந்த நாட்டுத் தேயிலையையும் விட, இந்தியத் தேயிலை தான் தரத்திலும், மணத்திலும், சுவையிலும் நெம்பர்-ஒன் என்று சந்தேகத்துக்கிடமின்றி நிரூபணமாகியது: அதன் காரணமாய், மனிதனின் அன்றாட வாழ்க்கையில் டீ ஓர் அங்கமாகியது.

இந்திய டீயின் மகத்துவத்துக்கான காரணம் என்ன? டீயின் தரத்துக்குத் தேயிலைப் பயிர் விளையும் மண், தோட்ட அமைப்பு, மழையளவு, மலையின் சரிவு அமைப்பு போன்ற பல விஷயங்களும் காரணம். இந்தியாவின் பல பகுதிகளிலும் தேயிலை விளைந்தாலும், **'World famous trinitea'** என்று சிறப்பாய்ச் " சொல்லப்படுவது மூன்று இடங்களில் விளைவதுதான். அவை: டார்ஜிலிங், அஸ்ஸாம், நீலகிரி. இவை மூன்றிலும் கூட, டார்ஜிலிங் டீக்குத் தான் **Champagne of teas** என்கிற சிறப்புத் தகுதியுண்டு. இதன் ரகசியம் என்ன தெரியுமா? ஒரே தோட்டத்தின் தேயிலையிலிருந்து 'டீ' தயாரிக்காமல், ஒரே பகுதியில் உள்ள பல்வேறு தோட்டங்களிலுமிருந்தும் தேயிலையைப் பறித்து, ஒன்றாய்க் கலந்து தயாரிக்கப்படுவதுதான்.


கொசுறாய்ப் பலருக்கும் தெரியாத செய்தி! உலகில் முதன் முதலாய் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய டென்சிங்கும், ஹில்லாரியும் எவரெஸ்டின் உச்சியை அடைந்து கொடி நாட்டியதும் செய்த முதல் காரியம் சூடாய் ஒரு கப் டார்ஜிலிங் டீ சாப்பிட்டதுதான்.

— மௌலஷ்மி

* **மேகக் கூட்டங்கள் சூழ.... டார்ஜிலிங் தேயிலைத் தோட்டம்.**







Kurl-on

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 1988-முடிவு

நடுவர்கள்:

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி நடுவர்களின் கூட்டம் 17.7.88 அன்று ஏகமனதாகப் பின்வரும் சிறுகதைகளைப் பரிசுக்குரியனவாகத் தேர்ந்தெடுத்தது.

ரூ. 1500 முதல் பரிசு:

"சங்கரன்"

எழுதியவர்: பிரபாகர்,
(சத்தியப்பிரியன்),
கர்நாடகா பேங்க்,
செவ்வாய்ப்பேட்டை,
சேலம் — 2.

ரூ. 750 இரண்டாம் பரிசு:

"புதிய சுவடுகள்"

எழுதியவர்: கே. பி. ஜனார்த்தனன்,
மோகன பவனம்,
159, சிதம்பரநகர்,
நாகர்கோவில் — 2.

ரூ. 375 மூன்றாம் பரிசு (இரு கதைகளுக்கு):

"திறப்பு விழா"


எழுதியவர்: தமிழினியன்,
C/2/628, குடியிருப்புப் பகுதி,
பாய்லர் தொழிற்சாலை,
திருச்சி — 14.

"தன்மான உணர்வு"

எழுதியவர்: கசி கோபாலகிருஷ்ணன்,
மணவாளக்குறிச்சி,
— 629 252.

பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளின் விவரம் அடுத்த இதழில்...




எஸ். வி. கிருஷ்ணமூர்த்தி
தலைமை ஆசிரியர், ஹிந்து.


பிரபஞ்சன்


விமலா ரமணி


மு. மேத்தா

படங்கள்: யோகா.


உன் பிறந்த தினம்.. மெழுகு வத்தியை ஊதி அணைடா கண்ணு!
ஆஹா! கொழந்தெ என்னு அழகு! மொழு மொழுன்னு! என்னமா சிரிக்கிறான்!
இந்திய இலங்கை ஒப்பந்தம்
முதலாண்டு நிறைவு
தேர்தல்
தமிழ் மக்கள்
சமையல்காரர் சமைச்சதை அவர் பரிமாற 6 மாசம் போல சாப்பிடு! அப்புறமா தான் உன் கல்யாணப் பேச்சு!
என்யா, நீயே ஒரு டாக்டர். அந்தம்மாவுக்கு ரெண்டு வாரம் ஓய்வு போதுமா? ரெண்டு மாசம் என்றே?. ரெண்டு வருஷமே ஓய்வு கொடுக்கணும்! அவங்க ஆரோக்யத்துலே உமக்கு இதான் அக்கறையா?



ஸ்ரீ
கல்கி

1988 ஆகஸ்ட் 7
மலர் 47 இதழ் 1
விபவ ஆடி 23



பயிரை மேயும் வேலிகள்

தமிழ் நாட்டிலும் குஜராத்திலும் இரு வேறு காரணங்களுக்காகப் போலீஸ் துறை அவப்பெயரைத் தேடிக் கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டில் ஆட்டோ சங்கரின் திருவிளையாடல்கள் விஷயத்தில் போலீஸ் அதிகாரிகள் கவனக்குறைவாக இருந்திருந்தால் கூடப் பொறுத்துக் கொள்ளலாம்; துணை நின்றிருக்கிறார்கள் என்பது அதிர்ச்சியையும் போலீஸ் துறை பற்றிய அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியிருக்கிறது. இந்த அவப் பெயர் உருவாகக் காரணமாயிருந்த போலீஸ் அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டால் மட்டும் போதாது; போலீஸ் துறையின் கௌரவம் திரும்பவும் நிலைநாட்டப்படும் வகையில் அவர்கள் — கான்ஸ்டபிள் முதல் ஐ.ஜி. வரை — வருங்காலத்தில் அரும்பாடு பட்டு உழைக்க வேண்டும்.

ஆட்டோ சங்கர் விவகாரத்தில் போலீஸ் துறையை மட்டும் நாம் குறை கூறிப் பயனில்லை. ஆட்சியில் உள்ளவர்கள் — மந்திரிகளும் ஆளும் கட்சி எம்.எல்.ஏக்களும் ஒழுக்கமற்றவர்களாக நடந்து கொள்ளும் போது, அந்தக் களமை போலீஸ் அதிகாரிகள் சிலரையும் தொற்றிக் கொள்வதில் வியப்பில்லை. எனவே தரமான வேட்பாளர்களைத் தேர்தலில் நிறுத்தாத கட்சித் தலைமையையும் அவர்களுக்குக் கடமை, கண்ணியம் உணர்த்திக் கட்டுப்பாட்டுக்குள் வைக்காத ஆட்சித் தலைமையையும் நாம் அதிகமாகக் குறை கூறவேண்டியிருக்கிறது.

குஜராத்தில் நிலைமை வேறு. அங்கே போலீஸ்காரர்கள் பல காலமாகவே யூனியன் அமைத்துக் கொண்டு ஆட்சிக்கு எதிராக அவ்வப்போது கிளர்ச்சி செய்தும் வருகின்றனர். ஒரு போலீஸ்காரர் ஒரு கிளர்ச்சிக் கும்பலின் கரங்களில் சிக்கி மடிந்தார் என்பதற்காக, மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் குஜராத் போலீஸ் படையினர் வெகுண்டெழுந்து, ஊரைக் கொளுத்தி, உடைமைகளைச் சூறையாடினர். தற்போது மறுபடியும் வேலை நிறுத்தம் என்று தொடங்கி அதன் வெளிப்பாடாக, பயங்கரமான வன்முறைகளில் இறங்கிய போலீஸாரை அடக்க ராணுவம் அழைக்கப்பட வேண்டிய நிலை உருவாயிற்று.

தேசிய தினங்களில் குஜராத் போலீஸார் தனிப்பட்ட முறையில் கொடி ஏற்றினார்கள் என்பதும், ராஜீவின் தண்டி யாத்திரையைக் கேலி செய்யும் விதமாகத் தாங்களும் யாத்திரை போனார்கள் என்பதும், கலகக்காரர்களை ஒடுக்க பஞ்சாபுக்கு அனுப்பப்பட்ட போது போக மறுத்தார்கள் என்பதும் அதிர்ச்சி தரும் செய்திகள். இத்தகைய ஒழுங்கீனங்கள் முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும். இல்லையெனில் நாடளாவிய முறையிலேயே பேராபயங்களுக்கு அடிகோலும்.

போலீஸார் சங்கம் அமைத்துக் கொள்ளவும் அதன் வாயிலாகத் தங்கள் குறைகளை எடுத்துக் கூறவும் சட்டமே வழி வகுத்துத் தந்துள்ளது. ஆனால் அச் சங்கம் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட சங்கமாக இருக்க வேண்டும் என்பதோடு வன்முறை வேலை நிறுத்தங்களைத் தூண்டி விடவும் கூடாது. குஜராத் போலீஸார் தங்கள் சங்கத்தை ஒரு தொழிற் சங்கம் போலப் பாவித்து, வேலை நிறுத்தம் செய்ததும் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டதும் மன்னிக்க முடியாத குற்றங்களே.

ஆனால் இதற்கும் மறுபுறம் உண்டு. போலீஸார் வன்முறைப் பாதைக்குத் திரும்ப யத்தனிக்கு முன்னரே அவர்களுடைய நியாயமான குறைகளை அனுதாபத்துடன் கவனித்து ஆட்சியில் உள்ளவர்கள் நிவாரணம் அளிக்க வேண்டும். கவனிக்காமலிருந்து, முற்ற விட்டுப் பிறகு, 'வேலியே பயிரை மேய்கிறது' என்று குற்றம் சாட்டுவதில் பயனில்லை. போலீஸ் துறை பற்றி மத்தியிலும் மாநிலங்களிலும் பலப்பல கமிஷன்கள் அமைத்தாகி விட்டது. அறிக்கைகள் தூசு போர்த்திக் கொண்டு உறங்குகின்றன. ஒரு நெருக்கடியில் கமிஷன் அமைப்பதும் பின்னர் மறப்பதும் அரசுக்கு வாடிக்கையாகி விட்டது.

ஆக, இரு தரப்பினருக்கும் இன்று கடமைகளை உணர்த்தும் பயிற்சி தேவைப்படுகிறது. ஒரு சந்தர்ப்பத்தில் மட்டுமே மக்கள் மீது ஆளுமை செலுத்தி அவர்களை அடக்கி ஒடுக்கவும், ஆனால் எப்போதுமே மக்களுக்குத் தன்னலமின்றிப் பணியாற்றவும் போலீஸ் துறைக்கு மட்டுமல்ல, ஆட்சிக்கு வரும் எம்.எல்.ஏக்கள், அமைச்சர்களுக்கும் பயிற்சி தரவேண்டிய அவசியம் இருக்கிறது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

உங்கள் குழந்தைக்கு
அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்



திட உணவின் தொடக்கத்திலிருந்தே

உங்கள் குழந்தைக்கு நான்காம் மாதத்திலிருந்தே பாலோடு திட உணவும் தேவை. அப்போது ஸெரிலாக் அனுகூலம் அளியுங்கள்.

போஷாக்கு அனுகூலம்: ஒவ்வொரு முறை ஸெரிலாக் ஊட்டும் போதும், புரதச்சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின், மற்றும் தாதுப் பொருட்கள் ஆகிய எல்லா போஷாக்குச் சத்துக்களும் சரியான விகிதத்தில் உங்கள் குழந்தைக்குக் கிடைக்கிறது.

சுவை அனுகூலம்: ஸெரிலாக் சுவையில் குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை.

தயாரிப்பதில் அனுகூலம்: ஸெரிலாக் ஏற்கனவே பதமாக்கப்பட்டது; பாலும் சர்க்கரையும் கலந்தது. காய்ச்சி ஆறிய நீரில் கலந்தாலே போதும்.

தேர்ந்தெடுக்க அனுகூலம்: இப்போது ஸெரிலாக், மூன்று வெவ்வேறு வகைகளில்!

சுகாதாரமான முறையில் தயாரிக்கவும், சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும் டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.



6 மாதங்களிலிருந்து

4 மாதங்களிலிருந்து

6 மாதங்களிலிருந்து

இலவசம்
ஸெரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: ஸெரிலாக்,
தபால் பெட்டி எண். 3
புது தில்லி-110008

Nestlé

ஸெரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை

RK SWAMY/ZSL/5112/TAM



துப்பறியும்
சூர்யா — கிரண்
நவின் பிரதாப் முல்லிக்
மாலை நாலு மணி. போலீஸ் கமிஷனர் ஜோஷிக்குக் கவலை தரும் செய்தி கிடைத்தது.
துபாயிலிருந்து ஃபோன்.
கள்ளக்கடத்தல் மன்னன் கல்தான் துபாயில் இருக்கிறான். வங்கியிலிருந்து எல்லாப் பணத்தையும் வாங்கி விட்டான்!
கமிஷனர் ஜோஷி திகைத்தார்.
இது எப்படி சாத்தியம்?
கல்தான் மத்திய சிறைச்சாலையில் நம் காவலில் இருக்கிறான். துபாய்க்கு அவன் எப்படிப் போனான்?
ஜோஷி மத்திய சிறைச்சாலைக்கு ஃபோன் பண்ணினார்......
© INDIAN FEATURES SYNDICATE BOMBAY-400 092
போலீஸ் கமிஷனர் ஜோஷி பேசறேன். கல்தான் அங்கே காவலில் இருக்கானா?
ஃபோனில் பதில்...
இருக்கான் ஸார், அவனை சர்வ ஜாக்கிரதையா காவல் காக்கிறோம்.
ஜோஷி யோசித்தார்......
ஒரே மனிதன் இரு இடங்களில் ஒரே சமயத்தில் எப்படி இருக்க முடியும்?
1

(தொடரும்)

வங்கமொழிக் கதை:

"அம்மா, அம்மா... நான் சித்தி வீட்டிற்குப் போகட்டுமா?''

''போகிறாளாம் சித்தி வீட்டுக்கு. பெரிய மனுஷி! உனக்கு யாரடி சித்தி? ஒரு வாய்ச் சோற்றுக்கு ஆலாய்ப் பறக்கிறோம். என்றாவது ஏனென்று கேட்டாளா, அவள்?'' — முற்றத்து வெயிலில் கால்களை நீட்டிக் கொண்டு பழைய சோற்றை உருட்டி வாயில் போட்டுக் கொண்டிருந்த விதவைத் தாய் சீறினாள்.

தாயின் முதுகில் சாய்ந்து அவள் தோள்களைப் பற்றியவாறு கெஞ்சினாள், ''அம்மா, நானும் தமாலீதலா போகிறேன் அம்மா! தனஹரிமண்டல்பாபு போகிறார். இரண்டே நாட்கள்தான். அறுவடைப் பண்டிகையானதும் வந்து விடுகிறேன்.''


பெண் கெஞ்சியதும் ஆதுரியின் மனம் இளகி விட்டது. துயரத்துடன் வானத்தை ஏறிட்டுப் பார்த்தவாறே, ''ஆரி வீட்டில் ஒரு குறைவும் இல்லை. ஐப்பசியில் அறுவடைத் தானியம் வீட்டுக்கு வந்துவிடும். வாய்க்காலிலும் தண்ணீர் நிறைந்துவிடும். இந்தப் பாழாய்ப் போன வறட்சியெல்லாம் அங்கில்லை...'' என்றாள்.

சிருணியின் மனம் வேறொரு கவலையில் ஆழ்ந்திருந்தது. இந்தப் பழைய, கிழிந்த கவுனைப் போட்டுக் கொண்டு சித்தி வீட்டிற்கு எப்படிப் போவது? இரண்டு வருஷங்களுக்கு முன், துர்க்கா பூஜையின் போது அம்மா எவ்வளவோ சிரமப்பட்டு வாங்கிக் கொடுத்தது. இப்பொழுது உடம்பை மறைக்கவே போதவில்லை. அவள் வளர்ந்து விட்டாள். இனி சிற்றாடை கட்டிக் கொண்டால் தான் பொருத்தமாக இருக்கும். பாவம், சிற்றாடை வாங்க அம்மா எங்கே போவாள்! சிருணி கெகிகத்தாள், ''அம்மா, உன் புடைவையைத் தாம்மா! அதைக் கட்டிக் கொண்டு போகிறேன்.''

ஆதுரி சிரித்தாள். அது என்ன? பெட்டியில் பூட்டிப் பத்திரப் படுத்திவிருக்கும் சேலையா என்ன? அவளது ஒரே ஒரு மாற்றுப்புடைவை. வயலிலும்வரப்பிலும்வேலை செய்துவிட்டுச் சேறும் சகதியுமாய் வீட்டுக்கு வந்ததும் உடலைக் கழுவிக் கொண்டு, மாற்றுத் துணியாக அதைச் சுற்றிக் கொள்ளுவாள். மகள் கெஞ்சியதும், நெடுமூச்செறிந்தவளாய், ''சரி! உன் இஷ்டம்; கட்டிக் கொள். அந்தக் கவுனையும் சுருட்டி எடுத்துக் கொள். சித்தியிடம் சோப்பு சோடா மாவு வாங்கி நன்றாய்த் துவைத்து வைத்துக் கொள்,'' என்றாள்.

அவள் கூறி முடிப்பதற்குள் சுருணி ஓடி விட்டாள்.

அம்மாவின் அந்தக் கலர்ப் புடவையைச் சுற்றிக் கொண்டு தயங்கியவாறே சுருணி வெளியே வந்ததும் ஆதுரி திகைத்துப் போனாள். தன் பெண்ணையே அவளுக்கு அடையாளம் தெரியவில்லை. எவ்வளவு பெரியவளாக வளர்ந்து விட்டாள்! அவளது அழகையும் மதர்த்து நின்ற இளமையையும் கண்டு அவளுக்கே கூச்சமாக இருந்தது. இரண்டு, மூன்று பேர் சுருணியைப் பெண்



கேட்டு வந்தனர். ஒரு சிலர் பணம் கூடக் கொடுப்பதாகச் சொன்னார்கள். அவள் எதையும் காதில் போட்டுக் கொள்ள வில்லை. அவளுக்கு இருப்பதெல்லாம் இந்த ஒரே பெண். நன்றாகத் தீர ஆலோசித்து ஒரு நல்ல குடும்பத்தில்தான் தன் பெண்ணை ஒப்படைக்கப் போகிறாள். தமாலீதலாவில் நல்ல வசதியான குடும்பத்தில் வாழ்க்கைப் பட்டதனால்தானே இன்று அவள் தங்கை இரண்டு வேளையும் கூடச் சுட அரிசிச் சோறு சாப்பிட முடிகிறது. இதைவிட மனிதர்களுக்கு வேறென்ன வேண்டும்? நண்டுக் குழம்பையும், ஒரு வாய்ச் சோற்றையும் சாப்பிட்டே இத்தனை அழகுடன் இருக்கும் இந்தப் பெண் நல்ல சாப்பாடும் வசதியும் கிடைத்தால் தளதளவென்று தங்கச்சிலை போல எப்படியாகி விடுவாள்... என்றெல்லாம் நினைத்த ஆதுரி, "அடி... பெண்ணே! இந்த மூஞ்சியுடனா சித்தி வீட்டிற்குப் போவாய்...? முகத்தை அலம்பிக் கொண்டு..." என்று கூறி முடிப்பதற்குள் சுருணி சிட்டாய்ப் பறந்து விட்டாள்.

தனஹரி மண்டல் இதற்குள் வயல்களைத் தாண்டிப் போயிருப்பாரோ என்ற கவலை அவளுக்கு. தமாலீதலா அப்படியொன்றும் அருகிலில்லை. ஒன்பது காத தூரம்-போக வேண்டும். வயல் வரப்புகளிடையே, குறுக்குப் பாதையில் நடந்தால் இரண்டொரு காத தூரம் குறையலாம்.

சிட்டுப் போல் பறக்கும் பெண்ணை இடிந்த சமையல் அறையிலிருந்து எச்சில் கையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் ஆதுரி. ஒரு கணம் மனம் திக்திக்கென்றது. இளம் பெண்ணை — வேற்று மனிதனுடன் இப்படித் தனியே அனுப்பலாமா? இது சரியா? என நினைத்தது மனம். மறுகணம் அவளது பயம் சட்டென விலகியது. தனஹரி மண்டல்பாபு வயதானவர். தலை நரைத்து விட்டது. பருமனான, தொளதொளத்த உடம்பு. நிதானமாகத்தான் நடக்க முடியும். முன் வரிசையில் இரண்டு பற்கள் விழுந்து விட்டன. வீடு, வாசல், தோட்டம் துரவு, லேவாதேவி — எல்லாம் உண்டு. குழந்தை குட்டியில்லை. சுருணிக்கு— அப்பா மாதிரி, எனத் தனக்குள் கூறிக் கொண்டாள். ஆழ்ந்த பெருமூச்செறிந்தவாறே — போகட்டும்! கொஞ்ச நாட்களாவது அரிசிச் சோற்றைக் கண்ணால் பார்க்கலாம் அல்லவா? சாப்பிட்டு வரட்டும் என நினைத்தாள். இந்த நினைப்பு அவளுக்கு லேசான மகிழ்ச்சியையும் தந்தது.

தமக்குப் பின்னால் தப்தப் என்று காலடி ஓசை கேட்ட மண்டல் திரும்பிப் பார்த்தார். சிருணி ஓடிவந்து கொண்டிருந்தாள்.

"நீ சித்தி வீட்டிற்குப் போகிறாயா? நிஜமாகவா!" என்று கேட்டார் மண்டல்.

"ஆமாம்" என்று குனிந்த தலையுடன் சொன்னாள் சிருணி.

"சரி வா, போகலாம். இரண்டு பேர் பேசிக் கொண்டே போனால் வழி நடக்கும் சிரமமே தெரியாது" என்றார் மண்டல். இருவரும் நடந்தனர்.

"மண்டல்பாபு! இப்படி எங்கே போகிறீர்கள்?" மாட்டு மந்தையை விரட்டிக் கொண்டு வந்த ஒருவன் நின்று விசாரித்தான். "யாருங்க ஐயா, அது? புதுசாக் கல்யாணம் செய்துக்கிட்டீங்களா?" என்றான்.

மண்டல், சிருணியைப் பார்த்துச் சிரித்தார் — பிறகு அந்த இடையனை நோக்கிப் "போடா, நீ ஒருத்தன்; குறும்புக்காரப் பயல்! எங்க ஊருப் பொண்ணு. பேத்தி மாதிரி..." என்றார் மண்டல்.

சிருணியின் முகம் ஜிவுஜிவு என்று சிவந்தது.

"சொல்லுகிறவன் சொல்லிவிட்டுப் போகிறான் விடு. சொன்னதால் என்ன ஆகி விடப் போகிறது?"

அவனுக்குக் கண்ணில்லையா என்ன? சிருணி சீறினாள்: "அம்மாவிடம் சொல்கிறேன்."

மண்டல் அவள் கரத்தை எட்டிப் பிடித்தார். வளையல்கள் கலகலத்தன.

"அவனிடம் சண்டை போட உன் அம்மா இவ்வளவு தூரம் வரப் போகிறாளா? நட நட..." — மண்டல் ஏதேதோ கூறி அவளைச் சமாதானப்படுத்தினார்.

"ஹரிப்பூர் தாண்டியதும் ஹரிண்மாரா அணைக்கட்டு வரும். அங்கிருந்து தமாலீதலா மூன்று காத தூரம்தான். அங்கே ஏதாவதொரு மரத்தடியில் உட்கார்ந்து, வெல்லமும் பொரியும் சாப்பிடலாம். குடிக்க நல்ல நீர் கிடைக்கும்" என்றார்.

அணை தூரத்தில் தெரிந்தது: அணையின் இருபுறமும் காடுகள் மண்டிக் கிடந்தன. புற்களும் புதர்களுமாய் ஒரே பசுமை. சலசலத்தோடிய நீரில் மீன்கள் நீந்தி விளையாடின. கண்களுக்கெட்டிய வரையில் நாரைகள் கூட்டம் கூட்டமாய்ப் பறந்து கொண்டிருந்தன. சிருணிக்கு அந்த இடம் மிகவும் பிடித்தது. மனித சந்தடியேயில்லை. அம்மாவை அழைத்து வந்திருந்தால் ஆற்றிலிருந்து எவ்வளவு மீன் பிடித்திருக்கலாம் என நினைத்தாள். இந்த இடத்திலிருந்தால் ஏழ்மை விடிந்துவிடும். மீன், பச்சைக் கீரை, காய்கறிகள், தானியங்கள்... 'ஊர் திரும்பியதும் ஹரிணமாரா நீர்த்தேக்கத்தைப் பற்றி அம்மாவிடம் நிறையச் சொல்ல வேண்டும்' என நினைத்தாள்.

"ஏய், சிருணி, ஏன் பேசவில்லை? என்ன ஆயிற்று!" என்று கேட்டவாறே அவளை நெருங்கினார் மண்டல்.

"என்னைச் சிருணி என்று கூப்பிடாதீர்கள். என்பெயர் சாவித்திரி" என்றாள் அவள்.

"சாவித்திரி, நல்ல பெயர்..." எனத் தமக்குள் கூறிக்கொண்டே பிடிப்புகையை உள்ளே இழுத்துக் கொண்டார் மண்டல்.



இதன் பின் அந்த அணைக்குஹரின்மாரா என்ற பெயர் எப்படி வந்தது என்ற கதையைக் கூறிக் கொண்டே நடந்தார் மண்டல். அவர் ஏன் தன் தோளில் கை வைத்துக் கொண்டிருக்கிறார் என்பது சிருணிக்குப் புரியவில்லை. கதை கேட்கும் சுவாரஸ்யத்தை விடப் பசி அவளை மிகவும் வாட்டியது. மரத்தடியில் உட்கார்ந்து சாப்பிடலாம் என மண்டல் கூறி இருந்தார். அந்த மரம் எப்பொழுது வருமென்று அவள் மனம் எதிர்பார்த்தது. இந்த எதிர்பார்ப்பில் கால்களை இழுத்து நடந்து கொண்டிருந்தாள்.

''சிருணி, இது ரொம்ப மர்மமான இடம். எப்பொழுது யார் எந்த உருவத்தில் எதிர்ப்படுவார்கள் என்று கூற முடியாது. ஒரு சமயம் நான் இந்த வழியில் போய்க் கொண்டிருந்த போது, ஓர் இளம் பெண் எனக்கு முன்னால் போவது தெரிந்தது. நல்ல நிலா வீசியது. நான் வேகமாய் நடந்து அவளைப் பிடிக்க முயன்றேன். ஆனால் முடியவில்லை.''

சிருணிக்குச் சிரிப்பு வந்தது. குளிர் காற்றில் உதடுகள் வறண்டு பிரிய மறுத்தன. பசியுடன் நடந்து வந்த களைப்பும் அவள் முகத்தில் தெளிவாகத் தெரிந்தது. மண்டலின் கரம் தோளில் அழுந்தவே, அவள் கூவினாள்: ''மண்டல் பாபு.''

மண்டல் பரபரத்தார். ''சிருணி, முழுக் கதையையும் கேளேன்! அந்தப் பெண்ணின் பின்னால் ஓடினேனா, எப்படியோ இரு கையாலும் அவளைக் கெட்டியாகப் பிடித்து விட்டேன்...'' என்றவாறே கையிலிருந்த செருப்பையும், தடியையும் விடாமல் சிருணியை இரு கரங்களாலும் சேர்த்துப் பிடிக்கவே, அவள் திணறிப் போனாள். சிரித்துக் கொண்டே தமது பிடியைத் தளர்த்திய மண்டல், ''நான் இப்படி இறுகப் பிடித்ததும் அந்தப் பெண் மாயமாய் மறைந்து போய் விட்டாள்'' என்றார்.

மண்டலின் பிடியிலிருந்து விடுபட்ட சிருணி விடுவிடுவென்று முன்னே நடக்கலானாள்.

''ஏய், சிருணி! கொஞ்சம் நில். இனி உன்னை சாவித்திரி என்றே கூப்பிடட்டுமா?'' என்ற மண்டல் தொடர்ந்து சென்றார்: ''நீ பின்னால் ஓடி வந்தாய் அல்லவா! ஒரு நிமிடம் எனக்கு உன்னை அடையாளமே தெரியவில்லை...'' தனஹரி மண்டல் குரலைத் தாழ்த்திக் கொண்டார். ''சொத்தும் சுகமும் வசதியும் நிறைந்த வீடுகளில் உன்னை மாதிரி பெண்களைப் பார்க்க முடியும். கூலி விவசாயி வீட்டில் இப்படியொரு தங்கச் சிலையை எங்கே தேடுவது? நானும் எத்தனையோ பார்த்திருக்கிறேன். பளிச்சிடும் வெயிலில் புடமிட்ட பொன் தகதகக்கும் போது கிழவனின் கண்ணே கூசிப் போகிறது! இந்த ஏகாந்தமான இடத்தில் நான் பார்த்துக் கொண்டிருப்பது மானிடப் பெண்ணா! தேவதையா! ஒன்றுமே புரியவில்லை — சிருணி... பகலில் எங்கேயாவது நிலா வீசுமா?'' — மண்டல் தலையை ஆட்டிக் கொண்டே போனார்.

சிருணி கலவரமடைந்தாள் — ''மண்டல் பாபு! ஏனிப்படிப் பேசுகிறீர்கள்? எனக்குப் பயமாக இருக்கிறது!'' என்றாள்.

''பயமா! என்ன பயம்? சாவித்திரி?'' என்றவாறே பெருமூச்செறிந்த மண்டல், ''வா... அதோ அந்த மரத்தடியில் உட்கார்ந்து சாப்பிடலாம். பசிக்கிறது. உனக்குப் பசிக்கவில்லையா?'' என்றார்.

சிருணி தீனமான குரலில், ''பசிக்கிறது'' என்றாள்.

''காலையில் என்ன சாப்பிட்டாய்?''

''பழையது!''

நாற்புறமும் பசுமையும், தனிமையும் இயற்கையின் எழிலும் மனத்தைக் கவர்ந்தன. ''எத்தனை அழகான இடம்!'' என்ற மண்டல், காலை நீட்டிக் கொண்டு சுகமாக இளைப்பாற அமரும் முன், தடியையும், செருப்பையும் பத்திரமாக ஓரிடத்தில் வைத்துக் கொண்டார். மேல் துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டவர் பையைத் திறந்து பொட்டலத்தை வெளியே எடுத்தார். சிருணியை நோக்கி, ''வா! வந்து உட்கார்! ஏன் நிற்கிறாய்? இரண்டு பேருமாய்ச் சாப்பிடலாம்'' என்றார்.

சிருணி தலைப்பை விரித்து நீட்டினாள்.

''பைத்தியக்காரப் பெண்ணே!'' எனச் சிரித்தார் மண்டல். ''நாமிருவரும் வழித் துணையாக ஒரே இடத்திற்குத்தான் போகிறோம், வா... ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடலாம்.''

பொட்டலத்தைத் திறந்ததும் பொன்னிறமான வெல்லக் கட்டிகளையும் வெள்ளை வெளேரென்ற, நீள நீளமான பொரியையும் கண்டதும் சிருணிக்கு நாவில் உண்மையாகவே, நீர் ஊறியது. ''மண்டல் பாபு! இந்தத் தலைப்பிலே போடுங்கள்'' என்றாள் மீண்டும்.

மண்டல் அதைக் காதில் போட்டுக் கொள்ளாதவராய் வளையல் அணிந்த அவள் கரங்களைப் பற்றி இழுத்தார்.


''அரே அரே... இதென்ன! ஒன்றாகச் சாப்பிடுவதால் ஜாதி ஒன்றும் போய் விடாது. யாருமே இல்லாத இந்த இடத்தில் ஜாதியாவது ஒன்றாவது! வா... வா... சாப்பிடு. வயிறு நிரம்பச் சாப்பிடு...''

வெல்லத்தைப் பிட்டு வாயில் போட்டுக் கொண்ட சிருணி அதன் இனிப்பில் திருப்தி அடைந்தவளாய், நன்றி பொங்கும் விழிகளால் மண்டலை ஏறிட்டு நோக்கினாள்.

மண்டல் அவள் தோளைப் பற்றித் தன்னருகில் இழுத்தார். ''வா! ஏன் அருகில் வர மாட்டேன் என்கிறாய்? கிட்ட வந்து உட்கார்ந்து சாப்பிடு.''

சிருணி அந்தத் தொளதொளத்த பருத்த உடலின் அருகே வந்தமர்ந்து கொண்டாள். மண்டலின் கரம் அவளது தோளிலிருந்து மெல்ல மெல்லக் கீழே இறங்கியது. தமது செய்கையிலிருந்து அவளது கவனத்தைத் திருப்ப வேண்டி அவளைச் சாப்பிடும்படி உபசரித்துக் கொண்டிருந்தார்.

''அரே சாவி! நீ என்ன அழகு! நான்



போயே போச்சு!



வலியும் வேதனையும் மாயமாய் மறைகின்றன!

பத்து இயற்கை மூலப்பொருட்களின் இதம் தரும் கலவை- இதுவே அமிர்தாஞ்சன். 90 ஆண்டுகளுக்கும் மேலாக மக்களின் பரிபூரண நம்பிக்கைக்குப் பாத்திரமானது.

தலைவலி, உடல்வலி, சுளுக்கு — எதுவாக இருந்தாலும் லேசாகத் தேய்த்தாலே போதும். நீங்கள் உணரும் முன்னரே உங்கள் வலியும் வேதனையும் மறைந்தே போய்விடும்!

அமிர்தாஞ்சன்

மீண்டும் புன்னகை மலரச் செய்கிறது
— விரைவாக!

அமிர்தாஞ்சன் லிமிடெட்

OBM 624 TM



''இன்னும் உங்க மனநிலை பாதிக்கப் படாம இருக்கிறது ஆச்சர்யம்தான்!''

''எதனால் அப்படிச் சொல்றீங்க?''

''எல்லாக் கட்சிப் பொதுக் கூட்டத் துக்கும் தவறாம போறதாச் சொல்றீங் களே...!''

— மணியன் தர்மலிங்கம்.

கிழவனாக இல்லாமலிருந்தால் இத்தனை நேரத்தில் உன்னைத் தூக்கிக் கொண்டு ஓடி யிருப்பேன்!'' என்று கூறியதும் சிருணி விருட் டென்று எழுந்து நீர்த் தேக்கத்தை நோக்கி ஓடினாள். கரையோரமாக அமர்ந்து குளிர்ந்த நீரை அள்ளி அள்ளிப் பருகிய வள் தன் மீது நிழல் படர்வது கண்டு திரும் பிப் பார்த்தால் மண்டல். அவரும் அவள் பக்கத்தில் அமர்ந்து நீரை அள்ளிப் பருகி னார்.

சிருணி எழுந்து நின்றாள். திடீரென தன் வயது கூடிவிட்டது போல், தான் பெரியவ ளாகி விட்டதுபோல் அவளுக்குத் தோன் றியது. சித்தி வீட்டு முற்றத்தில் அமர்ந்து, கமகமவென்று மணம் வீசும் புது அரிசிப் பொங்கலை ஆற அமர உட்கார்ந்து சாப் பிடும் முன்னரே, அம்மாவின் அந்தப் புடை வையில் சிறுமியான அவள் பெரிய பெண் ணாகி விட்டாளா!

திடீரென மண்டல் அவள் கரத்தைப் பற் றித் தம்பால் இழுத்து அணைத்தார்.

சிருணி அவர் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றாள். அவள் உள்ளம் பரிதாபமாக ஓலமிட்டது. ''வேண் டாம், பாபு... விடுங்கள் — என்னை விட்டு விடு....' விடு....'' என்று கதறினாள், தவித் தாள்; திமிறினாள்.

''**வி**டுடா அயோக்கியப் பயலே!''

திடீரென ஆண்மைமிக்க ஒரு குரல் ஒலித்தது.

நீர் திரையிட்ட விழிகளுடன் சிருணி திரும்பிப் பார்த்தாள்.

கருத்த வாட்ட சாட்டமான உருவம். இடுப்பிலே மட்டும் கை அகலத் துணி. கரத்திலே வெட்டரிவாள். தலையிலே பெரியதொரு புல் கட்டு. அரிவாளால் முது கைச் சொறிந்தவாறே அவன் கர்ஜித்தான். ''கிழவா! அயோக்கியப் பதரே! உன்னைத் துண்டு துண்டாக வெட்டி இந்த ஆற்றில் எறிந்து விடுவேன். புரிந்ததா?''

இதற்குள் மண்டலின் பிடியிலிருந்து தப்பிய சிருணி தன் புடைவையைச் சரி செய்து கொள்ளலானாள்.

மண்டல் ஒரு நிமிடம் எதுவும் பேச வில்லை. பின்னர், ''இவள் — இவள் எனக் குப் பேத்தி முறையாக் வேண்டும். சும்மா இருவரும் சிரித்துப் பேசிக் கொண்டிருந் தோம். வேறொன்றுமில்லை — இதில் உனக் கென்ன வந்தது?'' என்றார்.

''வாயை மூடுடா! கிழவா!... எந்த ஊர் நீ?''

''குலூரடி—'' என்றவாறே செருப்பில் காலை நுழைத்துக் கொண்ட மண்டல் தன் தைரியத்தைத் திரட்டிக் கொண்டு — இந்த மிரட்டலை எல்லாம் வைத்துக் கொள் ளாதே! என் மைத்துனன் யார் தெரியுமா! தமால்தலாவில் வனமாலி — என்றார்.

அவ்விளைஞன் அவர் கூறியதைச் சற்றும் பொருட்படுத்தாதவனாய் சிருணியை நோக்கி, ''ஏனம்மா! இந்தக் கிழட்டு அயோக்கியப் பயலோடு ஏன் வந்தாய்?'' என்றான்.

சிருணி விம்மினாள். ''நான் தமால்தலா விற்குப் போகிறேன். என் சித்தி வீட்டிற்கு. அதனால் இவருடன் வந்தேன்....''

இளைஞன் இடைமறித்தான். ''தமால்தலா வில் உன் சித்தியிருக்கிறாளா? உன் சித்தப் பாவின் பெயரென்ன?''

கண்களைத் துடைத்துக் கொண்ட சிருணி ''பிருந்தாவன்'' என்றாள்.

''பிருந்தாவனா! அவரை எனக்குத் தெரி யும். இனி நீ இந்தக் கயவனுடன் போகாதே! தமால்தலா போக வேண்டுமென்றால் என் னுடன் வா! நான் அதன் பக்கத்து கிராமம் கட்டாவிலிருக்கிறேன்.''

''வருகிறேன் — என விம்மல்களுக் கிடையே கூறிய சிருணி, அவனைப் பின் தொடர்ந்தாள்.

தலையில் சுமையுடன் நடக்கும் அவனைப் பார்க்கும் போது இறந்து போன தன் அப்பாவின் நினைவு அவளுக்கு வந்தது. 'நீ என் அப்பா.... செத்துப் போன என் அப்பா நீ...' என்று மனத்திற்குள் கூறிக் கொண்ட சிருணி சிட்டுக்குருவி போல் அவன் பின்னால் பறந்தோடினாள். சித்தி வீட்டில் அறுவடையாகி வந்திருக்கும் புது நெல்லின் புது அரிசிப் பொங்கல் அவள் கண்முன்னே விரிந்தது. முற்றத்தில் அமர்ந்து மணக்க மணக்க அப் புது அரிசிச் சோற்றை அவள் சாப்பிட வேண்டுமல்லவா! அப்பா.... எப்படி கும்மென்று மணக் கும் அது!

நன்றி: **சமாகலின் பாரதீய சாகித்திய**

தமிழில்: **சரஸ்வதி ராம்னாத்.**



daCunha/GCM/147/88/TAM

இமயத்தின் மடியில் இரண்டு நாட்கள்

மன்னும் இமயமலை எங்கள் மலையே... என்று மகாகவி பாரதி நெஞ்சு சிலிர்த்துப் பாடினானே, அந்த இமயமலையின் மடியில் இருப்பதுதான் டார்ஜிலிங் நகரம். இமயமலைத் தொடரின் அடிவாரம் துவங்கும் இடமான சிலுகுரியிலிருந்து சுமார் தொண்ணூறு கி. மீட்டருக்கு வளைந்து வளைந்து டார்ஜிலிங் செல்லும் அந்த மலைப் பாதையில் செல்லுவதே ஓர் ஆனந்தம்!

நாங்கள் சென்ற டூரிஸ்ட் டாக்ஸி அந்த மலைப் பாதையில் ஏற ஆரம்பித்தவுடனேயே ஏதோவோர் ஆயுர்வேத மருந்துக் கடைக்குள் நுழைந்து விட்ட மாதிரி ஒரு வாசனை! அந்த அளவுக்கு அங்கே பல்வேறு விதமான மூலிகைகளும் மண்டிக் கிடக்கின்றன என்றார்கள்.

ஊட்டி, கொடைக்கானல் போன்ற இடங்களுக்குச் செல்லும் மலைப்பாதைகளில் அத்தி பூத்த மாதிரி அபூர்வமாய்த் தென்படும் இரண்டொரு குட்டி அருவிகளைக் கண்டே குதூகலிக்கும் நம் மனம், அங்கு அடிக்கொரு தரம் வெள்ளிக் குழம்புகளாய்க் குதித்துக் குதித்து ஓடிவரும் அருவிகளைக் கண்டு அடிக்கும் கொம்மாளத்திற்குக் கேட்கவே தேவையில்லை.

மலைப் பாதையில் டாக்ஸி ஏற ஏற மேகக் கூட்டங்கள் நம்மோடு கண்ணாமூச்சி விளையாட ஆரம்பித்து விடுகின்றன. சில்லென்ற காற்று வந்து நம் காதோடு ரகசியம் பேசுகிறது. சில சமயங்களில் அந்தப் பொல்லாத் மேகக் கூட்டங்கள் நம்மை முழுவதுமாக வந்து மூடிக் கண்களைக் கட்டிவிட்டது போல், மேலே ஓர் அடி தூரத்திற்குக் கூடப் பார்க்க முடியாமல் செய்து விடுகின்றன.

இவற்றையெல்லாம் அனுபவிக்கும் போது, நாம்போய்க்கொண்டிருப்பது டார்ஜிலிங்குக்குத்தான் என்பதும் டாக்ஸியில்தான் சென்று கொண்டிருக்கிறோம் என்பதும் ஒரு கணம் மறந்துபோய்விடுகிறது. நாம்செல்லும் அந்த டாக்ஸி தேவதச்சன் செய்த ரதம் போலவும், அதன் டிரைவர் தேவலோகத்துக்கு நம்மை அழைத்துச் செல்ல வந்த சாரதி போலவும் ஓர் உணர்வு! அந்த உணர்வுடனேயே டார்ஜிலிங் வந்து சேர்ந்தோம்.

* டார்ஜிலிங் நகரம் ஒரு காட்சி......



நாங்கள் வந்து சேர்ந்த உடனேயே, "யு டோன்ட் வொர்ரி. திஸ் ஈஸ் நாட் ஜனவரி!" என்று 'பொளந்து' கட்டும் ஆங்கிலத்துடன் வந்து சேர்ந்தார் டூரிஸ்ட் கைடு நவீன்.

"ஜனவரியாக இருந்தால் மட்டும் நாங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?" என்றோம்.

"ஆமாம் சார். நீங்கள் ஜனவரியில் கவலைப்படத்தான் வேண்டும். ஏனெனில் அப்போது இங்கே கடும் குளிர். இரவு நேர வெப்ப நிலை ஒன்றரை டிகிரி அளவுக்குக் குறைந்துவிடும். மத்தியான வேளையில் கூட ஒன்பது டிகிரியைத் தாண்டாது. அப்படியிருந்தால் நீங்கள் கவலைப்பட்டுத்தானே ஆக வேண்டும்! இப்போது அப்படியில்லை. மழைக்காலம் என்பதால் பகல் நேர வெப்ப நிலை பதினைந்து டிகிரி அளவுக்கு உயர்ந்து விட்டது. எனவே நீங்கள் உடல் நலம் பற்றிய கவலையின்றி எல்லா இடங்களையும் சுற்றிப் பார்க்கலாமே! நாளைக் காலையில் நானே உங்களை வந்து அழைத்துச் சென்று எல்லா இடங்களையும் சுற்றிக் காட்டுகிறேன்.

"அதிகாலை நான்கு மணிக்கே அனைவரும் தயாராக இருங்கள். சூரிய உதயத்தின் போது அந்தக் கதிர்கள் கஞ்சன் ஜங்கா, எவ



ரெஸ்ட் போன்ற பனி மூடிய சிகரங்களில் பட்டுத் தெறிக்கும் அழகே அழகு. அப்போது அவை பனி மூடிய சிகரங்களாகத் தெரியாது; ஏதோ அனைத்தும் தங்கத் தகடுகளால் மூடப்பட்டிருப்பது போல் பளபளக்கும். அப்போது ஏற்படும் நிறப்பிரிகைகளால் அங்கங்கே பற்பல வானவில்கள் தோன்றி, ஏதோ நாமெல்லாம் இந்திர லோகத்தில் இருப்பது போல் பிரமிக்க வைக்கும்...'' என்று எங்களது ஆசைகளைத் தூண்டி விட்டுச் சென்றார் அந்த கைடு.

அவர் சொன்ன மாதிரியானதோர் இந்திர ஜாலக் காட்சியைத் தவறவிட்டு விட முடியுமா? எனவே நாங்கள் இரவில் அயர்ந்து தூங்கி விட்டால் எங்கே அந்த அற்புதக் காட்சியை இழந்து விடுவோமோ என்று சரியாகக் கூடத் தூங்காமல் அந்த அதிகாலைக் காகக் காத்திருந்தோம்.

அந்த அதிகாலையும் வந்தது. கைடும் வந்து ஜீப்பில் எங்களை அழைத்துச் சென்றார். போகும் வழியில் ஒரு வீட்டைக் காட்டி, ''இதுதான் சார் எவரெஸ்ட் சிகரம் ஏறிய டென்சிங்கின் வீடு. அவர் செத்துப் போன போது துக்கம் விசாரிக்க இங்கு ஹில்லாரி கூட வந்திருந்தார்... இதுதான் 'பட்டாஸியா லூப்' என்று சொல்லப்படும் அதிவளைவான மலைப்பாதை. இங்குதான் 'ஆராதனா' இந்திப் படம் எடுத்தார்கள்...'' என்று சொல்லிக் கொண்டே போனார்.

கடைசியாக எங்கள் ஜீப் மிகமிகச் செங்குத்தான உயரத்தில் திணறித் திணறி ஏறி ஓரிடத்திற்கு வந்து சேர்ந்ததும், ''இதுதான் 'டைகர் ஹில்' என்று சொல்லப்படும் இடம். டார்ஜிலிங்கில் இதுதான் உயரமான இடம். கடல் மட்டத்திலிருந்து சுமார் ஒன்பதாயிரம் அடி. இதோ... இங்கே வாருங்கள். எவரெஸ்டையும் கஞ்சன் ஜங்காவையும் காட்டுகிறேன்... வந்தீர்களா? எங்கே அனைவருமாகச் சேர்ந்து இந்தப் பக்கம் பார்த்து ஊதுங்கள்...'' என்றார்.



• டார்ஜிலிங் நகர சடையில்....

அனைவரும் தம் பிடித்துக் கொண்டு ஊதினோம்.

பிறகு அந்த கைடு இன்னொரு பக்கம் போய் நின்று கொண்டு, ''எங்கே... இங்கேயும் வந்து ஊதுங்கள் பார்க்கலாம்!'' என்றார்.

அனைவரும் வெகு சிரத்தையாக அவர் சொன்ன அந்த இடத்திலும் போய் நின்று கொண்டு ஊதினோம்.

''இன்னும் கொஞ்சம் தம் பிடித்து ஊதுங்கள் சார்...'' என்றார் அவர்.

நாங்களும் மறுபடியும் தம் பிடித்துக் கொண்டு முன்பு போலவே ஊதினோம்.

''என்ன ஊதி என்ன சார் பிரயோஜனம்? உங்களால் சுற்றியிருக்கும் மேகக் கூட்டத்தை ஊதி விலக்க முடியவில்லையே! மேகங்கள் விலகாமல் எப்படி சிகரங்களைப் பார்ப்பது? இந்தப் பக்கம்தான் கஞ்சன் ஜங்கா... இந்தப் பக்கம்தான் எவரெஸ்ட். மேகங்கள் மட்டும் இல்லாமலிருந்தால் அனைத்தும் பளிச்சென்று தெரியும். என்ன செய்வது உங்களுக்குக் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்...!'' என்றார் படு காஷுவலாக.

சொல்ல முடியாத ஏமாற்றத்தோடு அனைவரும் திரும்பினோம்.

வரும் வழியில் பௌத்த மடாலயம் ஒன்று. அதற்குள் மிகப் பெரிய அளவில் அமைதியே வடிவான புத்தரின் திருவுருவச் சிலை. அன்போடு நம்மை ஆசீர்வதிக்கும் பௌத்த பிட்சுக்கள். அப்படிப்பட்ட பிட்சுக்கள் ஆவதற்காகப் புத்தரின் போதனையைக் கற்றுக் கொண்டிருக்கும் பால்வடியும் முகத்தோடு கூடிய பால பிட்சுக்கள்... மனத்திற்கு இதமாக இருந்த காட்சிகள்.

அந்த சாந்த மனத்துடனேயே இன்னோர் இடத்தில் இருக்கும் ஆவாதேவி என்ற பெண்மணி வைத்திருக்கும் ஆர்ட் காலரிக்கு வந்தோம். உள்ளே சென்று பார்த்ததும் பிரமித்துப் போய்விட்டோம் என்பதுதான் உண்மை.

ஆம்; ஆண் பெண் உருவங்களையும் முக பாவனைகளையும் அப்படியே நூற்றுக்கு நூறு சித்திரித்துக் காட்டும் படங்கள். அவையெல்லாம் ஏதோ வர்ணக் கலவைகளால்



• ஆவாதேவி



• வேலையின்றித் தவிக்கும் போர்ட்டர்கள்...

வரையப்பட்ட உருவங்களல்ல; அத்தனையும் கறுப்புத் துணிகளைப் பின்னணியாகக் கொண்டு பல்வேறு வண்ண நூல்களால் எம்ப்ராய்டரி செய்யப்பட்ட உருவங்கள். உளியைக் கொண்டுதான் உயிர்ச் சிற்பங்களைப் படைக்க முடியும் என்பதில்லை; வெறும் ஊசியைக் கொண்டே உயிர் ஓவியங்களைப் படைக்கலாம் என்பதற்கு வங்காளப் பெண்மணியான திருமதி ஆவாதேவி ஓர் எடுத்துக் காட்டு.

கடைசியாக, 'ரோப் வே' ஆரம்பிக்கும் இடத்திற்கு அழைத்துக் கொண்டு வந்தார் கைடு. "இந்தியாவிலேயே முதன் முதலில் டூரிஸ்ட்டுகளுக்காக இரண்டு மலைகளை இணைத்துப் போடப்பட்ட ரோப்வே இது தான் சார். இதன் நீளம் எட்டு கி. மீ. மழைக் காலமாதலால் இப்போது ரோப்வே மூடப் பட்டு விட்டது. சீசனில் வந்தால் இதில் பயணம் செய்யலாம். ரோப் வேயில் செல்லும் போது கீழே தெரியும் உலகப் புகழ் பெற்ற டார்ஜிலிங் தேயிலைத் தோட்டங்களையும் அங்கங்கே, இமய மலைச் சாரல்களில் மட்டுமே வளர்ந்து பூத்துக் குலுங்கும் ஆயிரக்கணக்கான வண்ண வண்ண மலர்களின் வகைகளையும் பார்க்கப் பார்க்க ரம்மியமாய் இருக்கும். அவசியம் நீங்கள் சீசனில் (ஏப்ரல், மே மற்றும் அக்டோபர், நவம்பர்) வாருங்கள். அப்போது இந்த மேகக்கூட்டங்களின் தொந்தரவும் மழையின் தொந்தரவும் இருக்காது. இப்போது போக முடியாத இடங்களையும் அப்போது அழைத்துச் சென்று காட்டுகிறேன். சூரிய உதயத்தின் போதான அந்த வர்ண ஜாலச் சிகரங்களையும் கண்டிப்பாய்ப் பார்க்கலாம். இப்போதைக்கு நேபாளத்திலுள்ள பசுபதிநாதர் கோயிலைப் போலவே கட்டப் பட்டுள்ள திர்தாம் கோயிலோடு (சிவன் கோயில்) நமது சுற்றுப் பயணத்தை முடித்துக் கொள்வோம்..." என்றார் கைடு.

டார்ஜிலிங் உலகப் புகழ்பெற்ற மலை வாசஸ்தலம். ஆனால் இன்றைய நிலையில் இமயத்தின் மடியில் இருக்கும் டார்ஜிலிங்கின் போதையூட்டும் அந்த அழகும் கம்பீரமும் அந்தப் பிரதேசத்தின் ஒரு பக்க முகமே. மறுபக்க முகம் ரொம்பவும் இருண்டு போய்க் கிடக்கிறது. அந்த இருட்டுக்குக் காரணம்,



• பாலபிட்சு

கெய்சிங்கின் கூர்க்காலாந்துக் கோரிக்கையும் அதனாலான கலாட்டாக்களும்தான்.

ஆம்; முன்பெல்லாம் நாள் தோறும் ஆயிரக்கணக்கில் டார்ஜிலிங் வந்து கொண்டிருந்த டூரிஸ்டுகளின் எண்ணிக்கை கூர்க்காலாந்துக் கலாட்டாக்களினால் கடந்த இரண்டாண்டுகளுக்கு மேலாகவே ஜீரோவாகி விட்டது. அதனால் டார்ஜிலிங் செல்லும் ரயில்களும் ரத்து செய்யப்பட்டு இரண்டாண்டுகளுக்கு மேலாகி விட்டன. ரயில் தண்டவாளங்களெல்லாம் புல்மூடிக் கிடக்கிறது. எனவே, நானூறுக்கும் மேற்பட்ட ஹோட்டல்களைக் கொண்ட டார்ஜிலிங்கில் இப்போது வெறும் ஆறேழு ஹோட்டல்களே திறந்திருக்கும் நிலை!

அவ்வப்போது அங்கே சென்று வரும் பத்திரிகையாளர்கள் சிலரைத் தவிர வேறு டூரிஸ்டுகளே இல்லையென்பதால் டூரிஸ்ட் ஜீப் ஓட்டுவோரும், சுமை தூக்குவோரும் வேலையின்றி நாட்கணக்கில் பட்டினி கிடக்கும் அவலம். வேலையில்லையே, எப்படிக் குடும்பத்தைக் காப்பாற்றுவது என்ற கவலை

...லேயே ஒரு ஜீப் டிரைவருக்குப் பைத்தியம் பிடித்துப்போய் விட்டதாகச் சொன்ன போது நெஞ்சு கனத்தது.

இத்தனை கஷ்டத்திலும் டார்ஜிலிங்கிலுள்ள அந்தத் தொழிலாளர்கள் தன்மானம் இழக்காதவர்கள் என்பதற்கு ஓர் உதாரணம், நாங்கள் ஹோட்டல் ரூமைக் காலி செய்து கொண்டு புறப்படத் தயாரான போது வந்த ஒரு போர்ட்டர்.

''சார், எனக்கு வேலை கிடைத்துப் பல நாட்கள் ஆகிவிட்டன. பட்டினி கிடக்கிறோம். நீங்களாவது உங்கள் லக்கேஜ்களைத் தூக்கிவரக் கூலி கொடுத்து உதவுங்கள்...'' என்றார் அவர்.

''ஆளுக்கொரு பெட்டியைத் தவிர எங்களிடம் வேறு லக்கேஜ்கள் ஏதும் இல்லை. அதனால் போர்ட்டரும் எங்களுக்கு அவசியமில்லை. இருந்தாலும் உங்களுக்கு உதவுகிற வகையில் நாங்கள் பணம் தருகிறோம். பெற்றுக் கொள்ளுங்கள்...'' என்று கொடுத்தோம்.

அதற்கு அவர், ''சார், என்னைப் பிச்சைக்காரனென்றா நினைத்து விட்டீர்கள். வேலை செய்யாமல் பணம் வாங்குவதும் பிச்சையெடுப்பதும் ஒன்றுதான். உங்கள் பணம் எனக்குத் தேவையில்லை; நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்...'' என்று முகத்திலடித்தாற்போல் பதில் சொல்லிவிட்டுச் சென்று விட்டார்.

அவருடைய தன்மான உணர்வைக் கண்டு நாங்கள் அசந்துபோய் விட்டோம். இந்தத் தன்மான உணர்வைத்தான் கெய்சிங் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு பாரத அரசுக்கு மட்டுமின்றி அந்த வட்டார மக்களுக்கே கூடப் பிரச்னைகளைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கிறார்!

— இளங்கோவன்

மேலட்டை வண்ணப்படங்கள், மற்றும் மேற்கு வங்கம் தொடர்பான புகைப் படங்கள்: கே. வி. ஆனந்த்.

தம்பி தங்கக் கம்பி

இதுதான் கதை என்று எதையோ ஒன்றைப் பிடித்துக் கொண்டார்கள். குழந்தை காமிக்ஸ் போல அங்கங்கே திடீர்ச் சண்டை, திடீர்த் திருப்பம், திடீர்ப் பாட்டு. திடீர்ப் பாட்டு என்றதும் ஞாபகம் வருகிறது, கூடலூர் (நீலகிரி) எஸ்டேட்டில் இருப்பவர்கள் பீச்சில் நனைந்து கொண்டே ஒரு டூயட்! நீலகிரியில் ஏது பீச் என்று கேட்போரே, இது தமிழ் சினிமா. பீச்சும் இருக்கும், பாலைவனமும் இருக்கும்.

தங்கக் கம்பி விஜய்காந்த். வழக்கமான இருமல் அம்மா, கல்யாணத் தங்கைக்கு நடுவே பாசம், நேசம், வீரம் நிறைந்த நாயகன். சிவந்த கண்கள், கலைத்துப் போட்ட தலை, முரட்டு வசனம், பல்டியடிக்கும் சண்டைகள் — விஜய் சார், திகட்ட ஆரம்பித்து விட்டது.

வில்லன் பட்டறையில் நம்பியாரும், மலேஷியா வாசுதேவனும் பக்க வாத்தியங்களாக இருந்து ஜொலிக்கும் அளவிற்குக் கூட ராதாரவி முயற்சி செய்யவில்லை.


பாடல்களில் மனத்தில் நிற்பது 'காதல் பொல்லாதது.' மற்றவை மனத்தில் நில்லாதது.

கதையைப் பற்றிக் கொஞ்சமே கொஞ்சம்: ஏழைகளை ஏமாற்றி நிலத்தைப் பறித்துக் கொள்ளும் பெரிய பணக்காரனை, வஞ்சிக்கப்பட்ட பையன் வளர்ந்து பழி வாங்குவது தான் கதை. (மறுபடியுமா?) சில கிளைக் கதைகளால் சுவாரஸ்யம் கூட்டியிருக்கிறார்கள்.

வில்லன் ராதாரவி ஏகப்பட்ட படைகள் வைத்திருக்கிறார். குதிரைப் படை, ஜீப் படை. கடைசியில் ஹெலிகாப்டர் படை. யம்மோய்!

சென்சார் வெட்டி விட்டார்களோ, இல்லை இவர்களே சில காட்சிகளை எடுக்க மறந்து விட்டார்களோ — கதை அங்கங்கே கங்காரு வேலை செய்கிறது.

— ஜெயமன்மதன்





* தாகூர்:

வாழக்கற்றுத்தரும் பல்கலைக் கழகம்

கல்வி என்பது ஒரு தொழில் அல்லது உத்தியோகத்தைத் தேடிக் கொண்ட, ஒரு தனிச் சலுகை பெற்றுவிட்ட மக்களை உருவாக்கி சாதாரண மக்களிடமிருந்து அவர்களைப் பிரித்து வைக்கிற ஒரு விஷயமாக இருக்கக் கூடாது. மாறாக ஒருவன் கற்கும் கல்வி என்பது அவனுக்கு மட்டுமல்லாமல் சுற்றியிருக்கிற சாதாரண மக்களையும் உயர்த்துவதாக இருக்க வேண்டும்; அவர்களுக்கு அன்றாடம் உதவுவதாக இருக்க வேண்டும்.

மேலும் கல்வி கற்கும் மாணவர்கள் எவ்வளவு சுதந்திரத்தோடு இருக்க முடியுமோ அவ்வளவு சுதந்திரத்தோடு இருக்க வேண்டும். கல்விக்கூடம் என்பது அவரவரின் புத்திசாலித்தனத்தை வளர்த்து விடுவதாக இருக்க வேண்டுமே தவிர, ஒரு குறிப்பிட்ட பாடத்திட்டத்தைக் கொண்டு போய் அவரவரின் சொந்த விருப்பத்திற்கு மாறாகத் திணித்துச் சித்திரவதை செய்வதாய் இருக்கக் கூடாது.

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலுள்ள உறவு என்பது வெறும் பாடத்திட்டங்களுக்குள் மட்டுமே சிக்குண்டு கட்டுப்பட்டுப் பயமுறுத்துவதாக இல்லாமல், வாழ்க்கையின் எல்லாப் பிரச்னைகளுக்கும் வழிகாட்டுகிற ஒரு தோழமையாக இருக்க வேண்டும்.

— இப்படிப்பட்ட தமது லட்சியங்களை உள்ளடக்கித்தான் 1901 — இல் சாந்தினிகேதனை ஆரம்பித்தார் கவி ரவீந்திரநாத் தாகூர். அப்போது நான்கைந்து குழந்தைகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட சிறு பள்ளி, இப்போது மூவாயிரம் மாணவ மாணவியருக்கு மேல் படிக்கும் விஸ்வ பாரதி பல்கலைக் கழகமாக வளர்ந்திருக்கிறது.

அமைதியான சூழ்நிலையில் அமைந்திருக்கும் சாந்தினிகேதனுக்கு நாங்கள் சென்றோம். அங்கு பேராசிரியராக இருக்கும் சுப்ரமண்யம் அதன் செயல்பாடுகளை விளக்கினார்...

"எல். கே. ஜி.யிலிருந்து டாக்டர் பட்டத்திற்கு ஆராய்ச்சி செய்வது வரை எங்கும் ஒரே காம்பவுண்டுக்குள் கிடையாது. இங்குதான் அந்த வசதி உண்டு. அதே மாதிரி எல். கே. ஜி. யிலிருந்து ஆராய்ச்சிப் படிப்பு வரை எல்லா மாணவ, மாணவியரும் மரத்தடிகளில்தான் உட்கார்ந்து படிக்கிறார்கள். இது இயற்கையை நேசிக்கக் கற்றுக் கொடுக்கிறது.

"பட்டப் படிப்பு படிக்கிற மாணவ, மாணவியர் சுற்றுப்புறக் கிராமங்களிலுள்ள மக்களோடும் தொழிலாளர் — விவசாயிகளோடும் நேரடித் தொடர்பு கொண்டுள்ளனர். அவர்களின் பிரச்னைகளைத் தீர்க்க உதவுகின்றனர். அவர்களுக்குக் கைத்தொழில்களைக் கற்றுத் தந்து அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பாடுபடுகின்றனர். மற்ற பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சமூக சேவை என்பது வெறும் பொழுது போக்காகவோ அல்லது எப்போதாவது போய்ச் செய்யும் ஒரு செயலாகவோதான் இருக்கும். இங்கோ அது அன்றாடம் படிக்கும் ஒரு பாடம்!

"முன்பெல்லாம் இங்கு படிக்கும் மாணவ, மாணவியருக்குத் தேர்வு என்பதே கிடையாது. குறிப்பிட்ட காலம் வரை படித்தால் அந்தப் படிப்பில் அனைவரும் பட்டம் பெற்றதாகவே கருதப்பட்டுப் பட்டம் கொடுக்கப்பட்டுவிடும். ஆனால் இது 51 — இல் மத்திய பல்கலைக் கழகமானதிலிருந்து அப்படியில்லை. தேர்வுகள் உண்டு. இருந்தாலும் பட்டமளிப்பு விழா என்பது மற்ற இடங்களைப் போல் கவுனெல்லாம் போட்டு ஆடம்பரமாக நடத்தப்படும் விழா அல்ல. இப்போதும் முன்பு போலவே மிக எளிமையாக 'சப்தபரணி' (சப்தபரணி என்பது ஒரு



* மரத்தடியில் நடக்கும் வகுப்பு...

மரம். அதன் ஒவ்வொரு கொத்திலும் ஏழு இலைகள் இருக்கும். அதை மாணவரிடம் கொடுத்தால் அம்மாணவர் பட்டம் பெற்ற தாக அர்த்தம்.) கொடுக்கும் நிகழ்ச்சியாகவே கொண்டாடப்படுகிறது.

''மேலும் இங்கு படிக்கும் மாணவ மாணவியர் மதியம் வரைதான் குறிப்பிட்ட பாடங்களைப் படிப்பார்கள். மதியத்திற்குப் பிறகு அவரவர் சொந்த விருப்பங்களுக்கு ஏற்ப பெயிண்டிங், சிற்பம், கைத்தொழில் என்று எதை வேண்டுமானாலும் செய்வார்கள். விவசாயப் படிப்புக்கென்று ஸ்ரீநிகேதன் என்று தனிப் பிரிவே இருக்கிறது. அதுவும் சுற்றுப்புறத்திலுள்ள விவசாயிகளோடு அன்றாடமும் நேரடித் தொடர்பு கொண்ட படிப்புத்தான்...'' என்றவரை இடைமறித்து ''ரவீந்திரர் எந்த லட்சியத்திற்காக இதை ஆரம்பித்தாரோ அந்த லட்சியம் இப்போது முழுக்க முழுக்கக் கடைப்பிடிக்கப்படுகிறதா?'' என்று கேட்டோம்.

''நூற்றுக்கு நூறு அப்படியே கடைப்பிடிக்கப்படுகிறது என்று அடித்துச் சொல்ல முடியாது. அப்படியானால் இங்கு இப்போது தேர்வு முறையே வந்திருக்க முடியாதே! இருந்தாலும் இங்கு படிக்கும் மாணவ, மாணவியர் வேறு எங்கு படிப்பவரைக் காட்டிலும் எளிமையும் மனித நேயமும் உலகளாவிய பார்வையும் கொண்டவர்களாகவே வெளியேறுகிறார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமே இல்லை...'' என்றார்.

சாந்தினிகேதனைச் சுற்றிப் பார்த்தோம். ரவீந்திரர் வாழ்ந்த வீடுகளையும் அவர் உபயோகித்த கார், வாங்கிய நோபல் பரிசு உட்படப் பல பரிசுகள்... என்று எல்லாவற்றையும் பார்த்தோம். (ரவீந்திரருக்குத் தாம் வசிக்கும் வீட்டிலிருந்து பார்த்தால் நாலா பக்கமும் தொடுவானம் தெரிய வேண்டும். அப்போதுதான் அவருக்குத் திருப்தி. அதற்காகவே அவர் சாந்தினிகேதனுக்குள் மூன்று வீடுகளில் மாறி மாறி வசித்திருக்கிறார்!)

எந்தப் பக்கம் போனாலும் அமைதி... அமைதி... அமைதிதான். மாணவ மாணவியர் இருக்கும் அரவமே இல்லை. இந்த அமைதியே அதன் மாபெரும் வெற்றி.

திரும்பி வரும்போது சாந்தினிகேதன் மாணவர்களுக்குக் கூட ஒரு குறை இருக்கக் கூடும் என்று தோன்றியது. அது விடுமுறையின் சுதந்திரத்தை அவர்களால் அனுபவிக்க முடியாமல் இருப்பதுதான்! ஒவ்வொரு நாளுமே அவர்கள் சுதந்திரப் பறவையாக வாழ்கிறார்கள். அந்தச் சுதந்திரமே அவர்களுக்குப் பொறுப்புணர்வையும் ஊட்டி விடுகிறது!

— பிரின்ஸ்



* மாலையில் அவரவர் விருப்பப்படி......



பூர்வ கதை

இராஜ ராஜ சோழன் என்று சரித்திரப் புகழ் பெற்ற அருள்மொழிவர்மன் இளம் பிராயத்தில் இலங்கையில் நடந்த போருக்குச் சென்றிருந்தான். அவனுடைய தந்தை சுந்தர சோழ சக்கரவர்த்தி தஞ்சையில் நோய்வாய்ப் பட்டுப் படுத்த படுக்கையாயிருந்தார். அவனுடைய தமையனும் பட்டத்து இளவரசனுமான ஆதித்த கரிகாலன் காஞ்சியில் வடதிசைச் சேநாதிபதியாக இருந்து வந்தான். இவன் வீராதி வீரன். மிக இளம் வயதில் மதுரை வீர பாண்டியனைப் போரில் கொன்று, 'வீர பாண்டியன் தலை கொண்ட கோப்பர கேசரி' என்ற பட்டம் பெற்றவன்.

சுந்தர சோழரின் பெரிய தந்தை கண்டராதித்த சோழரின் குமாரன் மதுராந்தகன் இளம் பிராயத்தில் சிவபக்தியில் ஈடுபட்டிருந்தான். பிறகு உடைய தூண்டுதலினால் அவனுக்குச் சோழ சிம்மாசனம் ஏற வேண்டும் என்ற ஆசை உண்டாகி விட்டது. அவனுடைய கட்சியைப் பழுவேட்டரையர்கள், கடம்பூர் சம்புவரையர்கள் முதலான சோழ நாட்டுச் சிற்றரசர்களும் பெருந்தர அதிகாரிகளும் ஆதரித்தார்கள்.

இலங்கைப் போரில் சோழ சைன்யங்கள் பெரும் வெற்றி அடைந்தன. அநுராதபுரம் என்னும் பிரசித்தமான இலங்கைத் தலைநகரைக் கைப்பற்றின. இலங்கை அரசன் மகிந்தன் மலைநாட்டுக்குள் ஓடி ஒளிந்தான். அருள்மொழிவர்மன் அநுராதபுரத்தில் இடிந்து தகர்ந்திருந்த புத்த விஹாரங்களைப் புதுப்பித்துக் கட்டினான். இதனால் மகிழ்ச்சி அடைந்த புத்த குருமார்கள் அருள்மொழிவர்மனுக்கு இலங்கைச் சிங்காதனத்தை அளிக்க முன் வந்தார்கள். அதை ஏற்றுக் கொள்ள இளவரசன் இணங்கவில்லை.

அருள்மொழி வர்மனை உடனே தாய் நாட்டுக்கு வந்து சேரும்படி இரண்டு இடத்திலிருந்து செய்திகள் வந்தன. ஆதித்த கரிகாலன் அவனைக் கையோடு காஞ்சிக்கு அழைத்து வரும்படி தன் நண்பனான பார்த்திபேந்திரனை அனுப்பியிருந்தான். சுந்தர சோழரின் செல்வப் புதல்வியும் சோழ நாட்டில் செல்வாக்கு மிகுந்த சீமாட்டியுமான குந்தவைப் பிராட்டி அருள்மொழி வர்மனைப் பழையாறைக்கு அழைத்து வருவதற்கு வந்தியத்தேவன் என்னும் வாணர் குலத்து வீர வாலிபனை அனுப்பியிருந்தாள்.

இதற்கிடையில் பழுவேட்டரையர்கள் இளவரசன் அருள்மொழிவர்மன் இலங்கைச் சிம்மாதனத்தைக் கவர எண்ணியதாகக் குற்றம் சாட்டி அவனைச் சிறைப்படுத்திக் கொண்டுவர இரண்டு கப்பல்களையும் அவை நிறைய வீரர்களையும் அனுப்பியிருந்தார்கள்.

அந்த இரண்டு கப்பல்களும் விபத்துக்குள்ளாகி அழிந்தன. அவற்றில் ஒன்றில் வந்தியத்தேவன் அகப்பட்டிருந்தான். அக் கப்பலில் இடி விழுந்து அது முழுகப் போகும் தருவாயில், பார்த்திபேந்திரனுடைய கப்பலில் வந்த அருள்மொழிவர்மன் பார்த்து விட்டான். வந்தியத்தேவனைக் காப்பாற்றுவதற்காகச் சுழற்காற்று அடிக்கும் சமயத்தில் கடலில் குதித்தான். அவர்கள் இருவரையும் பூங்குழலி என்னும் ஓடக்காரப் பெண் காப்பாற்றிக் கோடிக்கரை சேர்த்தாள்.

இளவரசன் கடலில் வரும் போதே கடுமையான குளிர் சுரத்தினால் பீடிக்கப்பட்டான். அவனை நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும்படி குந்தவை சேந்தன் அமுதனிடம் சொல்லி அனுப்பினாள். சேந்தன் அமுதனும் பூங்குழலியும் அருள்மொழிவர்மனை நாகைப்பட்டிணத்திலிருந்த புத்த விகாரத்துக்குக் கால்வாய் மூலமாகப் படகில் அழைத்துச் சென்றார்கள்.

வந்தியத் தேவன் கோடிக் கரையிலிருந்து பழையாறைக்கு வரும் வழியில் கொல்லன் பட்டறை ஒன்றில் அதிசயமான வாள் ஒன்றைப் பார்த்தான். அதன் அடிப் பகுதியில் பாண்டிய குலத்தின் மீன் சின்னம் மங்கலாகத் தெரிந்தது.

பிறகு அதே வாளைப் பெரிய பழுவேட்டரையரின் இளைய மனைவி நந்தினியிடம் அவன் கண்டான். வீர பாண்டியனுடைய ஆபத்துதவிப் படையைச் சேர்ந்தவர்கள் சிலர் சோழ நாட்டில் பரவியிருந்து பழிக்குப் பழிவாங்கும் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தார்கள் என்பது வந்தியத்தேவனுக்கு முன்னமே தெரிந்திருந்தது. நந்தினியும் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவள் என்னும் சந்தேகம் வந்தியத்தேவனுக்கு உறுதிப்பட்டது.

குந்தவையும் வந்தியத்தேவனும் ஒருவருக்கொருவர்

அமரர் கல்கி

உள்ளங்களைப் பறிகொடுத்திருந்தார்கள். வந்தியத்தேவன் இலங்கைப் பிரயாணத்தில் தான் கண்டது, கேட்டது எல்லாவற்றையும் குந்தவையிடம் கூறினான். பழுவூர் இளைய ராணி நந்தினியைப் போல் அதே தோற்றமுடைய ஊமை ஸ்திரீ ஒருத்தியை இலங்கையில் பார்த்தது பற்றியும் தெரிவித்தான். அந்த ஊமை ஸ்திரீ சுந்தர சோழ சக்கரவர்த்தியினால் இளம் பிராயத்தில் காதலிக்கப்பட்டவள் என்பதைக் குந்தவை அறிந்திருந்தாள். அவள் கடலில் விழுந்து உயிரை விட்டு விட்டாள் என்ற எண்ணத்தினால் தன் தந்தை மன அமைதி இழந்து தவிக்கிறார் என்பதும் குந்தவைக்குத் தெரிந்திருந்தது. சோழ ராஜ்யத்துக்கு ஏற்பட்டிருந்த அபாயங்களினால் குந்தவையின் உள்ளம் பெரிதும் கவலையில் ஆழ்ந்திருந்தது. அதுவரை அவள் துவேஷித்து வந்த நந்தினி ஒரு வேளை தன் தமக்கையாயிருக்கலாம் என்ற எண்ணம் அவள் மனத்தை மேலும் கலங்கச் செய்தது.

இளவரசன் அருள்மொழிவர்மன் குழந்தையாயிருந்த போது காவேரி வெள்ளத்தில் மூழ்கி விட்டான். அவனை ஒரு ஸ்திரீ எடுத்துக் காப்பாற்றி விட்டு உடனே மறைந்தாள். காவேரி அம்மன்தான் குழந்தையைக் காப்பாற்றியதாக அனைவரும் நம்பினார்கள். இதனால் 'பொன்னியின் செல்வன்' என்னும் காரணப் பெயர் அவனுக்கு ஏற்பட்டிருந்தது.

பொன்னியின் செல்வன் சோழ நாட்டு மக்களின் இதயத்தில் இடம் பெற்றிருந்தான். அவன் கடலில் மூழ்கி இறந்தான் என்னும் செய்தி கேட்டதும் சோழ நாடெங்கும் ஜனங்கள் கொதித்து எழுந்தார்கள். பழையாறை மக்கள் அரண்மனை முற்றத்தில் வந்து ஆரவாரம் செய்தார்கள். அச்சமயம் அங்கு வந்திருந்த இளவரசன் மதுராந்தகன் மீது தங்கள் ஆத்திரத்தைக் காட்ட எண்ணினார்கள்.

பொன்னியின் செல்வன் பத்திரமாயிருக்கும் செய்தியைக் குந்தவை வெளியிட விரும்பவில்லை. அது பழுவேட்டரையர்களுக்கும் நந்தினிக்கும் தெரியக் கூடாது என்று எண்ணினாள். எனினும் ஜனங்களைச் சமாதானப்படுத்துவதற்காக ''பொன்னியின் செல்வனைச் சமுத்திர ராஜன் காப்பாற்றியிருப்பான்! நீங்கள் கவலைப்பட வேண்டாம்!'' என்று ஆறுதல் வார்த்தை கூறினாள்.

இச் சமயத்தில் பழையாறை வைத்தியர் மகன் பினாகபாணி வந்தியத்தேவன் மீது ''பழுவேட்டரையர்களின் ஒற்றன்'' என்று குற்றம் சாட்டினான். இருவருக்கும் துவந்த யுத்தம் ஆரம்பமாகி நடந்தது.

அதே சமயத்தில் முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் அங்கு வந்து சேர்ந்தார். சண்டையிட்ட இருவரையும் சிறைப்படுத்தக் கட்டளையிட்டார். ஜனங்களையும் கலைந்து போகச் செய்தார்.

முதன் மந்திரி அன்பில் அநிருத்தர் சுந்தர சோழரின் இளம்பிராயத் தோழர். சோழ சாம்ராஜ்யம் மகோந்நதம் அடைந்து இலங்கை முதல் இமயம் வரையில் பரவ வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர் பாடுபட்டு வந்தார். அவரிடம் குந்தவைக்கு மிக்க மரியாதை உண்டு.

வந்தியத்தேவனைச் சிறையிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்று குந்தவை அநிருத்தரிடம் கூறிய போது, 'அவன் ஏன் மாற்றானின் ஒற்றனாய் இருக்கக் கூடாது' என்று அநிருத்தர் கேட்டு, அதற்கான காரணங்களையும் அடுக்கடுக்காகக் கூறிய போது உண்மையாகவே குந்தவை குழம்பிப் போனாள்...

அத்தியாயம் 28

ஒற்றனுக்கு ஒற்றன்

மௌனமாயிருந்த அரசிளங்குமரியைப் பார்த்து முதன் மந்திரி அநிருத்தர் ''தாயே! ஏன் பேசாமலிருக்கிறாய்? வந்தியத்தேவனை இன்னமும் நீ நம்புகிறாயா?'' என்று கேட்டார்.

''ஐயா! அமைச்சர் திலகமே! நான் என்ன சொல்லட்டும்? இன்னும் சற்று நேரம் தாங்கள் பேசிக் கொண்டே போனால் என்னை நானே சந்தேகிக்கும்படி செய்து விடுவீர்கள் போலிருக்கிறதே!'' என்றாள் இளவரசி.

''காலம் அப்படி இருக்கிறது, அம்மா! யாரை நம்பலாம், யாரை நம்பக் கூடாது என்று தீர்மானிப்பது இந்த நாளில் அவ்வளவு சுலபமில்லைதான். நாலாபுறமும் அவ்வளவு விரோதிகள் சூழ்ந்திருக்கிறார்கள்; அவ்வளவு மர்மமான சூழ்ச்சிகள் நடந்து வருகின்றன!'' என்றார் முதன் மந்திரி அநிருத்தர்.

''ஆனாலும் தங்களுக்குத் தெரியாத மர்மமும் தாங்கள் அறியாத சூழ்ச்சியும் இராது என்று தோன்றுகிறது. நான் அனுப்பிய தூதனைப் பற்றிய அவ்வளவு விவரங்களையும் எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?'' என்று கேட்டாள் குந்தவை தேவி.

''அம்மணி! நான் ஆயிரம் கண்களும் இரண்டாயிரம் செவிகளும் படைத்தவன். நாடெங்கும் அவை பரவியிருக்கின்றன. பழுவூர் அரண்மனையில் என் ஆட்கள் இருக்கிறார்கள். பழுவூர் இளைய ராணியின் மெய்க்காவலர்களிலே எனக்குச் செய்தி அனுப்புகிறவன் ஒருவன் இருக்கிறான். ஆழ்வார்க்கடியானைப் போல் ஊர் ஊராக அலைந்து திரிந்து

செய்து கொண்டு வருகிறவர்கள் பலர் இருக்கிறார்கள். சோழ நாட்டிலோ, சுற்றுப் புற நாடுகளிலோ நான் அறியாமல் எந்தக் காரியமும் நடைபெற முடியாது என்றுதான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். ஆயினும், யார் கண்டது? என்னையும் ஏமாற்றக் கூடியவர்கள் இருக்கலாம். நான் அறியாத மர்மங்களும் நடைபெறலாம்!''

இவ்வாறு முதன் மந்திரி சொன்ன போது, பொன்னியின் செல்வன் இப்போது சூடாமணி விகாரத்தில் இருப்பதும் இந்தப் பொல்லாத மனிதருக்குத் தெரியுமோ என்ற எண்ணம் குந்தவைக்கு உண்டாயிற்று. அதை அவள் வெளியிடாமல் மிகுந்த சிரமத்துடன் அடக்கிக் கொண்டாள்.

''ஐயா! நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையாக இருக்கலாம். ஆனாலும் அந்த வாணர்குல வீரன் பழுவூர் ராணியின் ஒற்றனாகியிருப்பான் என்று மட்டும் என்னால் நம்ப முடியவில்லை. அவனைத் தயவு செய்து விடுதலை செய்து விடுங்கள்!'' என்றாள்.

''நன்றாக யோசித்துப் பார், அம்மா! அந்தப் பெண் நந்தினியிடம் மாயமந்திர சக்தி ஏதோ இருக்கிறது. சிவ பக்தன் மதுராந்தகன் அவளுடைய வலையில் விழுந்து இராஜ்யத்தில் ஆசை கொண்டான். சம்புவரையரின் மகன் கந்தமாறன் அவளுடைய ஓலையை எடுத்துக் கொண்டு ஆதித்த கரிகாலனிடம் போயிருக்கிறான். பழுவேட்டரையர்களின் பரம விரோதியாயிருந்த பார்த்திபேந்திரன் இன்று பழுவூர் ராணியின் அடிமையாகி விட்டான். சோழ ராஜ்யத்தை இரண்டாகப் பிரித்து மதுராந்தகனுக்கு ஒரு பகுதியும் ஆதித்த கரிகாலனுக்கு ஒரு பகுதியும் கொடுத்து ராஜி செய்து வைக்கவும் அவன் முன் வந்திருக்கிறான்.....''

''இது என்ன அக்கிரமம்? இராஜ்யத்தை இரண்டாகப் பிரிக்கவாவது? எங்கள் குலத்து முன்னோர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு ஒன்று சேர்த்துப் பெரிதாக்கிய மகா இராஜ்யம் இது?''

''இராஜ்யத்தைப் பிரிப்பதை நீ விரும்ப மாட்டாய்; நானும் விரும்பவில்லை, தாயே! பத்து நாட்களுக்கு முன் இந்த யோசனையைச் சொல்லியிருந்தால் பார்த்திபேந்திரனும் பொங்கி எழுந்திருப்பான். இப்போது அவனே இந்த ஏற்பாட்டுக்கு முதன்மையாக நிற்கிறான்....''

''இது என்ன விந்தை! அந்தப் பழுவூர் ராணியிடம் அப்படிப்பட்ட மாய சக்தி என்னதான் இருக்கும்?''

''இளவரசி! அதை நான் உன்னிடம் கேட்க வேண்டும் என்றிருந்தேன். நீ என்னைக் கேட்கிறாய். போகட்டும்; வந்தியத்தேவன் மட்டும் அவளுடைய மாய சக்திக்கு உட்பட மாட்டான் என்று எதனால் நீ அவ்வளவு நிச்சயமாகச் சொல்கிறாய்?''

''ஐயா! காரணங் கேட்டால் எனக்குச் சொல்லத் தெரியாது. மனத்துக்கு மனமே சாட்சி என்பார்கள். வாணர் குல வீரன் அத்தகைய துரோகம் செய்ய மாட்டான் என்று என் மனத்தில் ஏனோ நிச்சயமாகத் தோன்றுகிறது.''

''அப்படியானால், அதைப் பரீட்சித்துப் பார்த்து விடலாம், அம்மா!''

''எப்படி? என்ன பரீட்சை?''

''காஞ்சிக்கு ஒரு தூதனை நாம் உடனே அனுப்பியாக வேண்டும். ஆதித்த கரிகாலனுக்கு மிக நம்பிக்கையான ஆளிடம் அவசரமாக ஓலை கொடுத்து அனுப்ப வேண்டும்.''

''என்ன விஷயம் பற்றி?''

''சற்று முன்னால், நந்தினியை விஷ நாகம் என்று நீ சொல்லி விட்டு அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டாய். உண்மையில் விஷ நாகத்தை விட அவள் பன் மடங்கு கொடியவள். இந்தச் சோழ குலத்தை அடியோடு நாசம் செய்து பூண்டோடு ஒழித்து விட அவள் திட்டமிட்டிருக்கிறாள்...!''

''கடவுளே! என்ன பயங்கரம்!'' என்று குந்தவை கூறிய போது அவளுடைய உள்ளக்கடல் பற்பல எண்ண அலைகளினால் கொந்தளித்தது.

''உன் தமையன் ஆதித்த கரிகாலனைக் கடம்பூர் அரண்மனைக்கு அழைக்கும்படி அவள் சம்புவரையர்களைத் தூண்டியிருக்கிறாள். சம்புவரையர் மகள் ஒருத்தியையும் பழுவேட்டரையர் குமாரி ஒருத்தியையும்

கரிகாலனுக்கு மணம் செய்விப்பது பற்றிப் பேசி வருகிறாள். இராஜ்யத்தை இரண்டாகப் பிரித்து ராஜ்ய செய்விக்கும் விஷயத்தையும் அங்கே முடிவு செய்யப் போகிறாளாம். இவையெல்லாம் வெளிப்படையான பேச்சு. ஆனால் அவளுடைய அந்தரங்கத்தில் என்ன நோக்கம் வைத்திருக்கிறாளோ அது யாருக்கும் தெரியாது. எல்லாம் அறிந்தவன் என்று கர்வங் கொண்டிருக்கும் என்னால் கூட அவள் நோக்கத்தை அறிய முடியவில்லை.''

''அதைப் பற்றி நாம் என்ன செய்ய வேண்டும், ஐயா!''

''ஆதித்த கரிகாலன் கடம்பூர் மாளிகைக்குப் போகாமல் எப்படியாவது தடை செய்ய வேண்டும். அதற்குத்தான் நீயும் நானும் ஓலை கொடுத்து வந்தியத்தேவனிடம் அனுப்ப வேண்டும். நம்முடைய விருப்பத்தை மீறிக் கரிகாலன் கடம்பூர் மாளிகைக்குப் புறப்படும் பட்சத்தில் வந்தியத் தேவனும் அவனுடன் போக வேண்டும். உடம்பைப் பிரியாத நிழலைப் போல் அவன் உன் தமையனைத் தொடர்ந்து காவல் புரிய வேண்டும். நந்தினியைத் தனியாகச் சந்திப்பதற்குக் கூட அவன் இடந்தரக் கூடாது....''

குந்தவை பெருமூச்சு விட்டாள். முதன் மந்திரி கூறுவது எவ்வளவு முக்கியமான காரியம் என்பதை அவள் உணர்ந்தாள். எல்லா விவரங்களும் அறிந்து அவர் சொல்கிறாரா, அல்லது இராஜாங்க நோக்கத்தை மட்டும் வைத்துக் கொண்டு சொல்கிறாரா என்று அவளால் ஊகிக்க முடியவில்லை.

''ஐயா! அவர்களுடைய சந்திப்பைத் தடுப்பது அவ்வளவு முக்கியமான காரியம் என்று ஏன் கருதுகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''அம்மணி! வீரபாண்டியனுடைய ஆபத்துதவிகள் சிலர் சோழகுலத்தைப் பூண்டோடு அழிக்கச் சபதம் செய்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பெரிய பழுவேட்டரையருடைய பொக்கிஷத்திலிருந்து புதிய தங்கக் காசுகள் போய்க் கொண்டிருக்கின்றன. இதைக் காட்டிலும் இன்னும் ஏதேனும் நான் இதைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?''

''வேண்டாம்'' என்று முணுமுணுத்தாள் குந்தவை. சூடாமணி விஹாரத்தில் சுரத்துடன் படுத்திருக்கும் இளவரசனின் நினைவு அவளுக்கு வந்தது. பொன்னியின் செல்வனையும் அபாயங்கள் சூழ்ந்திருக்கலாம் அல்லவா?

''ஐயா! சோழநாட்டுக்கு விபத்துக்கு மேல் விபத்தாக வந்து கொண்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் தாங்கள் முதன் மந்திரியாயிருப்பது அதிர்ஷ்டவசந்தான்! என் தம்பியின் விஷயமாக என்ன ஏற்பாடு செய்தீர்கள்?'' என்று கேட்டாள்.

''சோழ நாட்டிலுள்ள எல்லாச் சிவாலயங்களிலும் விஷ்ணு ஆலயங்களிலும் இளவரசருடைய சுக க்ஷேமத்தைக் கோரிப் பிரார்த்தனை செய்து அர்ச்சனை அபிஷேகம் நடத்தச் சொல்லியிருக்கிறேன். அப்படியே புத்த விஹாரங்களிலும் சமணப் பள்ளிகளிலும் பிரார்த்தனை செய்யப் போகிறார்கள். நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் புத்த பிக்ஷுக்கள் ஒரு மண்டலம் விசேஷ பிரார்த்தனை நடத்தப் போகிறார்கள். வேறு என்ன செய்யலாம் என்று நீ சொல்கிறாய்?''

சூடாமணி விஹாரத்தைப் பற்றிச் சொல்லும்போது முதன் மந்திரியின் முகத்தில் ஏதேனும் மாறுதல் ஏற்படுகிறதா என்று குந்தவை கவனித்தாள். ஒன்றுமே தெரியவில்லை.

''ஐயா! சூடாமணி விஹாரம் என்றதும் ஒரு விஷயம் ஞாபகம் வருகிறது. சூடாமணி விஹாரத்தின் மீது பெரிய பழுவேட்டரையர் ஏதோ கோபங் கொண்டிருக்கிறாராம். இலங்கையில் பிக்ஷுக்கள் இளவரசருக்கு முடி சூட்டுவதாகச் சொன்ன செய்தி வந்ததிலிருந்து அந்தக் கோபம் முற்றியிருக்கிறதாம். இளவரசர் காணாமற் போனதற்குப் பழியைச் சூடாமணி விஹாரத்திலுள்ள பிக்ஷுக்களின் மீது சுமத்தினாலும் சுமத்துவார்கள். அதற்குத் தக்க பாதுகாப்பு தாங்கள்தான் செய்ய வேண்டும்'' என்று சொன்னாள்.

''உடனே செய்கிறேன், அம்மா!

சக்கரவர்த்தியின் கட்டளையுடன் சூடாமணி விஹாரத்தைப் பாது காக்க ஒரு சிறிய சைன்யத்தையே வேணுமானாலும் அனுப்பி வைக்கி றேன். வந்தியத்தேவனைக் காஞ்சிக்கு அனுப்புவது பற்றி என்ன சொல்லு கிறாய்?''

''ஐயா! அவ்வளவு முக்கியமான காரியத்துக்கு வேறுயாரையாவது



அனுப்புவது நல்லதல்லவா?''

''உனக்கு மட்டும் அவனிடம் நம் பிக்கையிருந்தால் அவனையே அனுப்ப விரும்புகிறேன். அவனு டைய வீரசாகஸச் செயல்களைப் பற்றியும் தெரிந்து கொண்டிருக்கி றேன். எதற்கும் அஞ்சாத அஸகாய சூரனையே இந்தக் காரியத்துக்கு நாம் அனுப்ப வேண்டும். இன்றைக்கு நான் அரண்மனை முற்றத்துக்கு வந்து கொண்டிருந்த போது என் கண்ணா லேயே பார்த்தேனே! அந்த வைத்தி யனை என்ன பாடு படுத்தி விட்டான்? நான் குறுக்கிட்டுத் தடுத்திரா விட் டால் வைத்தியர் மகன் யமனுக்கு வைத்தியம் செய்யப் போயிருப் பான்...''

இளைய பிராட்டி இதைக்கேட்டுப்பூரிப்பு அடைந்தாள். ஆயினும் சிறிது தயக்கத்துடன், ''வீரனாயிருந்தால் மட்டும் போதுமா? படபடப்புக்காரனாயி ருக்கிறானே? எவ்வளவு விரைவில் சண்டை தொடங்கி விட்டான்!'' என்றாள்.

''அதற்கு வேணுமானால் பின்னோடு என்னுடைய சீடன் திரு மலையையும் அனுப்பி வைக்கிறேன். நிதான மான யோசனைக்குப் பெயர் போனவன் ஆழ்வார்க்கடியான்!'' என்றார் அநிருத்தர். இளைய பிராட்டி தன் மனத்திற்குள், ''இவரு டைய உள்ளத்தில் இருப்பதைக் கடவு ளும் அறிவாரோ, என்னமோ, தெரிய வில்லை! ஒற்றனுக்குத் துணையாக ஒற்றன் ஒருவனையே அனுப்பி வைக்க விரும்புகிறார் போலும்!'' என்று எண்ணிக் கொண்டாள்.



அத்தியாயம் 29
வானதியின் மாறுதல்

குந்தவை வந்தியத்தேவனைச் சிறையிலிருந்து மீட்டு மறுபடியும் பிரயாணம் அனுப்புவதற்காகப் புறப்பட்ட போது, வானதி எதிரே வந்தாள். இளைய பிராட்டியின் அடிபணிந்து நின்றாள்.

''என் கண்ணே! உன்னை விட்டு விட்டு வந்து விட்டேன். இன்னும் கொஞ்சம் முக்கியமான அலுவல் இருக்கிறது. அதை முடித்து விட்டு வந்து விடுகிறேன். சற்று நேரம் தோட்டத்தில் சென்றிரு! ஓடைப் பக்கம் மட்டும் போகாதே!'' என்றாள்.

''அக்கா! தங்களுக்கு இனித் தொந்தரவு கொடுக்க மாட்டேன். கொடும்பாளூருக்குப் போக விரும்புகிறேன். அனுமதி கொடுங்கள்!'' என்றாள் வானதி.

''இது என்ன, என் தலையில் நீயுமா இடியைப் போடுகிறாய்? உனக்கு என் பேரில் என்ன கோபம்? உன் பிறந்தகத்தின் மீது திடீரென்று என்ன பாசம்?''

''உங்கள் பேரில் நான் கோபங் கொண்டால் என்னைப் போல் நன்றி கெட்டவள் யாரும் இல்லை. என் பிறந்தகத்தின் பேரில் புதிதாகப் பாசம் ஒன்றும் பிறந்து விடவும் இல்லை. தாயும் தந்தையும் இல்லாத எனக்குப் பிறந்தகம் என்ன வந்தது? எங்கள் ஊருக்குப் பக்கத்தில் உள்ள காளி கோவிலுக்குப் பூசை போடுவதாக என் தாயார் ஒருமுறை வேண்டிக் கொண்டாளாம். அதை நிறைவேற்றுவதற்கு முன் அவள் கண்ணை மூடி விட்டாள். எனக்கு அடிக்கடி மயக்கம் வருகிறதல்லவா? ஒரு வேளை அந்த வேண்டுதலை நிறைவேற்றாததால்தான் இப்படி என்னைப்படுத்துகிறதோ என்னமோ?''

''அதற்காக நீ அவ்வளவு தூரம் போக வேண்டியதில்லை. நானே சொல்லி அனுப்பி அந்த வேண்டுதலை நிறைவேற்றச் சொல்கிறேன்.''

''அது மட்டுமல்ல, அக்கா! என் பெரிய தகப்பனார் இலங்கையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கிறாராம். அவர் தஞ்சையைத் தாண்டிப் பழையாறைக்கு வர மாட்டார். அவர் வரும் போது நான் கொடும்பாளூரிலிருக்க விரும்புகிறேன். அவரிடம் இலங்கையில் நடந்தவற்றை





யெல்லாம் நேரில் கேட்க ஆசைப்படுகிறேன்!''

''இலங்கையில் நடந்தவற்றைப் பற்றித் தெரிந்து கொள்வதில் உனக்கு என்ன அவ்வளவு ஆசை?''

''அது என்ன அப்படிக் கேட்கிறீர்கள்? என் தந்தை இலங்கைப் போரில் வீர சொர்க்கம் அடைந்ததை மறந்து விட்டீர்களா?''

''மறக்கவில்லை. அந்தப் பழி இப்போது நீங்கி விட்டது...''

''முழுதும் நீங்கியதாக எனக்குத் தோன்றவில்லை. யுத்தம் முடிவதற்குள்ளே அவசரப்பட்டுக் கொண்டு பெரிய வேளார் திரும்புகிறார்.''

''அவரை மறுபடி இலங்கைக்குப் போய்ப் போர் நடத்தும்படி சொல்லப் போகிறாயா? அதற்காகவா கொடும்பாளூர் போக வேண்டும் என்கிறாய்?''

''அவ்வளவு பெரிய விஷயங்களைப் பற்றிச் சொல்வதற்கு நான் யார்? நடந்ததைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளவே விரும்புகிறேன்....''

''ஆகா! உன் மனம் இப்போது எனக்குத் தெரிகிறது. பொன்னியின் செல்வன் இலங்கைப் போரில் புரிந்த வீரச் செயல்களைப் பற்றி உன் பெரிய தகப்பனாரிடம் கேட்க விரும்புகிறாய், இல்லையா?''

''அது ஒரு தவறா, அக்கா?''

''அது தவறில்லை. ஆனால் இத்தகைய சமயத்தில் என்னைத் தனியே விட்டு விட்டுப் போகிறேன் என்கிறாயே, அதுதான் பெரிய தவறு!''

''அக்கா! நானா தங்களைத் தனியே விட்டு விட்டுப் போகிறேன்? என்னைப் போல் தங்களுக்கு எத்தனையோ தோழிகள். தங்கள் கருத்தை அறிந்து காரியத்தில் நிறைவேற்ற எத்தனையோ பேர் காத்திருக்கிறார்கள்.....''

''நீ கூட இப்படிப் பேச ஆரம்பித்து விட்டாயா, வானதி? என் தம்பியைப் பற்றிய செய்தி கேட்டு உன் மனம் பேதலித்து விட்டது போலிருக்கிறது. அந்தச் செய்தியைப் பற்றி நீ அதிகமாய்க் கவலைப்பட வேண்டாம்....''

''தங்கள் தம்பியைப் பற்றித் தங்களுக்கு இல்லாத கவலை எனக்கு என்ன இருக்க முடியும், அக்கா!''

''உண்மையைச் சொல்! ஓடையில் நீயாக வேண்டுமென்று விழுந்தாயா? மயக்கம் வந்து விழுந்தாயா?''

''வேண்டுமென்று எதற்காக விழ வேண்டும்? மயக்கம் வந்துதான் விழுந்தேன். தாங்களும் அந்த வாணர் குலத்து வீரருமாக என்னைக் காப்பாற்றினீர்கள்.''

''காப்பாற்றியதற்கு நன்றி உள்ளவளாகத் தோன்றவில்லையே?''

''இந்த ஜன்மத்தில் மட்டுமல்ல; ஏழேழு ஜன்மத்திலும் நன்றியுள்ளவளாயிருப்பேன்.''

''இந்த ஜன்மம் இத்துடன் முடிந்து போய் விட்டது போல் பேசுகிறாயே? நான் சொல்கிறேன் கேள், வானதி! வீணாக மனத்தை வருத்தப்படுத்திக் கொள்ளாதே! அருள்மொழிவர்மனுக்கு அபாயம் எதுவும் வந்திருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. சற்று முன் அரண்மனை முற்றத்தில் கூடியிருந்த ஜனங்களுக்குச் சொன்னதையே உனக்கும் சொல்லுகிறேன். அன்றொரு நாள் காவேரித் தாய் என் தம்பியைக் காப்பாற்றினாள். அது போல் சமுத்திர ராஜனும் அவனைக் காப்பாற்றியிருக்க வேண்டும். சீக்கிரத்தில் நல்ல செய்தியை நாம் கேள்விப்படுவோம்.''

''எந்த ஆதாரத்தைக் கொண்டு இவ்வளவு உறுதியாகத் தைரியம்

சொல்கிறீர்கள், அக்கா!''

''என் மனத்திற்குள் ஏதோ ஒன்று சொல்லுகிறது. என் அருமைத் தம்பிக்கு ஏதேனும் நேர்ந்திருந்தால் அது என் உள் மனத்திற்குத் தெரிந்திருக்கும். நான் இப்படிச் சாதாரணமாகப் பேசிக் கொண்டிருக்க மாட்டேன்..''

''மனம் சொல்வதில் எனக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லை, அக்கா! உள் மனத்திலும் நம்பிக்கை இல்லை; வெளி மனத்திலும் நம்பிக்கை இல்லை!''

''அது எப்படி நீ மட்டும் அவ்வளவு தீர்மானமாகச் சொல்லுகிறாய்?''

''என் உள் மனத்திலும் வெளி மனத்திலும் சில நாளாக ஒரு பிரமை தோன்றிக் கொண்டிருந்தது. தூக்கத்தில் கனவிலும் தோன்றியது; விழித்துக் கொண்டிருக்கும் போதும் சில சமயம் அப்படிப் பிரமை உண்டாயிற்று.''

''அது என்ன, வானதி?''

''தண்ணீரில் தங்கள் தம்பியின் முகம் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. என்னை அழைப்பது போலவும் இருந்தது. கனவிலும் இந்தப் பிரமை அடிக்கடி ஏற்பட்டு வந்தது.....''

''அதை ஏன் பிரமை என்று சொல்லுகிறாய்? நமக்கு வந்திருக்கும் செய்திக்கும் உன்னுடைய மனத் தோற்றத்துக்கும் பொருத்தமாக இருக்கிறதே!''

''இன்னும் முழுதும் கேட்டால் அது எவ்வளவு பைத்தியக்காரப் பிரமை என்பதை அறிவீர்கள். ஓடையில் மயக்கம் போட்டு விழுந்தேனல்லவா? அப்போது நான் நாகலோகத்துக்கே போய் விட்டேன். அங்கே ஒரு திருமண வைபவம் நடந்தது.....''

''யாருக்கும் யாருக்கும் திருமணம்?''

''அதைச் சொல்ல விருப்பமில்லை, அக்கா! மொத்தத்தில் மனத்தில் தோன்றுவதிலும் கனவில் தோன்றுவதிலும் எனக்கு நம்பிக்கை இல்லை. கண்ணால் காண்பதையும் காதால் கேட்பதையும் தான் இனிமேல் நம்புவது என்று தீர்மானித்திருக்கிறேன்....''

''வானதி! நீ சொல்லுவது முற்றும்



தவறு. கண்ணால் காண்பதும் காதினால் கேட்பதும் சில சமயம் பொய்யாக இருக்கும். மனத்திற்குள் தோன்றுவதுதான் நிச்சயம் உண்மையாயிருக்கும். கதைகள், காவியங்களிலிருந்து இதற்கு எத்தனையோ உதாரணங்கள் நான் உனக்குச் சொல்லுவேன்....''

''பிறகு ஒரு சமயம் கேட்டுக் கொள்கிறேன், அக்கா! இப்போது எனக்கு விடை கொடுங்கள்!'' என்றாள் வானதி.

இளவரசி குந்தவைக்கு ஒரே வியப்பாய்ப் போய் விட்டது. இந்தப் பெண்ணுக்கு இவ்வளவு தைரியமும் பிடிவாதமும் திடீரென்று எப்படி ஏற்பட்டன என்று ஆச்சரியப்பட்டாள்.

''வானதி! இது என்ன அவசரம்? அப்படியே நீ கட்டாயம் ஊருக்குப் போக வேண்டுமென்றாலும், சில நாள் கழித்துப் புறப்படக் கூடாதா? இப்போது நாடெங்கும் ஒரே குழப்பமாயிருக்குமே? உன்னைத் தக்க பாதுகாப்புடன் அனுப்பி வைக்க வேண்டாமா?''

''எனக்கு என்ன பயம், அக்கா! கொடும்பாளூரிலிருந்து என்னை அழைத்து வந்த பல்லக்குத் தூக்கிகளும் காவல் வீரர் நால்வரும் ஒரு வேலையுமின்றி இத்தனை காலம் இங்கே தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களே என்னைத் திரும்ப



அருள்வாக்கு

அன்னதானம், பரோபகாரத்தில் ஓர் அம்சமே. பரோபகாரம், சமூக சேவை, சோஷல் சர்விஸ் என்று இந்த நாட்களில் ஆர்ப்பாட்டமாகப் பிரகடனம் பண்ணுவதை, முற்காலத்தில் எந்தப் பகட்டுமில்லாமல் சுபாவமாகவே மக்கள் செய்து வந்தனர். இதற்கு 'பூர்த்த தர்மம்' என்று பெயர். ஜனங்களுக்காகக் கிணறு, குளம் வெட்டுவது, அன்னதானம், அவர்களின் ஆத்ம க்ஷேமத்துக்காகக் கோயில் கட்டுவது, அதன் அங்கமாக நந்தவனம் அமைப்பது எல்லாம் 'பூர்த்த தர்ம'த்தில் சேர்ந்தவை. இதில் கிணறு, குளம் வெட்டுவது முதலில் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால்தான் பேச்சு வழக்கில் கூட, 'அவன் என்ன செய்து கொண்டிருக்கிறான்? வெட்டிக் கொண்டு இருக்கிறானா?' என்கிறோம். 'வெட்டுவது' அவ்வளவு பெரிய தர்மம். தாகமெடுத்த பசுக்களும் மற்ற பிராணிகளும் நீர் அருந்துவதற்காகக் கிராமத்துக்கு வெளியே மேய்ச்சல் பூமியில் ஒரு குளம் வெட்டினால் எவ்வளவோ புண்ணியம். ஒரு கிராமத்தில் அல்லது பேட்டையில் இருக்கிற சகலரும் — பணக்காரர் ஏழை என்ற வித்தியாசமில்லாமல் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வித்தியாசமில்லாமல் ஒன்று சேர்ந்து மண்வெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு இப்படிப்பட்ட சரீரப் பிரயாசையுள்ள பரோபகார சேவைகளில் ஈடுபட வேண்டும். இதனால் சமூக ஒற்றுமையும் அதிகமாகும். புத்தி சுத்தமாகக் கல்வி, மனசு சுத்தமாக தியானம், வாக்கு சுத்தமாகச் சுலோகம் இப்படியெல்லாம் இருக்கின்றன அல்லவோ? சரீரம் சுத்தமாவதற்கு அதனால் சேவை செய்ய வேண்டும். உழைக்க உழைக்க சித்த சுத்தியும் வரும். உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்றில்லாமல் எல்லாருடனும் சேர்ந்து மண்ணை வெட்டும்போது அகங்காரத்தையும் வெட்டி எடுத்ததாகும். குளத்தில் தண்ணீர் ஊறுவதைவிட நம் இருதயத்தில் ஊறுகிற அன்பே முக்கியம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

அழைத்துக் கொண்டு போய் விடுவார்கள்.....''

''அழகாயிருக்கிறது! உன்னை அப்படி நான் அனுப்பி விடுவேன் என்றா நினைக்கிறாய்?''

''உங்களை நான் ரொம்பவும் கேட்டுக் கொள்கிறேன். அக்கா! எனக்குப் பயம் ஒன்றுமில்லை. கொடும்பாளூர் வானதியை இந்த நாட்டில் யாரும் எதுவும் செய்யத் துணிய மாட்டார்கள். அதிலும் இளைய பிராட்டியின் அன்புக் குகந்த தோழி நான் என்பது யாருக்குத் தெரியாது? ஒரே ஒரு காரியத்துக்கு மட்டும் அனுமதி கொடுங்கள். போகும் போது அந்தக் குடந்தை ஜோதிடரின் வீட்டுக்கு இன்னொரு தடவை போய் அவரைச் சில விஷயங்கள் கேட்க விரும்புகிறேன். அவ்விதம் செய்யலாமா?''

''அவரிடம் எனக்குக் கூட வர வேண்டும் என்று ஆசைதான். ஆனால் நீ இவ்வளவு அவசரப்படுகிறாயே?''

''இல்லை, அக்கா! இந்தத் தடவை அவரை நான் தனியாகப் பார்த்து ஜோதிடம் பார்க்க விரும்புகிறேன்...''

குந்தவை மூக்கின் மீது விரலை வைத்து அதிசயப்பட்டாள். இந்தப் பெண் ஒரு நாளில், ஒரு ஜாம நேரத்தில், இவ்வளவு பிடிவாதக்காரியாக மாறி விட்டது எப்படி என்று இளவரசிக்குப் புரியவேயில்லை. அவள் பிரயாணத்தைத் தடுத்து நிறுத்த முடியாது என்ற முடிவுக்கு வந்தாள்.

''சரி, வானதி! உன் விருப்பம் போலச் செய்யலாம். நீ பிரயாணத்துக்கு வேண்டிய ஆயத்தம் செய். அதற்குள் சிறையிலிருக்கும் அந்த வாணர் குலத்து வீர குமாரனை விடுதலை செய்து விட்டு வருகிறேன்'' என்றாள்.

(தொடரும்)

சுப்ரமணியன் சிட்பண்ட்ஸ் (பி) லிட்

14, மாசிலாமணி தெரு, பாலாஜி நகர் சென்னை - 600 014 Ph: PP 867381

FIRST ANNIVERSARY

முதல் ஆண்டு நிறைவு விழா

முதல் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு எங்களது கீழ்கண்ட சீட்டு வரிசைகளில் சேரும் எல்லா புது உறுப்பினர்களுக்கும் இலவச பரிசுகள் வழங்குகிறோம்.

சீட்டு வரிசை ரூ.	மாதங்கள்	தவணைத் தொகை ரூ.
1,00,000	40	2,500
50,000	40	1,250
30,000	30	1,000
25,000	40	625
20,000	40	500
15,000	30	500
10,000	25	400
10,000	40	250
5,000	25	200

இலவச பரிசுகள்
27-7-88 முதல் 3-8-88 வரை
சேரும் உறுப்பினர்களுக்கு
மட்டும்

எங்கள் நல்வாழ்த்துக்கள்

சுப்ரமணியன் ரப்பர் எஸ்டேட்
புனலூர், கேரளா

சுப்ரமணியன் ஃபைனான்ஸ்
பெங்களூர் - 560 004

வைரம்ஸ் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்
சென்னை - 600 017

சுப்ரமணியன் ஆபீஸ் காம்ப்ளக்ஸ்
சென்னை - 600 002

அபெக்ஸ் சேம்பர்ஸ்
சென்னை - 600 017

எஸ்பி & கம்பெனி
சென்னை - 600 004

வைரம்ஸ் ஹயர் பர்சேஸ் கம்பெனி
நெல்லூர் - 1

சுப்ரமணியன் என்ஜினியரிங் கம்பெனி
சென்னை - 600 017

சுப்ரமணியன் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி
கோயமுத்தூர் - 641 018 கொச்சி - 682 018

சுப்ரமணியன் & சன்ஸ்
சென்னை - 600 004. கொச்சி - 682 018.

சுப்ரமணியன் இன்வெஸ்ட்மென்ட் கம்பெனி
சென்னை - 600 004

SAM : 712

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி-1988

ரூ.1500/- முதல் பரிசுக் கதை




அம்மாவை நடுக் கூடத்தில் கிடத்தியிருந்தார்கள். ஒரு நாள் கூட பிரேதம் தாங்காது என்பதால் உள்ளே இருந்து கெட்டநீர் வெளிக் கிளம்ப மூக்கில் பஞ்சடைத்திருந்தார்கள். டாக்டர் இதன் காரணமாகச் சின்னக் குழந்தைகளை அண்ட விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார். காயத்ரிக்கு எஸ்.டி.டி.யில் தகவல் போனது. பேரக் குழந்தைகள் தன் மூலம் உடல் நலம் கெட்டு விடுவதை அம்மாவின் ஆத்மா விரும்பாது என்பதனால், காயத்ரி குழந்தைகளை ஊரில் விட்டு விட்டு, ராகவனை மட்டும் அழைத்துக் கொண்டு வந்தாள். ராகவன் வருத்தத்துடன் என் கைகளைப் பற்றி அழுத்த எனக்கு அழுகை வரவில்லை. சீதாவுக்கு இங்கே வந்த பிறகுதான் இந்த விஷயம் தெரியும். மிக அவசரமாக வினோத்தையும், ஸ்வேதாவையும் சிம்மக்கல்லில் இருக்கும் அவன் மச்சினன் வீட்டில் கொண்டு விட்டு வந்தாள். அவள் என்னை நேரடியாகப் பார்த்தால் தான் மேலும் கலக்கத்திற்கு உள்ளாகி அழுது விடுவோம் என்ற பயம் காரணமாக என் கண்களைச் சந்திக்காமல் அழுதாள். எனக்கு அழுகை வரவில்லை. ரேவதிதான் ஒரேயடியாகக் கலக்கி விட்டாள். ஒரு மாதிரி ஹிஸ்டரிகலாக அழுது, கேவலில் தொண்டை அடைத்துக் கொண்டு அழுதது என்னை ஆட்டிவிட்டது.

நாங்கள் எல்லோரும் என்னுடைய அண்ணன், அம்மாவின் மூத்த பிள்ளை சங்கரனின் வரவிற்காகக் காத்திருந்தோம்.

அம்மா 'ப்ரெயின் ஹெமரேஜி'ல் செத்துப் போயிருந்தாள். அவளுக்கு பி. பி. உண்டு. ஹோமியோபதி, ஆயுர்வேதம் என்று அம்மா ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தாள் என்றாலும் எங்கேயோ சின்ன அடைப்பு திறந்திருக்கிறது. இரண்டு நாட்கள் மயக்கம், ஆறு மணி நேரம் கோமா என்று சுலபமாகச் செத்துப் போய் விட்டாள். தூங்கியபடி மூச்சை நிறுத்தி விட்டாள். இதுதான் என் கடைசி ஆசை என்று எதையும் சொல்லாமல் உயிரை விட்டு விட்டாள். "முப்பத்திரண்டு வயசில்தாண்டா ஆதிசங்கரர் முக்தியடைஞ்சார். முப்பத்தி மூணு வயசில்தான் பாரதியார் செத்துப் போனார். முப்பத்து மூணுலயோ, முப்பத்து நாலுலயோதான் ராமானுஜம் செத்துப் போனார். இந்த வயசில் கல்யாணம் கூடப் பண்ணிக்காம நீ இருக்கிறது நன்னா இல்லை, சிவகு!" என்று வழக்கமாக அவள் பாடும் பாட்டைக் கூடப் பாட முடியாமல் செத்துப் போனாள்.

ப்ரெயின் ஹெமரேஜ் என்று டாக்டர் சொன்னதுமே எனக்கு உள்ளுணர்வு சொல்லி விட்டது. அம்மா போய் விடுவாள். முதல் நாள் வார்டில் கடைசி விஸிட் முடித்துவிட்டு



சங்கரன்

சத்தியப்பிரியன்

டாக்டரும், நர்ஸுகளும் போன பிறகு அம்மாவின் காலைப் பிடித்துக் கொண்டு ஓவென்று அழுதேன். அதோடு சரி. இந்த ஆறு வருஷங்களில் அம்மா என் நிழலில் மனம் சாந்தியடையும் அளவுக்குக் குளிர் காய்ந்து விட்டாள் என்ற நிம்மதிதான் எனக்குக் கடைசியில் மிஞ்சியது. இரண்டு நாட்களுக்கு முன்னாலேயே ஏன் எங்களுக்குத் தகவல் தெரிவிக்கவில்லை?' என்று காயத்ரியும், சீதாவும் ஆர்ப்பாட்டம் பண்ணினார்கள். நான் சொல்லாத பதில் 'உங்கள் நிழல் கூட அவள் சாவில் படியக் கூடாது!'

சங்கரனை அவ்வளவு எளிதில் தொடர்பு கொள்ள முடியவில்லை. முதல் முறை டெலிஃபோன் பண்ணியதில் அவன் ஆயில் ஃபீல்டில் ஸர்வேக்குப் போயிருப்பதாகச் சொன்னார்கள். சங்கரன் இண்டியன் ஆயில் கார்ப்பொரேஷனில் டிரில்லிங் என்ஜினியர். இரண்டாவது முறையும் கிடைக்காமல், மூன்றாவது முறைதான் அவன் கிடைத்தான்.

''அம்மா செத்துப் போய்ட்டா, சங்கரன்!''

''என்னது?'' என்று அதிர்ந்தவன் கொஞ்ச நேரம் கழித்து ''எப்படி?'' என்று கேட்டான்.

''ப்ரெயின் ஹெமரேஜ்''

''எப்போ பாடி எடுக்கப் போறீங்க?''

''இது என்ன கேள்வி சங்கரன்? நீ வந்தப்புறம்தான்!''

''இந்த மாதிரி சமயத்தில் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது சிவசு. போட்டது போட்டபடி கிளம்ப என்னால் முடியாது. என்னோட பொஸிஷன் ஏஸ் எ ஃபீல்ட் என்ஜினியர் உனக்குப் புரியும்னு நெனைக்கறேன். காரியமெல்லாம் பண்ணுங்கோ. நானும் எமிலியும் பத்துக்கு வர்றோம். என்ன?''

''இல்லை சங்கரன். நீ வந்தப்புறம்தான் தகனம்''

''உளறாதே! ஆயில் ரிக்ல எனக்கு ஹெலிகாப்டர்ல அரபிக்கடல் மேல் காம்ப். விட்டுட்டு வரச் சொல்றியா? ரெண்டு நாட்களாகும்.''

''அம்மா உடல் காத்திருக்கும் சங்கரன்!''

''தென் ஓகே. வெச்சிடட்டுமா?''


சங்கரன் அம்மாவின் இரண்டாவது குழந்தை. மூத்தவள் காயத்ரி. இரண்டு வருஷ இடைவெளியில் சங்கரன். அடுத்த இரண்டிரண்டு வருஷ இடைவெளிகளில் சீதா, நான், ரேவதி. அப்பா செத்துப் போன பொழுது காயத்ரிக்கு வயசு பத்து. ரேவதி கைக் குழந்தை. ஒரு தனியார் நிறுவனத்தில் எந்தவித சேமிப்புமில்லாமல் அரை குறை சம்பாத்யத்தில் அப்பா ஆஸ்த்மாவில் செத்துப் போனார். அம்மாவுக்குப் படிப்பறிவு போதிய அளவு கிடையாது. அப்பா வழியில் ஆதரவு தர யாரும் கிடையாது. வருஷம் ஒருமுறை எங்களைப் பார்க்க வரும் சித்தப்பாக்கள் அனாதை இல்லத்திற்குக் கொடை வழங்குவது மாதிரி சட்டைத் துணிகளும், படிக்க நோட்டுப் புஸ்தகமும் வாங்கித் தந்து விட்டுப் போவார்கள். அம்மா வழியில் இதை விட மோசம். அம்மாவின் தங்கை முகத்துக்கு நேராகவே சொல்லி விட்டாள். ''இதுங்களையே எப்படிடாப்பா ஆளாக்குவோங்கறது தெரியலை அன்னபூரணி. உன்னோட ஒரு பொண்ணையும் வளர்க்கறதுங்கறது நடக்கும்னு தோணலை.'' பிச்சை எடுப்பது இழிவுதான். வயிற்றுக் கொடுமையின் வயிற்றெரிச்சல். அதை விட இன்னும் ஓர் இழிவு உண்டு. சொந்தக்காரர்களிடம் பிச்சை எடுப்பது. அதன் பிறகுதான் அம்மாவுக்கு எங்களை ஆளாக்க வேண்டும் என்ற வெறி வந்திருக்கும்.

விதவை வளர்த்த குழந்தைகள்தான் நாங்கள். அம்மா பெயரளவில் மட்டும் அப்படியொரு நினைப்பை ஏற்படுத்தியிருந்தாளே தவிர அவளே எங்களுக்குத் தாயாய், தந்தையாய், தோழியாய் இருந்து வளர்த்தாள். அரிசி பற்றாமல் போகும் நாட்களில் கல் சட்டியில் சாதம் பிசைந்து நிலாச் சோறு என்று கையில் உருட்டித் தருவாள். அந்த மாதிரி நாட்களில் கதை சொல்வாள். அநேகமாக அது பரமாச்சாரியாளின் கதையாகத்தான் இருக்கும்.

''சிவகுருகிட்ட ராத்திரி கனவில் ஈஸ்வரன் என்ன கேட்டான்? புத்தியும், லட்சணமும் பொருந்தி அல்ப ஆயுசோட ஒரு குழந்தை போதுமா? அசடுகளா ஏழெட்டு வேணுமா? சிவகுரு ஆர்யாம்பா கிட்டே என்ன சொல்லட்டும்னு கேக்கறார். ஆர்யாம்பா சொல்றா. மனுஷ வெள்ளத்தில் முப்பது வயசும் ஒண்ணுதான்; நூறு வயசும் ஒண்ணுதான். பொறக்கறேங்கற சாதனையைத் தவிர வேறே எதுவுமே செய்யாத குழந்தைகள் பிறக்கிறதை விட அல்ப ஆயுசுன்னாலும் பூலோகம் அழியற வரைக்கும் பெயர் நெலைக்கற குழந்தைதான் எனக்கு வேணும்னா. சங்கரன் பொறந்தான். அது சாதாரணக் குழந்தையா? பரமேஸ்வரனின் அம்சமில்லையா? முப்பது வயசுக்குள்ளே வேதத்துக்கு பாஷ்யம் எழுதணும்னா லேசுப்பட்ட காரியமா? முதல் வயசு முடியறதுக்குள்ள எல்லா பாஷையும் கத்துண்டுட்டார். ரெண்டாவது வயசு முடியறதுக்குள்ளே எழுதப் படிக்கத் தெரிஞ்சிண்டுட்டார். அஞ்சு வயசில் பூணூல் கல்யாணம். ஏழு வயசில் சன்யாசம்.''

''அம்மா! அம்மா! சங்கரருக்கு எப்படியம்மா சன்யாசம் கெடச்சது?'' நாங்களும் அவள் எத்தனை முறை சங்கரர் அம்மாவிடம் சன்யாசத்துக்கு அனுமதி வாங்கின கதையைச் சொல்லியிருந்தாலும், இன்னொரு தடவை கேட்க ஆசைப்படுவோம். அம்மாவும் அவளுக்கே உரிய கனிவில் ரசம் சொட்ட, சொட்ட விவரிப்பாள்.

''ஆர்யாம்பாவும் என்னை மாதிரிதான்.



''இது ஒரு நவீன பாணி 'ரோபோ'ங்கறியே. அப்படி இதில் என்ன விசேஷம்?''

''ஏதாவது 'சம்திங்' தள்ளினாத்தான் வேலை செய்ய ஆரம்பிக்கும்...!''

— ஏ. ஆர். வீரராகவன்.

புருஷன் கிடையாது. சங்கரன் மட்டுந்தான் மார்க்கபந்து! காலம் பூரா வெச்சுக் காப்பாத்துவான்னு கனவு காண்றா. சங்கரனுக்கு லோகத்தில் எவ்வளவு ஜோலி தெரியுமா? மண்டனரை ஜெயிக்கணும்; குமரில பட்டரைக் காப்பாத்தணும்; வேதத்துக்கு பாஷ்யம் எழுதணும்; சமணர்களை ஜெயிச்சு அத்வைதத்தை நிறுவணும். அம்மா தலைப்பையே பிடிச்சிண்டு அலைஞ்சா இதெல்லாம் ஆகுற காரியமா? லேசா அம்மாகிட்ட, எனக்குச் சன்யாசம் வேணுங்கறார். அவ்வளவுதான் லோகத்துல எனக்கு உன்னை விட்டால் வேறு யார் இருக்கான்னு ஆர்யம்பா அழுறா. அதோட விட்டுடறார். ஒரு நாளைக்கு ஆற்றுக்கு அம்மாவும், பிள்ளையும் குளிக்கப் போறா. சங்கரன் சந்தி பண்றதுக்குக் கால் கழுவ நதியில் இறங்கறார். எங்கிருந்து வந்ததோ தெரியலை ஒரு முதலை, சங்கரர் காலைக் கவ்வி ஆற்றுக்குள்ள இழுக்கறது; ஆர்யாம்பா அழுறா. என்னை சன்யாசம் வாங்கிக்க அனுமதிச்சா முதலை விட்டுடும்; இல்லாட்டி நான் உசிரோட கிடைக்க மாட்டேங்கறார். பையன் சன்யாசியாயிட்டாலும் உசிரோட இருப்பானேங்கற திருப்தியில் சரிங்கறா. அப்புறமா ஆர்யாம்பா ஒரு சத்தியம் வாங்கிக்கறா. நான் செத்துப் போய்ட்டா எனக்கு நீதான் கொள்ளி வைக்க வரணும்னு. துறவிகளுக்கு அப்பா, அம்மா கூடாதில்லையா? இருந்தாலும் அம்மா செத்துப் போன உடனே கொள்ளி வைக்க ஓடோடி வர்றார் சங்கரர்!''

சொல்வதை நிறுத்தி விட்டு அம்மா சங்கரனைப் பார்த்துக் கேட்பாள்: ''என்ன சங்கரா! நான் செத்துப் போனா நீ எங்கே இருந்தாலும் கொள்ளி போட வருவியா?''

சங்கரன் அழுது கொண்டே ''இப்படியெல்லாம் பேசாதேம்மா. நீ சாகவே மாட்டே'' என்று ஒவ்வொரு முறையும் சொல்வான்.

அம்மா தலைப்பையே பிடிச்சிண்டு அலைஞ்சா இதெல்லாம் ஆகுற காரியமா? அவள் சொன்னதை முதல் மூன்று குழந்தைகளும் அப்படியே கடைப்பிடித்தார்கள். அம்மா செய்த மிகப் பெரிய தவறு எங்களைக் கண்டிக்காமல் வளர்த்ததுதான். அன்பு ஒன்றை மட்டுமே எங்களுக்குக் காட்டி நாங்கள் தவறு செய்யும் பொழுது கடிந்து கொள்ளாமலே வளர்த்தாள். காலையில் எங்களைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பி விட்டுப் பக்கத்தில் ஒரு முஸ்லீம் நடத்திய ரெடிமேட் துணிக்கடைக்குத் துணி தைக்கப் போய் விடுவாள். துணிக்கடைபாய் கொடுத்த நூற்றைம்பது ரூபாயில்தான் குடும்பம் ஓடியது. சாயங்காலம் சரியாக நாலடிக்கும் பொழுது அம்மா வீட்டுக்கு வந்து விடுவாள்.

படிப்பு ஒன்றைத்தான் அம்மா எங்களுக்கு அடி உரமாக இட்டாள். இதைக் காரணமாகக் கொண்டு காயத்ரி, சங்கரன், சீதா மூன்று பேரும் தனித் தனியாக வளர ஆரம்பித்தார்கள். காயத்ரிக்கும், சீதாவுக்கும் படிக்கிறோம் என்பதால் வீட்டு வேலை என்பதே கை வணங்காமல் போனது. தையல் கடைக்குப் போனாலும் அம்மாதான் வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டும்; வீட்டில் இருந்தாலும் அம்மாதான் வீட்டு வேலைகள் செய்ய வேண்டும். ஒரு முறை நாங்கள் குடியிருந்த வீட்டின் சொந்தக்காரர்கள் அம்மாவைக் கட்டாயப்படுத்தி ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாள் எண்ணெய்க் காப்பு உற்சவத்துக்கு அழைத்துப் போயிருந்தார்கள். அம்மா திரும்பும் பொழுது இரவு பத்து மணி ஆகி விட்டது. அம்மா காலையில் தேய்க்காமல் விட்டுப் போன பாத்திரங்களும், நாங்கள் குளித்துப் போட்ட துணிகளும் அம்மாவுக்காகக் காத்திருந்தன. ராத்திரி பதினொரு மணி வரையில் அம்மா உட்கார்ந்து அத்தனை காரியங்களையும் செய்து விட்டுத்தான் படுத்துக் கொண்டாள். சீதா சொன்ன பதில்: ''நாங்க காரியம் செய்வோம்னு நெனச்சிண்டு நீ வெளியில போய்ட்டு வரலாம் ஹாயான்னு நெனைக்கக் கூடாது.''

முதலில் காயத்ரி வேலைக்குப் போக ஆரம்பித்தாள். நெடுஞ்சாலைப் போக்குவரத்துத் துறையில் அவளுடைய டைப்புக்கும், ஷார்ட்ஹாண்டுக்கும் வேலை கிடைத்தது. எல்டிஸி அளவிலிருந்து ஸீனியர் அக்கவுண்ட்ஸ் ஆபீஸர் ஆகும் அளவிற்கு அவள் தன்னை மாற்றிக் கொண்டாள். ஏழு வருஷம் வேலைக்குப் போனாள். இந்தச் சமயத்தில்தான் எங்கள் அமைப்புக் கொஞ்சம் கொஞ்சமாக மாறியது. டேபிள், சேர் வாங்கினோம்... பிலிப்ஸ் ரேடியோ வந்தது. மாதம் ஒரு முறை எல்லோருமாக ஸெகண்ட் க்ளாஸில் சிவாஜி படம் போக முடிந்தது. பழனி, மருதமலை என்று போனோம். எட்டாவது வருஷம் காயத்ரி ராகவனை அழைத்துக் கொண்டு வந்து அறிமுகப்படுத்தினாள். ராகவன் அவ...

அலுவலகத்தில் ஒரு சக ஊழியன். கல்யாணமாகாதவர். அப்பொழுது சங்கரன் என்ஜினியரிங் கடைசி வருஷம் படித்துக் கொண்டிருந்தான். சீதா பிஎஸ்ஸி முடித்திருந்தாள். எம்எஸ்ஸி, பிஹெச்டி, ரீடர், ரெஜிஸ்ட்ரார் என்ற கனவுகளில் சீதா சஞ்சரித்த காலம் அது. மிக அழகாக முடிச்சு விழுந்தது.

"நான் ராகவனைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்."

"என்னோட படிப்பும், சங்கரனோட படிப்பும் என்ன ஆகும்?" சீதா சீறினாள்.

"ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் ஜூனியர் அஸிஸ்டெண்ட் போஸ்டுக்கு அப்ளை பண்ணு. உனக்கு வேலை வாங்கித் தர்



"என்னோட இந்தக்கதைக்குப்பொருத்தமா ஒரு தலைப்புச் சொல்லுங்களேன்."

"கானல் நீர்!"

"வேண்டாம்... பழைய தலைப்பு! அதே பாணியில் வேற தலைப்புச் சொல்லுங்க!"

"தமிழகத் தேர்தல்!"

— மணியன் தர்மலிங்கம்.

றேன். சங்கரனுக்கு வேலை கிடைக்கும் வரை நீ வேலைக்குப் போ."

"அதை ஏன் நீ செய்யக் கூடாது? எனக்கு எம்எஸ்ஸி பண்ணணும்."

"ஏழு வருஷண்டி நான் வேலைக்குன்னு போக ஆரம்பிச்சு. இருபத்தெட்டு வயசாறது. இத்தனை வயசுக்கப்பறமும் அந்த மனுஷன் கல்யாணம் பண்ணிக்கறேன்னு வந்து நிக்கறார். ஆயுசு முழுதும் இந்த வீட்டுக்கு நான் உழைச்சுப் போடணும்னு சொல்லிடுங்கோ. நான் தயார். கல்யாணமும் வேண்டாம் ஒரு எழவும் வேண்டாம்."

அம்மா தீர்ப்பு சொல்லும் சங்கடத்தில் மாட்டிக் கொண்டாள்.

"நீ ஏன் சீதா வேலைக்குப் போகக் கூடாது?" சீதாவிடம் அம்மா தன் இல்லாமை, வறுமை எல்லாவற்றையும் மனத்தில் நிறுத்திக் கேட்டாள்.

சீதாவுக்கு அது ஒரு தழும்பாகத் தங்கி விட்டது. வெப்பமும், சீற்றமும் கூடியது அம்மாவிடம் எவ்வளவு உக்கிரமாக நடந்து கொள்ள முடியுமோ அவ்வளவுக்கு நடந்து கொண்டாள். யாரை இதில் குற்றம் சொல்வது?

ஆஃபீஸிலிருந்து வந்தால் அம்மா காப்பியுடன் தயாராக நிற்க வேண்டும். காப்பியில் பாலாடை தெரியாமல் கலந்து விட்டால் கூட முகத்தைச் சுருக்கிச் சள்ளென்று விழுவாள். நானும், ரேவதியும் கலங்கிப் போய் நிற்போம். டிஃபன் என்றால் கல்லில் ஒரு தோசையும், தட்டில் ஒரு தோசையுமாக இருந்தால்தான் சாப்பிட உட்காருவாள். அலுவலகத்திற்குப் போய் வேலை பார்த்து விட்டு வருவது மிகப் பெரிய பாரம் போன்ற பிம்பத்தை நிறுவி, அதன் மூலம் எல்லாரிடமும் குறிப்பாக அம்மாவிடம் ஆவேசப்படுவதைச் சீதா வழக்கமாக்கிக் கொண்டாள்.

அம்மா பொறுத்துக் கொண்டாள். சீதாவின் பணம் வேண்டியிருந்தது. அவள் சம்பளத்தில்தான் நான், ரேவதி குறிப்பாக அம்மா மலை போல நம்பியிருந்த சங்கரன் படிப்பு ஓடிக் கொண்டிருந்தது.

"பெண்களுக்குப் பொறுமை கிடையாதும்மா. சகிப்புத் தன்மை கிடையாது. சாதிக்கணுங்கறது நெஜமாகவே மனசுக்குள்ளே இருந்தா ஆத்திரப்படக் கூடாதும்மா. போராடணும். நெனைப்பும், உறுத்தலும் இருந்தாப் போதும். எப்படிப்பட்ட நெலையிலும் சாதிக்கலாம். நிர்ப்பந்தம் வந்தாலே தவிர பெண்கள் சாதிக்கறதில்லை. கல்யாணம், குடும்பம்னு காலை நீட்டிக்கத்தான் பார்க்கறாங்க."

"நான் இன்னும் காலை நீட்டிக்கலை, சிவகு!"

நல்ல நிழல் மரமாகப் பார்த்து, சுமையைத் தரையில் போட்டு விட்டு 'அக்கடா' என்று காலை நீட்டிக் கொள்ள வேண்டும் என்பதுதான் அவளுடைய ஆசை. இருபது வருஷங்களாகத் தூக்கிய சுமை. ஆசைப்பட்டுத் தூக்கிய சுமை என்றாலும் சுமைக்கு உண்டான அத்தனை குணங்களும் மாறவில்லை. அழுத்தியது; வலித்தது.

அம்மா நம்பிய நிழல் மரம் சங்கரன்.

சங்கரனுக்கு பி.ஈ. முடித்த கையோடு பம்பாயில் வேலை கிடைத்தது. தனிமையும், தொலை தூர வேலையும் ஒரு நடுத்தர வர்க்கத்து இளைஞனைச் சுத்தமாகத் திருப்பிப் போட்டு விடும். அம்மா முதலில் சம்மதிக்கவில்லை. சங்கரன் மீறினான். அம்மா அவனுடன் போக விரும்பினாள். காயத்ரியின் பிரசவமும், சீதாவின் கல்யாணமும் அவளை அவனுடன் போக விடாமல் தடுத்தன. காயத்ரிக்கு மாமனார் மாமியார் கிடையாது.

"நீ என்னோட வந்து இருந்துடும்மா. ரெண்டு பேரும் ஆபீஸுக்குன்னு போயிட்டா வீட்டில் குழந்தையைப் பார்த்துக் கொள்ள ஆள் வேணும்" என்று

சமைக்க... ருசிக்க... சாப்பிட...!

— வண்ணப் படங்களுடன் இலவச இணைப்பு —

திட்டமிடுதல் ரொம்ப முக்கியம்!

டைரக்டர் விஜயநிர்மலா சிறப்புப் பேட்டி

ஊருக்குப் போனபோது...

— பரிசுக் கட்டுரைகள் —

மங்கையர் மலர்

ஆகஸ்டு '88

காயத்ரி கட்டாயப்படுத்தினாள்.

பிரசவம், குழந்தை என்று இன்னொரு சக்கரம் சுற்ற ஆரம்பித்தது. அம்மாவின் ஓட்டம் நிற்கவில்லை.

''எனக்கு வயசாறதுடா சிவசு. தள்ளலை. ப்ரஷர், ரத்தம்னு செக் பண்ணலை. பெண்களால் வேலைக்குப் போய்ட்டு வீட்டு வேலையும் பார்க்கிறது கஷ்டம்தான். ஆனா வேலைக்குப் போற பெண்கள் வீட்டில் என்னைப் போல் வயசானவங்க ஒண்டியா வீட்டு வேலை செய்யறதும் கஷ்டம்தான். கார்த்தால அஞ்சு மணிக்கு எழுந்தால் சரியா பத்தாறது படுத்துக்கறச்சே.''

அம்மாவின் ரத்த அழுத்தம் முதன் முதலில் அதிகமானது சங்கரனைப் பற்றிய விஷயம் ராகவன் மூலமாகத் தெரிந்த பொழுதுதான். சங்கரன் விஷயத்தை முதலில் அம்மாவிடமிருந்து ஆரம்பிக்கவில்லை. ராகவனிடமிருந்து ஆரம்பித்தான். பம்பாயில் பிரெஞ்சு வகுப்பில் பிரெஞ்சு கற்றுக் கொள்ளப் போயிருக்கிறான். போன இடத்தில் பம்பாயில் பெரிய மில் முதலாளியின் மகள் எமிலி ஜோசஃபைனைப் பார்த்திருக்கிறான். எமிலி மிகப் பிரமாதமான அழகி. சங்கரனை அவளுடைய அழகு ஈர்த்தது. எமிலியை அவனுடைய தாக்கும் கம்பீரம் ஈர்த்தது. கடைசி வரையில் இரண்டு பேரும் ஃப்ரெஞ்ச் கற்றுக் கொள்ளவில்லை என்பது முக்கியமான விஷயம்.

அம்மாவால் இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. ஒரு வாரம் கழித்து லேசாக மயக்கம் வருகிறது என்றாள். டாக்டரிடம் காட்டினால் மிக மோசமான அளவுகளில் உயர் ரத்த அழுத்தம் இருப்பதால் ஒரு வாரம் ஆஸ்பத்திரியில் 'பெட் ரெஸ்ட்' வேண்டும் என்று சொல்லி விட்டார். எங்களுக்கு பயமாய்ப் போனது. அதன் பிறகு அல்லோபதி, ஹோமியோபதி என்று அம்மா சீரழிந்தாலும் அவளுடைய ரத்த அழுத்தம் மட்டும் மாறவே இல்லை.

அம்மா மெள்ள, மெள்ளச் சாக ஆரம்பித்தாள்.

என்னுடைய படிப்பு முடிந்து எனக்கு ஒரு நல்ல வேலை கிடைக்கும் வரையில் அம்மா காயத்ரி வீட்டில் கொஞ்ச வருஷம், சீதா வீட்டில் கொஞ்ச வருஷம் என்று அவளுடைய சக்தியை மீறி மனம், உடல் எல்லாவற்றையும் இழக்கத் தொடங்கினாள்.

''என் விதி இது சிவசு! பொருளாதார அமைப்பு மாறினாலும் நடுத்தரவர்க்கத்து வயதானவர்களின் விதி இது.''

''நான் மாத்திக் காட்டறேம்மா.''

''முடியாது சிவசு.''

''ஏம்மா?''

''உன்னை விடச் சங்கரனை நம்பினேன். ஒரு ஏழைத் தாய்க்கு அவன் பையனை விட்டால் நல்ல காவடி கிடைக்குமா? அவன் காவடி பாரம் தோளை அழுத்தறதுன்னு எறக்கி வெச்சுட்டான். ஒரு வேளை நான் சாகிற வரைக்கும் நடந்துதான் போகணும்னு என் மனசைத் தேத்திண்டிருந்தா எனக்கு இந்தத் தொந்தரவு இருந்திருக்காது. காவடியில் சொகுசா உக்காந்து போகணும்னு ஆசைப்பட்டதுதான் தப்பு.''

''காவடியை நான் தூக்கறேம்மா.''

''நீயும் காவடி பாரம்னு எறக்கி வெச்சிட்டேன்னா?''

''மாட்டேம்மா.''

''எப்படி சொல்றே?''

''சின்ன வயசுல எங்களுக்கெல்லாம் ஆதி சங்கரர் கதை சொல்லுவியே ஞாபகம் இருக்கா?''

''ஆமாம்.''

''அது எனக்கு உடன்பாடில்லைம்மா!''

''ஏன் சிவசு?''

''சங்கரரை மானிடனாகவும் சித்திரிக்க முடியாமல், அவதார புருஷனாகவும் சித்திரிக்க முடியாமல் போனதன் குழப்பம் இது. தாய்மை சாதாரண விஷயமில்லைம்மா. எனக்கு என் சன்யாசமும், வேதமும் பெரிசுன்னு உதறித் தள்ளிட்டுப் போகக் கூடாதும்மா. அம்மாவை விட வேதம் பெரிசில்லை.''

''தப்பு சிவசு! மகானைப் பத்தி அப்படி சொல்லாதே''

''நம்முடைய புராணம், நம்முடைய சட்டம், சாஸ்திரம் எல்லாமே ஆண்களால் எழுதப்பட்டது. அதில் பெண்களுக்கு இடமில்லை.''

''பரமாச்சாரியாள் அம்மாவை ஒண்ணும் நிர்க்கதியா விட்டுடலியே. கடைசியில் கொள்ளி போட வராரே?''

''கொள்ளி போட மட்டும் வந்தால் ஆச்சாம்மா? பையன் கையால் கொள்ளி வாங்கிக்க மட்டும்தான் அம்மாவுக்குப் பாத்யதை உண்டா? அவனோட வாழறதுக்கும் பாத்யதை உண்டு.''

''ஆச்சாரியாள் லோக க்ஷேமத்துக்காகப் பெத்த அம்மாங்கற பந்தத்தைக் கூட உதறினது பெரிய விஷயமில்லையா சிவசு?''

''பரமாச்சாரியாளே உதறிட்டுப் போனாரே நாம பண்ணக் கூடாதாங்கற நெனப்பு அல்பங்களுக்கு வந்துடும்மா. என்னோட தர்மம் இது. உன் அந்திமக்காலம் வரை நீ என்னோடதான் இருக்கப் போறே. உன்னை எவ்வளவு தூரம் அன்போடும், பரிவோடும் கவனிச்சுக்க முடியுமோ அவ்வளவு தூரம் கவனிச்சுக்கப் போறேன். எனக்குக் கல்யாணம் கிடையாது. வம்ச விருத்தியில் நம்பிக்கை இல்லை. வம்ச விருத்தி கூட ஆண்களின் தற்காப்பு விதிதான். உன் சந்தோஷம்தான் என் சந்தோஷம்!''

இதைச் சாதிக்க நான் நிறைய சிரமப்பட வேண்டியிருந்தது. காயத்ரியும், சீதாவும் அம்மா தங்களுடன் வந்து இருக்கப் போவதில்லை என்பதால் உண்டான கோபத்தை

வெளிப்படையாகக் காட்ட ஆரம்பித்தார்கள்.

''உனக்குன்னு குடும்பம், மனைவின்னு அமையலைன்னா பின்னால் நிண்டாடுவே''

''கவலையில்லை. அம்மாதான் என் குடும்பம்.''

''அப்படியென்ன அம்மா உனக்கு மந்திரம் போட்டான்?''

''அனாவசியமாகப் பேசாதே. நான் கொலைகாரனா மாறிடுவேன்.''

நான் அசையாமல் நிலையாக இருந்தேன்.

அம்மாவை என்னுடன் நான் வேலை பார்க்கும் ஊருக்குக் கொண்டு போனேன். ஆறு வருஷங்கள். அம்மாவுக்குப் பிடித்த எம்.எஸ். கேஸட்டுகளை வாங்கிக் கொடுத்தேன். அம்மா எம்எஸ்ஸோடு சேர்ந்து குரல் இழைய இழையப் பரிபூர்ணகாம வும். மாலைப் பொழுதினிலே ஒரு நாளும் பாடும் பொழுது அற்புதமாக இருக்கும். அம்மாவுக்கு உள்ளே ஒரு சங்கீதக் கனல் இருந்தது. அம்மாவின் பழைய வயலினைப் பரணிலிருந்து எடுத்து, தூசி தட்டி, தந்திகளைச் சரி பண்ணி அவளை வாசிக்கச் சொன்ன பொழுது அவள் முகத்தில் சோகம், வெட்கம், ஆனந்தம் எல்லாம் கலந்து ஒரு பாவனை எழுந்தது. அது எந்த ஓவியனாலும் படம் வரைய முடியாத பாவனை. ஸ்வரம் சரியாகப் பிடிபடாமல் அவள் வயலினை இழுத்து, பிறகு கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி ஸ்ரீரஞ்சனியில் ஸரிஎவ்வரே வாசித்த பொழுது ''பிரமாதம்மா'' என்றேன். அம்மா வாசிப்பதை நிறுத்தி விட்டு ''போதும் சிவசு என்னால முடியலை'' என்று அழுதாள். அவள் அழுகையில் என் ஆதரவில் கிடைக்கும் நிம்மதியும், சந்தோஷமும், மற்ற குழந்தைகளினால் கிடைக்கும் நிராதரவும் ஏற்படுத்திய பேத ஒப்புமை புரிந்தது. படிப்பதற்கு நல்ல புஸ்தகங்கள் வாங்கிக் கொடுத்தேன். லக்ஷ்மியின் மிதிலா விலாசிலும், அரக்கு மாளிகையிலும் அம்மா மனசைப் பறி கொடுத்தாள். அவள் உடல் அசௌகரியப்படாமல் உடுப்பி, கொல்லூர், சிருங்கேரி, காளஹஸ்தி என்று புண்ணிய தலங்களுக்கு அழைத்துப் போனேன். என்னுடன் அவள் சந்தோஷமாக இருந்தாலும் மனத்தடியில் எப்பொழுதும் ஒரு சோகம் ஓடிக் கொண்டிருந்தது.

''எனக்கு இது போதும் சிவசு. பட்டினி கெடக்கறவனைக் கல்யாண பந்தில உக்கார வெச்ச மாதிரி இருக்கு. மூச்சு முட்டறது. நீ எப்போ குடும்பஸ்தனாகப் போறே?''

''நீ என்னை வளர்த்துப் பெரியாளா மாத்தியிருக்கியே அதுக்கு இது வாயளவிலான நன்றி உச்சரிப்புதாம்மா. இது புத்ர தர்மம். என்னை வற்புறுத்தாதே.

அம்மாவின் நினைவில் தங்கிப் போன காயங்கள் மெல்ல மெல்லப் பெரிதாகி 'ப்ரெயின் ஹெமரேஜி'ல் அம்மா செத்துப் போனாள்.



அரசன்: என் தாத்தாவின் ஆட்சி, என் அப்பாவின் ஆட்சி, என் ஆட்சி மூன்றையும் சுருக்கமாக வர்ணிங்க, பார்க்கலாம்!

அமைச்சர்: பொற்காலம் — நற்காலம் — போதாத காலம்!

— உ. ராஜாஜி.

சங்கரன் வந்து சேரும் பொழுது அம்மாவின் உடல் இன்னும் மோசமாகி விட்டது. அவன் வந்ததும் அழவில்லை. வருத்தப்படவில்லை. ''சிவசு! உனக்கென்ன பைத்தியமா? பிணத்தை நாற வைக்கற வரைக்கும் காத்திருக்கணுமா?'' என்று என்னிடம் இரைந்தான். ''அது பிணமில்லை. அம்மாவின் உடல்'' எமிலி ஒரு விநோதப் பொருளாக அவனுடன் நின்று கொண்டிருந்தாள்.

"I am very eager to see Hindu Ceremonies" என்றாள்.

சங்கரன் சடங்கு சம்ப்ரதாயத்தில் எனக்கு நம்பிக்கையில்லை'' என்றான்.

''தெரியாது என்று சொல்.''

"Whatever it may be".

''அதெல்லாம் நான் பார்த்துக்கறேன். கொள்ளி மட்டும் நீ வெச்சா போதும். அம்மா கட்டை அப்பத்தான் வேகும்னு ஒரு அல்ப ஆசை சங்கரா, மாட்டேன்னு சொல்லாதே!'' அவன் கையைப் பிடித்துக் கெஞ்சினேன்.

பாடையின் ஒரு பக்கத்தைச் சங்கரன் தூக்கினான். நான் சில்லு பெயர்ந்த ஓட்டைப் பானையில் தண்ணீர் தூக்கினேன். அம்மாவைச் சிதையில் வைத்து வாய்க்கரிசி போடும் பொழுது மட்டும் என்னை என்னால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. குமுறி, குமுறி அழுதேன்.

சங்கரன் என் தோள்களில் கை வைத்து அழுத்தினான். திரும்பிப் பார்த்தேன். அவனும் கலங்கிப் போயிருந்தான்.

''முன்னேற வேண்டும் என்பதால் நாமெல்லாம் சுயநலவாதிகளாகி விடுகிறோம்'' என்றான்.

அம்மா கதை சொல்வதை நிறுத்தி விட்டு, ''என்ன சங்கரா! நான் செத்துப் போனால் எங்கே இருந்தாலும் கொள்ளி போட வருவியா?''

சங்கரன் அழுது கொண்டே சொன்னான்: ''இப்படியெல்லாம் பேசாதேம்மா. நீ சாகவே மாட்டே.''

சங்கரன் நெய்ப் பந்தத்தைக் கையில் எடுத்துச் சிதையில் வைத்தான். சிதை நன்றாகப் பற்றிக் கொண்டு எரிய ஆரம்பித்தது.



1

ஷில்பாவைச் சந்திக்கும் முன், அவள் இருக்கும் வீடு.

அண்ணா நகரின் பிரதான சாலை. வெள்ளமான போக்குவரத்து. ஹாரன் ஒலிகள். ஒரு நாளின் பதினெட்டு மணி நேரமும் சுறுசுறுப்பாக இருக்கும் பிரதான சாலையில் இருந்து சற்று ஒதுங்கி வந்தால் அந்த நான்கு அடுக்கு தீப்பெட்டி கட்டடம்.

ஒரு மாடிக்கு நான்கு ஃப்ளாட்கள் வீதம் வகுக்கப்பட்ட அந்தக் கட்டடத்தின் மூன்றாவது தளத்தின் இரண்டாவது ஃப்ளாட், ஷில்பா இருக்கும் ஃப்ளாட்.

மாடிப் படியில் புகை பரவிப் பரவி அங்கங்கே பழுப்பான, கறுப்பான வெள்ளைச் சுவர். படிகள் மேல் நோக்கி ஏற வளையும் போது, தவறாமல் வெற்றிலைச் சாற்றின் படு சிவப்பான புளிச் டிஸைன்கள்.

ஷில்பாவின் வீட்டுக் கதவு போன நூற்றாண்டில் பெயிண்ட் பார்த்ததோடு சரி. கதவின் மேல், பொம்மையிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட கமல்ஹாசன்.

கதவின் அந்தப் பக்கம் நான்கு ஜோடி செருப்புகள். தேய்ந்தவை. திறந்த கதவு வழியே சுர விறகுப் புகை. காஸ்–ஸ்டவ் உலகில் விறகு அடுப்பு!

அடுப்பின் மேல் வாணலி. வாணலியில் கொஞ்சம் மணல். மணலில் பொறியும் மெருன் நிற வேர்க்கடலைகள். குனிந்து அடுப்பை ஊதிக் கொண்டிருந்த பெண் திரும்பிப் பார்த்தாள். கன்னத்தில் அடுப்புக் கரி, நெற்றியில், மேல் உதட்டில் வியர்வை.

வெயிட். இவள் ஷில்பா இல்லை. ராணி. ஷில்பாவின் அக்கா. ஒரே ஒரு வயது வித்தியாசம். ஒரே ஒரு வயது – ஜூபிடர் ரத்தினத்தின் அவசரம் காரணமாக.

''திலகா'' என்று கூப்பிட்டாள் ராணி. மூக்கருகே வந்து கிச்சுகிச்சு மூட்டும் தலை முடிக் கற்றையைக் கரி படிந்த விரல்களால் ஒதுக்கிக் கொண்டாள். குரல் கொடுத்தது உள்ளறையைப் பார்த்து: ''ஆச்சா?''

உள்ளறையில் தேங்காய் நார் எட்டிப் பார்க்கும் சோபாவின் ஆக்ரமிப்பிற்குப் பின்னே, கறுப்பு–வெள்ளை டெலிவிஷனின் முன்னே உட்கார்ந்திருந்த திலகா விருட்டென்று நிமிர்ந்தாள். டி.வி.யில் வால் பூம் சாகடிக்கப்பட்டு, மௌன பிம்பங்கள் ஆடின. வாயசைத்தன. அந்தப் பிம்பங்களில் லயித்திருந்த திலகா, அக்காவின்

நீரில் மிதக்கும் நிலா


சுபா

குரல் கேட்டதும், மேற்கொண்டு கடலையை உரிக்க ஆரம்பித்தாள்.

நிலகாவுக்குப் பூசின மாதிரி உடம்பு. ராணிக்கு இருக்கும் அதே மூக்கு. பாவாடை, சட்டை. ஷில்பாவிற்கு மூன்று வயது சிறியவள். முடி அவளுக்கும் கத்தரித்து விடப்பட்டு, காதருகே தலை நீக் கேள்விக் குறியாய்த் தொங்கியது.

''இந்த அப்பாவுக்கு ஒசில கெடைச்சா போதும். யானையைக் கூட கொண்டாந்து கொடுத்து, வெட்டிக் கறிக் கொழம்பு வைடின்னுவாரு'' என்று அவள் முணு முணுத்தது அவள் அப்பா காதில் விழவில்லை.

அந்த எட்டுக்கு ஆறு அறையை ஒட்டி இன்னொரு சின்ன அறை. கட்டிலில் ஜூபிடர் ரத்தினம் உட்கார்ந்திருந்தார். இருப்பதிலேயே கொஞ்சம் சுமாரான வெள்ளை வேஷ்டி கட்டியிருந்தார்.

சந்தன நிறத்தில் பளபளப்புடன் கூடிய நார்ப்பட்டு அரைக்கை சட்டை அணிந்திருந்தார். மேல் உதடுக்கும், மூக்குக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் மீசை. முழுவதும் நரைத்திருந்தது. வட்ட ஃப்ரேமுடன் கூடிய கண்ணாடி, தலைமுழுக்கக் கறுப்பு முடி. கலைந்திருந்தது. முடி கறுப்பாக இருந்ததற்கு ஜூபிடர் ரத்தினம் ஒரு மேக்கப் மேன் என்பதுதான் காரணம் என்பது வெளியில் தெரியாது. அவ்வளவு சாமர்த்தியமான டை.

''பாரு, பாப்பா, உதட்ல இன்னும் கொஞ்சம் கிளிசரின் தடவிக்கோ. செவப்பை எடுத்துக் கொடுக்கும். சீக்கிரம் ஆவட்டும்மா'' என்றார்.

அவருக்குச் சற்றுத் தள்ளி அவருக்கு முதுகு காட்டி நின்றிருந்த ஷில்பா கையிலிருந்த கண்ணாடி வழியாகத் தெரிந்த அப்பாவைப் பார்த்தாள். உதட்டை ஒரு முறை சுழித்தாள். கண்ணாடியைக் கட்டில் மீது வீசினாள். லிப்ஸ்டிக் ஸ்டிக்கை, மர ஸ்டாண்டில் உருட்டினாள். திரும்பினாள்.

ஷில்பா. ஷில்பா. ஷில்பா. ஷில்பா. ஷில்பா. ஷில்பா!

இவள்தான். நிச்சயம் இவள்தான்.

ஜூபிடர் ரத்தினத்திற்குத் தவறிப் பிறந்துவிட்டவளாக இருக்க வேண்டும். அவளுடைய கைகள், கால்கள், கன்னங்கள், கழுத்துப் பகுதி, மூக்கு, மோவாய், எந்த இடத்திலும் ஒரு வேண்டாத பொறி இல்லை. மழ மழ மழ மழ. பொன் நிறத்தில் இருந்தாள். புடைவைதான் கட்டியிருந்தாள். சற்று இறுக்கமாகக் கட்டியிருந்தாள். அவளுடைய உடலின் வளைவுகள் அவ்வளவு அற்புதமாக அமைவதற்கு அவளைப் படைத்த பிரம்மன் நீண்ட நேரத்தைச் செலவிட்டிருக்க வேண்டும். பெரிய கண்கள். அவ்வளவுதான் சொல்ல முடியும். இமைகளின் விளிம்பில் ஐ-லைனரைக் கத்தியால் கீறி விட்ட மாதிரி ஓடவிட்டிருந்தாள். அந்த இமைகளை ஒரு முறை திறந்து மூடினாள். மூக்கு படு கூராக இருந்தது. 'ஐயோ, ரொம்ப சின்ன மூக்கு' என்று உதாசீனப் படுத்த முடியாத, 'ச்சே, எவ்வளவு பெரிய மூக்கு' என்று விலகி ஓட வைக்காத ஒரு மூக்கு. மாதுளை முத்துக்களின் நிறத்தில், அப்போதுதான் பூத்த ரோஜாவின் நிறத்தில் உதடுகள். சிறிய உதடுகள்.

ஷில்பாவை ஒரு முறை பார்ப்பவர்கள் தடுமாறாமல் இருக்க முடியாது. ஷில்பாவுடன் ஒரு முறை பேசியவர்கள் ஏங்காமல் இருக்க முடியாது.

ஸாரி. ஷில்பாவைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம். அப்புறம். அப்புறம்.

ஷில்பா, திரும்பி ஜூபிடர் ரத்தினத்தைப் பார்த்த பார்வையில் கோபம் கலந்து இருந்தது.

''பாருப்பா. அம்மா எனக்கு அழகா சாந்தான்னு பேரு வச்சிருக்குது. ஸ்கிரீன் டெஸ்டுக்குப் போனப்ப டைரக்டரு, 'ஒனக்குச் சாந்தாங்கற பேரு வேணாம். ஷில்பான்னு வெச்சிக்கோ. நல்லா கவர்ச்சியா இருக்கும்னு' சொல்லியிருக்காரு. நீயும் மூச்சுக்கு ஒரு தடவை ஷில்பா, ஷில்பான்னு கூப்பிட்டியே. இப்ப எதுக்கு மறுபடியும் பாப்பான்னு கூப்புடறே. இன்னொரு தடவை பாப்பான்னு கூப்பிட்டுப் பாரு.. நான் ஸ்டுடியோ பக்கமே தலை வெச்சிப் படுக்க மாட்டேன்...''

''கோச்சிக்காதே பாப்... ஷில்பா... ஒரே ஒரு தடவை உன்னை ஸ்க்ரீன்ல பாத்துட்டாப் போதும்மா. நான் சந்தோசமா செத்துப்போய்டுவேன். நான் மேக்கப்மேனும்மா. ஜூபிடர் கம்பெனி காலத்திலேர்ந்து கையில் ஸ்பாஞ்ச் புடிச்சவன். பான் கேக் தடவுனவன். எந்த மூஞ்சி ஸ்க்ரீன்ல நின்னு வெளையாடும், ஆடாதுன்னு எனக்குத் தெரியாதாம்மா? உன்னைக் கொழந்தையா இருந்ததிலேர்ந்து பாப்பான்னு கூப்பிட்டே பழக்கம். திடீர்னு ஷில்பாவா மாத்த முடியுமாம்மா?''

''நான் நடிச்சி ஸ்டாரா ஆயிட்டா, நீ அந்தப் பணத்தில் குளிர் காயணும்னு நெனைச்சிட்டிருக்கே. சரி... போ. ஆட்டோ கூட்டிக்கிட்டு வா. இப்பவே டயம் ஆய்டிச்சி...''

''காசும்மா?''

''அம்மா உண்டியிலேர்ந்து எடுத்துக்கயேன்''

''நீ என்னா சொல்லியோ, ஏது சொல்லியோன்னு உண்டியலைத் தொடலை...''

''சரி... போ... திருட்டுத்தனமா எடுக்கறப்ப எங்கிட்ட சொல்லிட்டா எடுக்கறே. போப்பா, பார்த்துக்கிட்டு நிக்காதே. நேரம் ஆவுது...''

ஷில்பா புடைவைத் தலைப்பை ஒரு முறை இரண்டு கைகளாலும் விரித்துப் பிடித்துப் பார்த்து மார்பில் படர விட்டுக் கொண்டாள். அறையை விட்டு வெளிப்பட்டாள்.

அறைக்கு வெளியே புகை பரவி இருந்

தது. ராணி எதிர்ப்பட்டாள்.

''எனக்குப் போய் ராணின்னு பேரை வச்சாங்களேடி. நீ தாண்டி ராணி. போய்ட்டு வா. அம்மா படத்தை ஒரு தடவை கும்புட்டுக்கோ. நீ பெரிய ஸ்டாரா ஆவலைன்னா கூட பரவாயில்லைடி. மூனு வேளைக்கு ஒழுங்கா நம்ம எல்லாருக்கும் சோறு கெடைச்சா போதும். நான்தான் படிக்காத முண்டம். சமையக்கட்டே கதி. நீ படிச்சவதானே? கதை, அது இதுன்னு பேசறவதானே? சாமர்த்தியமாப் பேசி ஒரு வேலையாவது வாங்கிட்டு வாடி'' என்றாள் ராணி. ஓர் அலுமினியத் தட்டில் வறுத்த கடலையைப் போட்டு நீட்டிக் கொண்டே.

''என்னாக்கா அது?'' என்றாள் ஷில்பா. ராணியின் கரி படிந்த முகத்தில் பார்வையைப் பொருத்தி. ''மூஞ்சியெல்லாம் ஒரே கரி!''

கதவைத் திறந்து ஜுபிடர் ரத்தினம் எட்டிப் பார்த்தார். ஐம்பது வயது. வேகத்தைத் தாங்காமல் மூச்சிரைத்தது.

''பாப்பா... ஷில்பா... ஆட்டோ ரெடிம்மா'' என்றார்.

ஷில்பா அம்மாவின் படத்திற்கு முன்னால் போய் நின்றாள்.

''**ஏ**ன்யா, பத்துப்படம் பண்ண ஆர்ட்டிஸ்டா இந்தக் காமினி. பத்துப் படம் பண்ணவளாய்யா? தூத்தெரி. ஒரு க்ளோஸ்—அப். அதுல ஒழுங்கா பல்லைக் காமிக்காம சிரிச்சா மாதிரி மூஞ்சைக் காமிக்கத் தெரியலை. பாட்ச் ஓர்க்ல பத்து டேக்குன்னு சொன்னா சிரிப்பான்யா இண்டஸ்ட்ரில. ஏன்? முதல்ல எடுத்த ஸீன்ல என்ன கோளாறாம்? லேசு பாசா காமினியோட மார் தெரிஞ்சி போய்டுச்சி.. அதுக்குப் போய் சென்சார்ல கத்திரி போட்டானுங்களே... காமினிக்கு எங்கெங்கே மச்சம் இருக்குன்னு லிஸ்ட் போட்டு ஸ்கிரீன்ல காட்டின டைரக்டரைப் பத்தி சொல்லட்டுமாய்யா நான்? ஏய்... அஸிஸ்டெண்ட் டைரக்டரு... போ... காமினி ஆப்பிள் ஜூஸ் குடிச்சிட்டிருக்கா. குடிச்சி முடிச்சவுடனே நீயே அந்த க்ளோஸ்—அப்பை எடுத்து அவளை செட்லேர்ந்து துரத்தியடி. இனிமே நம்ம படத்துக்குப் புது ஹீரோயின்தான். போய்யா... எம் மூஞ்சையே பார்த்துக்கிட்டு... செங்கல்பட்டு முடிவாச்சா இல்லியா... கிளப் டான்ஸ் வேணும்னு அடம் பிடிச்சிருப்பானே... போ... எப்படியாவது சமாளிங்க... இந்தப் படத்துக்கு இதுக்கு மேல நம்மால அவஸ்தைப்பட முடியாது... அடுத்த கதையே ரெடியாகலே... நாளன்னிக்கு அவுட்டோர். அஸ்வின் குமாரோட கால்ஷீட் வேற... போய்யா... போன்னா... போ.... போ. கெட் லாஸ்ட்...''

இளங்குமரன் கத்தி விட்டு அடர்த்தியான தலைமுடியை ஒரு முறை விரல்களால் ஊடுருவிக் கலைத்தான். அடர்த்தியான மீசையை ஒருமுறை கட்டை விரல் ஆட்காட்டி விரல் நகங்களுக்கு இடையில்



''உங்களுடைய அடுத்த படம் என்ன?''

''ஆயிரம் தலைவாங்கிய ஆட்டோ சங்கர்.''

— எஸ். பிரியதர்சினி.

வைத்து, பிடுங்கி, பிடுங்கி, பிடுங்கி... வலித்தது. விட்டு விட்டான். சட்டைப் பாக்கெட்டில் இருந்த சிகரெட் பாக்கெட்டில் இருந்து ஒன்றை உருவிப் பற்ற வைத்தான்.

அவனிருந்த இடத்தை ஒரு முறை எரிச்சலுடன் சுற்றிப் பார்த்தான். தரையில் கன்னா பின்னா என்று ஒயர்கள் ஓடின. லைட்ஸ்—ஆன் குரலுக்காகப் பையன் ஒருவன் காத்திருந்தான். தரையில் அடிக்கப்பட்டிருந்த பளிங்குக் கல் டிஸைன் பெயின்டில் அழுக்கு. இளங்குமரன் கால் ஷூவால் ஒரு முறை தரையை உதைத்தான்.

செட்டின் மூலையில் இருந்த ஓர் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போய் விட்டான்.

செட்டில் ஓர் ஓரமாய் காத்துக் கொண்டிருந்த பிருத்விராஜ் பெருமூச்சு விட்டான். அவன் அந்த ஸ்டுடியோவிற்குள் நுழைந்து நான்கு மணி நேரமாகிறது. ஒரு காப்பி சாப்பிட வெளியில் போகக் கூட பயமாய் இருந்தது. காப்பி சாப்பிட்டால் ஜிப்பாவில் இருக்கும் இருப்பு குறைந்து விடும். இளங்குமரன் அந்த நேரம் பார்த்து வெளியே போய் விட்டால் அப்புறம் மறுபடி எப்படித் தேடிப் பிடிப்பது?

பிருத்விராஜ் களைத்துப் போன முகத்தை ஒரு முறை கையால் துடைத்துக் கொண்டான். காலின் நிலையை ஒரு முறை மாற்றிக் கொண்டான். எப்படியும் இன்றைக்கு டைரக்டரைப் பார்த்து விடுவது என்று தீர்மானித்தான்.

யார், யாரோ டைரக்டராக வந்து என்னென்னவோ பட்டப் பெயர்களை எல்லாம் சுமக்கும் போது, தனக்கு நிச்சயம் ஓர் இடம் கிடைக்கும் என்று நம்பினான். மீசையை லேசாகத் திருகி விட்டுக் கொண்டான்.

அவன் எதிரே யாரோ இரண்டு காக்கிச் சட்டை ஆசாமிகள் பரபரப்பாக இரண்டு ஸ்டூல்களைக் கொண்டு வந்து போட,

இரண்டு பெண்கள் அந்த ஸ்டூலில் வந்து உட்கார்ந்தார்கள். இரண்டு பேருமே மின்னும் அழகில் இருந்தார்கள். அடுத்த படத்திற்கு ஒரு வேளை 'புக்' ஆகியிருக்கிறார்களோ?

டைரக்டர் இருந்த அறைக் கதவு திறக்கப்பட்டு, இளங்குமரனின் கோபமான குரல் மட்டும் முதலில் வெளியே பாய்ந்தது. ஒரு நாற்பது வயது ஆசாமி ஃப்ளாஸ்கைத் தூக்கிக் கொண்டு காப்பியோ, ஹார்லிக்ஸோ, விஸ்கியோ, பிராந்தியோ வாங்கி, வர ஓடினான்.

இன்னொரு சின்னப் பையன் கையில் சிகரெட் பாக்கெட், வெற்றிலை சகிதம் அறைக் கதவைத் திறந்து உள்ளே போனான்.

அவர்களுக்கெல்லாம் அங்கீகாரம் இருக்கிறது.

''தம்பி'' என்றான் பிருத்விராஜ் வெளியே வந்த இன்னொரு பையனை நோக்கி.

ம்ஹூ ஹூம். 'தம்பி' அவன் இருப்பதையே மதிக்கத் தயாராய் இல்லை.

பிருத்விராஜ் சுற்று முற்றும் பார்த்தான். ஓர் ஓரத்தில் தங்க நிற வர்ணம் பூசப்பட்ட ஒரு ராஜா கால அரியாசனம் காலியாக இருந்தது. உட்கார்ந்தான். அப்பாடா என்றிருந்தது. கால் மீது கால். படு சௌகரியமாக இருந்தது.

அங்கிருந்து வாசலைப் பார்த்தான். வாசல் கதவிற்கு வெளியே, போர்டிகோ தூணுக்குப் பக்கத்தில் ஓர் ஆட்டோ நின்றிருந்தது. ஆட்டோவிலிருந்து அவள் இறங்கினாள்.

கிடு கிடுவென உள்ளே ஓடி வந்தாள்.

அவனைப் பார்த்ததும் நின்றாள்.

பிருத்விராஜ் ஒரு கணம் தன்னை மறந்து, தன் நிலையை மறந்து அவளைப் பார்த்தான்.

அவள் பிருத்விராஜை நெருங்கிக் கைகளைக் கூப்பினாள்.

''டைரக்டர்?''

''உள்ளே இருக்கார்'' என்றான் பிருத்விராஜன்.

''வரச் சொல்லியிருக்காருங்க... என்னை மட்டும் உம்ல போக பர்மிஷன் குடுங்களேன்'' என்றாள் அவள் சுற்றிக் காத்திருந்தவர்களைப் பார்த்து.

''நான் வாட்ச்மேன் இல்லியே. நானும் டைரக்டரைப் பார்க்கத்தான் வெயிட் பண்றேன். கொஞ்சம் இருங்க. மூணாவது ஸ்டூல் வரும். உக்காரலாம்'' என்றான் பிருத்விராஜ்.

''ஷில்பா... இந்த ஆட்டோக்காரனுங்களே இப்படித்தான். ஏத்திக்கறப்ப ஒரு பேச்சு. எறங்கறப்ப ஒரு பேச்சு.. டைரக்டரு இருக்காரா...''

'ஷில்பா' என்று சொல்லிப் பார்த்துக் கொண்டான் பிருத்விராஜ். அந்தப் பெயரிலேயே தேன் தடவப்பட்டு இருந்தது.

ஷில்பா இன்னொரு ஸ்டூலில் உட்காரப் போன நேரம், கதவு திறந்து இளங்குமரன் வெளிப்பட்டான்.

''என்ன அஸிஸ்டென்டுங்கடா நீங்க... ஒரு கதையை ஒழுங்கா வளர்க்கத் தெரியலை... அவுட்டோரும் கெடையாது. ஒண்ணும் கெடையாது. அஸ்வின் குமாரோட கால்ஷீட்டை வேற எவனுக்காவது விக்கச் சொல்லுங்க... போங்க. எல்லாம் பிரியாணி சாப்பிடுங்க... ஆட்டு மூளை தாண்டா அத்தனை பெருக்கும்...''

பிருத்விராஜ் ''சார்'' என்றான்.

''யார்?'' என்று திரும்பினான் இளங்குமரன். ''நீயாய்யா?'' என்றான் எரிச்சலுடன். ''என்னய்யா பொல்லாத கதை சொல்லிடப் போறே? நாங்களும் தான் சிகரெட்டா குடிச்சி யோசிக்கிறோம். எங்களுக்குத் தோணாத கதை உனக்குத் தோணிடப் போவுதா? பேர் என்ன சொன்னே?''

''பிருத்விராஜ் சார்''

இளங்குமரன் ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான்.

''நீ என் காருக்கு வா'' என்றான். பரபரவெனக் கிளம்பினான்.

''சார்'' என்றாள் ஷில்பா.

இளங்குமரன் நின்று திரும்பி ஷில்பாவைப் பார்த்தான். ஷில்பாவிற்குப் பக்கத்தில் இருந்த இரண்டு பெண்களைப் பார்த்தான்.

''என்ன?''

''வரச் சொல்லியிருந்தீங்களே சார்''

''ஆமா. சொன்னேன். என்ன இப்ப? இப்ப போவச் சொல்றேன். போங்க. எல்லாம் போங்க. கதையே தீர்மானம் ஆவலை. அதுக்குள்ள ஹீரோயின். டேய் வடிவேலு... காரை எடுக்கச் சொல்லு. நீ வாய்யா பிருத்விராஜ். ஸ்டுடியோவுக்குள்ள வந்து சம்புக்கையைத் தேடாத. என்ன கதை வெச்சிருக்கே. பொல்லாத கதை சொல்லு... காலைலேர்ந்து நச்சரிச்சிட்டிருக்கியே...''

இளங்குமரன் முன்னால் போனான்.

பிருத்விராஜ் நின்று பின்னால் பார்த்தான். மூன்று பெண்கள் முகங்களிலும் ஏமாற்றம். ஷில்பாவின் கண்களில் நீர் — கூடுதலாக.


பிருத்விராஜ் சட்டென்று திரும்பினான். இளங்குமரன் போன திசையில் ஓடத் தொடங்கினான்.

(தொடரும்)

அவன்: லாபத்தில் இயங்கியும் இந்தத் தொழிற்சாலையை ஏன் மூடிட்டாங்க!

இவன்: நஷ்டத்தில் இயங்கும் மற்ற அரசுத் தொழிலகங்களின் பெயரைக்கெடுக்குதாம்!

— உ. ராஜாஜி.




இவர்களில்
நீங்கள்
யார்?
முன்னேறுபவர்
நீங்களாக இருக்க
ஆசைப்படுகிறோம்.
செப்டம்பர் 1 முதல்
வெளிவருகிறது
ஜாப்
கைடுலைன்ஸ்
ஏஜண்டுகள் தொடர்பு கொள்க: ஜீயே பப்ளிகேஷன்ஸ், 352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
சென்னை — 600 005.
எங்களது வெளியீடுகளான பாக்கெட் நாவல், க்ரைம் நாவல், எ நாவல் டைம் இதழ்களின்
விற்பனையாளர் அல்லாதவரும் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி: 844294.



ராஜாராம் மோகன் ராய்



பங்கிம் சந்திரர்

வங்க இலக்கியம் வளர்ந்தது எப்படி?

தமிழிலக்கியத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது வங்காளி இலக்கியம் ஒரு குழந்தைதான். வங்க மொழி பிறந்ததே கி.பி. பத்தாம் நூற்றாண்டில்தான். ஆயினும் இந்த ஆயிரம் ஆண்டுகளில் அபார வளர்ச்சி! இவ் வளர்ச்சியின் பெரும் பாகம் கடந்த இரு நூற்றாண்டுகளிலேயே நிகழ்ந்துள்ளது. இந்த வளர்ச்சிக்கு வித்திட்டது, பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வங்கத்தில் பிறந்த மறுமலர்ச்சிதான். அப்போது கல்கத்தா கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமைப் பீடமாயிருந்த காரணத்தால், மேலை நாட்டு விஞ்ஞானம், கலை, இலக்கியம் இவற்றின் தாக்கம் வங்காளத்தில் செயற்பட்டது.

நிர்வாக வசதிக்காகப் பறங்கி அதிகாரிகள் வங்காளி கற்க நேர்ந்தது. சட்டங்களை வங்காளியில் பெயர்க்கும் அவசியம் உணரப்பட்டது. தவிர, கிழக்கிந்தியக் கம்பெனியிலும் நிர்வாகத் துறையிலும் பணிபுரிந்து வந்த பல பறங்கியர் இந்தியக் கலைகளிலும் பண்பாட்டிலும் ஈடுபாடு கொண்டிருந்தனர். அவர்களது முயற்சியால் கல்கத்தாவில் ஏஷியாட்டிக் சொசைட்டி நிறுவப்பட்டது. ஓர் ஆங்கிலேயர் வங்காளி அச்சைத் தயாரித்தார். இன்னொருவர் வங்காளி இலக்கணத்தை எழுதினார்.

1800–ம் ஆண்டில் ஃபோர்ட் வில்லியம் கல்லூரி துவக்கப்பட்டது. இக் கல்லூரியில் பிரிட்டிஷ் அலுவலர்களுக்கு இந்தியும் வங்காளியும் கற்பிக்கப்பட்டன. அவர்களது உபயோகத்துக்காக அம் மொழிகளில் பாடப் புத்தகங்கள் இயற்றப்பட்டன.

இதே ஆண்டில் ஸ்ரீராம்பூரில் பாப்டிஸ்ட் மிஷனும் அச்சகமும் நிறுவப்பட்டன. அடுத்த ஆண்டு விவிலியம் வங்காளியில் மொழி பெயர்க்கப்பட்டது. ராஜாராம் மோகன் ராய் போன்றோரின் முயற்சியால் இந்தியர்களுக்கு மேலைநாட்டுக் கல்வியளிக்கக் கல்கத்தாவில் இந்துக் கல்லூரி நிறுவப்பட்டது. மேலைநாட்டு இலக்கியங்கள் வங்காளியில் பெயர்க்கப்படத் தொடங்கின.

ஈசுவரசந்திர வித்தியா சாகர் வங்காளி மாணவர்களின் உபயோகத்துக்காக வங்காளி அரிச்சுவடியும் வேறு பல நூல்களும் இயற்றினார். நூறாண்டுகள் கடந்த பின்னும் அவருடைய இந்த அரிச்சுவடியே இப்போதும் பயன்படுத்தப்படுவது இதன் பெருமைக்குச் சான்றாகும்.

முதல் வங்காளி நாவலாகக் கருதப்படும் 'ஆலாலேர் கரேர் துலால்' பியாரி சாந்த் மித்ராவால் 19–ம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் எழுதப்பட்டது.

கவிதைத் துறையில் பெரும் புரட்சி நிகழ்த்தியவர் மைக்கேல் மதுசூதன் தத்தா. முதலில் ஆங்கிலத்தில் எழுதி வந்த மதுசூதன் பின்னர் வங்காளியில் எழுதத் தொடங்கினார். அவர் முதன் முதலாக வங்காளியில் தளையற்ற கவிதை (**blank verse**)யைப் பயன்படுத்தினார். அவரியற்றிய பெருங் காவியமான 'மேகநாதவதம்' தளையற்ற கவிதையாக எழுதப்பட்டது மட்டுமல்ல; அதன் உள்ளடக்கத்திலும் புதுமை மிளிர்ந்தது. அதன் கதாநாயகன் இந்திராஜித். புராண, இதிகாசக் கதைகளையும் கதைப் பாத்திரங்களையும் சமகாலக் கண்ணோட்டத்துடன் இலக்கியத்தில் சித்திரிக்கும் போக்குக்கு அடிகோலியவர் மதுசூதனே.

19–ம் நூற்றாண்டில் நாட்டுப்பற்றும் சுதந்திர வேட்கையும் வளர உறுதுணையாயிருந்தது வங்காளி இலக்கியம். உதாரணமாக, அவுரிச்சாயத் தொழிலில் ஈடுபட்டிருந்த வெள்ளையர் விவசாயிகளுக்கு இழைத்த கொடுமைகளை உணர்ச்சிகரமாகச் சித்திரித்த தீனபந்து மித்ராவின் 'நீலதர்ப்பண்' என்ற நாடகம் மக்களை இக் கொடுமைகளுக்கெதிராகப் பொங்கியெழச் செய்தது.

தேவேந்திரநாத் தாகூரும் அவருடைய நண்பர்களும் ஆண்டுதோறும் நடத்தி வந்த 'சுதேசி மேளா' நாட்டின் சமூக மறுமலர்ச்சிக்கும் தொழில் வளர்ச்சிக்கும் வழிவகுத்ததோடு தேசிய உணர்ச்சி மிக்க இலக்கியப் படைப்புகளுக்கும் ஊக்கமளித்தது.

பங்கிம் சந்திரர், ரவீந்திரர், சரத் சந்திரர் இம் மூவரும் வங்காளி நாவல் இலக்கியத்தின் மும்மூர்த்திகளாவர். இம் மூவருமே இந்திய நாவல் துறையில் ஆழ்ந்த தாக்கத்தை உண்டாக்கினர். இவர்களுள் காலத்தால் முற்பட்ட பங்கிம் சந்திரரை 'இந்திய நாவலின் தந்தை' எனக் கருதலாம். அவருடைய நாவல்கள் காதல், வீரம், நாட்டுப்பற்று போன்ற பல உணர்வுகளைத் திறம்படச் சித்திரிக்கின்றன. மனித மனத்தின் சிக்கல்களை முதன் முதலாக இலக்கியத்தில் கையாண்ட பெருமை பங்கிம் சந்திரருக்கு உண்டு. கதாபாத்திரமே தன் கதையைச் சொல்வதாகக் கதையமைப்பு அவர் செய்த புதுமைகளில் ஒன்று.

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் வங்காளி இலக்கியத்துக்கு உலகளாவிய பெருமை கிடைக்கக் காரணமானவர் ரவீந்திரர். இலக்கியத்தில் அவர் தொட்டுத் துலங்காத துறையே இல்லை. மரபுக் கவிதை,

வசன கவிதை, வசன நாடகம், கவிதை நாடகம், சிறுகதை, நாவல், கட்டுரை, பாடல் எல்லாத் துறைகளிலும் அவரது மேதை வெளிப்பட்டது. ரவீந்திரரை 'இந்தியச் சிறுகதையின் தந்தை' எனலாம். சாதிப் பிரச்னை, இந்து முஸ்லிம் உறவு, பெண் ணுரிமை, விடுதலைப் போராட்டம், தொழில் வளர்ச்சி, விவசாய முன்னேற்றம், கல்வி, முதலிய பல்வேறு வாழ்க்கைப் பிரச்னைகளைப் பற்றி அவர் ஆழ்ந்து சிந்தித்துக் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

நாட்டின் விடுதலைப் போராட்டக் காலத்தில்இலக்கியவானில்தோன்றியஇன்னொரு நட்சத்திரம் கவி காஜி நஜ்ருல் இஸ்லாம். இவர் கனல் தெறிக்கும் பாடல்கள் மூலம் ஆயிரக்கணக்கான தேச பக்தர்களுக்கு எழுச்சியூட்டியதோடு மனிதாபிமானத்துக்கு ஓர் உதாரணமாகவும் வாழ்ந்தார்.

நாட்டு மக்களின் விடுதலையார்வத்தைத் தட்டியெழுப்பிய இன்னொரு கவி துவிஜேந்திரலால் ராய். சரித்திர நாடகங்கள் மூலம் இந்திய நாட்டின் பழம்பெருமையை உணர்த்தினார்.

பெண்களின் பரிதாப நிலை, இந்துக் கூட்டுக் குடும்பத்தின் பிரச்னைகள், ஏழை எளியவர்களிடம் காணப்படும் உயர் பண்புகள் இவற்றை அனுதாபத்துடன் சித்திரிப்பதில் இணையற்றவர் சரத் சந்திரர்.

மக்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் மொழியே இலக்கியத்திலும் இடம் பெற வேண்டும் என்ற கருத்து ரவீந்திரர் காலத்திலேயே செல்வாக்குப் பெற்றுவிட்டது. ரவீந்திரரின் உறவினரான பிரமத நாத் சௌதுரி தாம் நடத்திய 'சபூஜ் பத்ர' பத்திரிகையில் பேச்சு மொழியைக் கையாண்டார். இலக்கியம் மக்கள் இலக்கியமாயிற்று.

பிரமதநாத் 'பீர்பல்' என்ற புனை பெயரில் எழுதிய கட்டுரைகள் சிறந்த எள்ளல் சுவைக்கு எடுத்துக்காட்டாக அமைந்தன.

ரவீந்திரருக்கு அடுத்த தலைமுறையைச் சேர்ந்த கவிகளுள் முக்கியமானவர்கள் ஜீவனாந்ததாஸ், சத்தியேந்திர நாத் தத்தா, விஷ்ணுதே, சுதீந்திரநாத் தத்தா, சுகாந்த பட்டாச்சாரியா, புத்ததேவ போஸ் ஆகியோர். சத்தியேந்திரநாத்தின் கவிதைகளில் காந்தியக் கருத்துகளும், சுகாந்த பட்டாச்சாரியாவின் கவிதைகளில் இடது சாரிக் கருத்துகளும் இடம் பெற்றுள்ளன.

இப்போது நம்மிடையே வாழ்ந்து வரும் கவிகளில் குறிப்பிடத்தக்கவர்கள் சக்தி சட்டோபாத்தியாயா, சுநீல் கங்கோ பாத்தியாயா, சுபாஷ் முகோபாத்தியாயா, கவிதா சின்ஹா ஆகியோர். சுபாஷ் முகோபாத்தியாயாவின் கவிதைகளில் இடது சாரிக் கருத்துகளும் கவிதா சின்ஹாவின் கவிதைகளில் பெண்மையின் உரிமைக்குரலும் ஒலிக்கின்றன.

ரவீந்திரருக்குப் பின் சிறுகதை, நாவல் இலக்கியத்துக்கு வளம் சேர்த்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் தாரா சங்கர் பந்தோபாத்தியாயா, விபூதி பூஷண் பந்தோ பாத்தியாயா, விபூதி பூஷண் முகோபாத்தியாயா, மாணிக் பந்தோபாத்தியாயா, பனபூர், ஜராசந்த, மனோஜ் போஸ், பிரமத நாத் பிஷி ஆகியோர். விபூதி பூஷண் பந்தோ பாத்தியாய கிராம மக்களின் இயற்கையோடியைந்த வாழ்க்கையை நயமாகவும் அனுதாபத்துடனும் சித்திரிப்பதில் வல்லவர். அவரது 'பதேர் பாஞ்சாலி' சத்திய ஜித்ராயின் திரைப்படம் மூலம் உலகப் புகழ் பெற்றுவிட்டது. மாணிக் பந்தோபாத்தியாயாவின் படைப்புகளில் இடது சாரிச் சிந்தனை இடம் பெற்றுள்ளது.

இன்றைய தலைமுறையைச் சேர்ந்த சிறுகதை, நாவலாசிரியர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் சுநீல் கங்கோ பாத்தியாயா, சீர்ஷேந்து முகோபாத்தியாயா, சியாமள் கங்கோ பாத்தியாயா, திவ்யேந்து பாலித், ரமாபத சௌதுரி, சமரேஷ் மஜூம்தார், சங்கர் ஆகியோர். சங்கரின் நாவல்கள் அமோகமாக விற்பனையாகின்றன.

அண்மையில் மறைந்த சமரேஷ் போஸ் கிளுகிளுப்பு மிக்க அப்பட்டமான வர்ணனைகளால் பிரபலமானாலும் அவர் 'காலகூட்' என்ற புனைபெயரில் கனமான கருக்களையும் கையாண்டு நாவல்களைப் படைத்துள்ளார்.

தற்போது பெண் எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் மகாசுவேதா தேவி, ஆசாபூர்ணா தேவி, மைத்ரேயி தேவி ஆகியோர். மகா சுவேதா தேவியின் நாவல்களில் சமூகத்தின் கடைநிலை மக்களின் குறிப்பாகப் பழங்குடி மக்களின் — அவல நிலை தார்மீகக் கோபத்துடன் வர்ணிக்கப்படுகிறது. மற்ற இரு எழுத்தாளர்களும் பெண்களின் பிரச்னைகளில் முக்கியமாகக் கவனம் செலுத்துகின்றனர்.

நகைச்சுவை எழுத்தாளர்களில் 'பரசுராம்' என்ற புனை பெயரில் எழுதி வந்த ராஜசேகர் போஸ், சிவராம் சக்கரவர்த்தி, குமாரேஷ் கோஷ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

குழந்தை இலக்கியம் வங்காளி இலக்கியத்தின் ஒரு முக்கியப் பகுதியாகும். உபேந்திர கிஷோர் ராய் சௌதுரி, அவருடைய புதல்வர் சுகுமார் ராய், அவருடைய புதல்வர் சத்யஜித் ராய் இம் மூவரும் குழந்தையிலக்கியத்துக்குப் பெரும் பணியாற்றியுள்ளனர். சத்யஜித் ராய் புகழ்பெற்ற திரைப்பட இயக்குநராயிருந்தாலும் அவர் குழந்தைகளுக்காகவும் கதைகள், துப்பறியும் கதைகள், விஞ்ஞானக் கற்பனைக் கதைகள் இவற்றைப் படைப்பதோடு அவற்றுக்கேற்ற சித்திரங்களும் வரைகிறார். உபேந்திர கிஷோரால் துவக்கப்பட்ட 'சந்தேஷ்' என்ற சிறுவர் பத்திரிகையை சத்யஜித் ராயும் அவருடைய உறவினர்களும் இன்றும் நடத்தி வருகின்றனர்.

— சு. கிருஷ்ணமூர்த்தி

இதுவரை வந்தவை:

புரொபஸர் ராம்பிரகாஷ் பெங்களூரில் உள்ள ஒரு யுனிவர்ஸிடியில் மனோதத்துவ ப்ரொபஸர். அம்ருதா அவரின் அழகான மனைவி. ஒருநாள் இரவு அவர்கள் இருவரும் வீடு திரும்பும் போது, வழி தவறிய அம்ருதாவை ஆட்டோ டிரைவர்களான பால்குண்டுவும் பாபுவும் கடத்திச் சென்று கபன் பார்க்கில் கற்பழித்து விடுகிறார்கள். இந்தச் செய்தி பத்திரிகைகளில் வெளிவர, தம் மனைவிக்கு ஏற்பட்ட ஒரு கறை இப்படி வெட்ட வெளிச்சமாகி விட்டதேயென்று சங்கட உணர்ச்சிக்கு உள்ளாகிறார். அம்ருதாவோ அந்த அதிர்ச்சியால் மனம் பாதிக்கப்பட்ட நிலைக்கு ஆளாகிறாள்.

இந் நிலையில் அம்ருதாவை அந் நிலைக்கு ஆளாக்கிய அந்தக் கயவர்களைப் போலீஸ் தேடுகிறது. ஒரு மாதிரியாகத் துப்பு துலக்கிப் பாபுவைச் சந்தேகப்பட்டுப் பின் தொடர்ந்து கவனிக்கிறது.

இதற்கிடையில் ப்ரொபஸர் ராம்பிரகாஷிடம் படிக்கும் மாணவி வர்ஷாவுக்கு அவரிடம் ஓர் ஈர்ப்பு வந்து விடுகிறது. ப்ரொபஸரும் அந்த ஈர்ப்பிலிருந்து

இருள் வரும் நேரம்

சுஜாதா

விடுபட முடியாமல்— ஆனால் விடுபட்டு விட வேண்டுமென்று தவிக்கிறார்.

வர்ஷாவுக்கும் ப்ரொபஸருக்கும் இடையிலான இந்த ஈர்ப்பை உணர்ந்த அம்ருதா ப்ரொபஸருக்குத் தன்னைப் பிடிக்காததால்தான் வர்ஷாவிடம் மயங்கி விட்டார் என்றும், தன்னை விவாகரத்துச் செய்து விட்டு வர்ஷாவைத் திருமணம் செய்து கொள்வதற்காகவே — அவர்கள் இருவருமாகச் சேர்ந்து திட்டமிட்டு — ஆட்களை அமர்த்தித் தன்னைக் கற்பழிக்கச் செய்திருக்கிறார்கள் என்றும் சந்தேகப்படுகிறாள். அந்தச் சந்தேகத்தைப் ப்ரொபஸரிடமே கேட்கிறாள். அதைக் கேட்டு அவர் திகைத்துப் போகிறார்.....

17

பாபுவின் மனநிலையை ஒரு கலங்கலான, குழப்பமான நதிக்கு ஒப்பிட முடியும். எண்ணங்கள் தெளிவில்லாமல் இருந்



தன. செய்கைகளிலும் தீர்மானம் இல்லை. நேராகப் போய் ஆட்டோ எடுத்து ஒழுங்காகச் சம்பாதித்து அம்மாவைக் காப்பாற்ற வேண்டும் என்கிற எண்ணம் ஒருபுறம் இருந்தது. மறுபக்கம் உலகத்தில் இருக்கிற அத்தனை பெண்களையும் வெறுக்க வேண்டும் என்று கட்டாயமாக ஓர் எண்ணம் வற்புறுத்தியது. பால்குண்டு கெட்டவன் அவன் கூடச் சேரக் கூடாது என்று தோன்றியது. பால்குண்டு சொல்வதை அப்படியே கேட்க வேண்டும் என்கிற வேட்கையும் இருந்தது. எப்போது எந்த எண்ணம் பிரதானவடிவமெடுக்கும் என்று அவனுக்கே சொல்ல முடியவில்லை.

வீட்டுக்கு வந்த போது அம்மா கட்டிலில் படுத்திருந்ததைப் பார்த்தான். காலை பத்து மணிக்கு இத்தனை களைப்பாகத் தூங்குகிறாள். உடம்பில் புடைவை விலகியிருப்பதை உணராமல் வாயைத் திறந்து கொண்டு.... இங்கேயே இந்தக் கணமே இப்போதே... நிறைவேற்றி விடலாமா?

பாபு தன் தலையைச் சிலுப்பிக் கொண்டு பின்பக்கம் போய் ப்ளாஸ்டிக் வாளியில் வைத்திருந்த தண்ணீரைச் சரித்து முகங்கழுவிக் கொண்டான். மொட்டை மாடி வழியாகக் கடைகளின் சலனம் தெரிந்தது.

திரும்ப அறைக்கு வந்த போது அம்மா எழுந்து டீ போட்டுக் கொண்டிருந்தாள். "சொல்லாம கொள்ளாம அங்கே வந்தா எப்படி?" என்றாள்.

"நீ எப்படிச் சம்பாதிக்கிறேன்னு நான் பார்க்க வேண்டாமா?" ஒருமுறை அவனை நிமிர்ந்து பார்த்தாள். "எல்லாம் அந்தப் பாழாப் போற பால்குண்டு சொல்லித் தரானில்லை? அவன் கூட சகவாசம் வெச்சுக்காதே. உன்னைக் கெடுப்பான். கஞ்சா

அடிக்கிறான். சிக்கபேட்டையில் திரியறான்! கெட்டவன்!''

''சொல்றது யாரு?''

''அப்படின்னா?''

''சொல்றது யாருன்னேன்? உனக்கு என்ன தகுதி இருக்குது, மற்றவங்களைக் குறை சொல்ல?''

அம்மா யோசித்து: ''ஓ, அதுவா, உனக்குப் பிடிக்கலை இல்லை?''

''இல்லை.''

''ஒண்ணு செய்யி. என்னை வீட்டில வெச்சுச் சம்பாதிச்சுச் சோறு போடு.''

''சம்பாதிக்காம என்ன செய்யறேனாம்?''

''உன் சம்பாத்தியம் பத்தாது பாபு. பத்தாது! ஒரு மாசம் ரெண்டு பேருக்கும் என்னா செலவாகுது தெரியுமா? ஒரு நாளைக்கு இருபது ரூவா கொண்டார; அதிலேயும் பீடி சிகரெட்டு டிபன்னு கழிச்சுகட்டுப் பத்துப் பதினஞ்சுதான் தேறுது. அதில் என்னம்... சாப்பிட முடியும் சொல்லு?''

''முயற்சி பண்ணிப்பாக்கிறது...''

அவனருகில் ஆம்லெட்டை வைத்துவிட்டு, ''ஒரு முட்டை என்னா விலை விக்குதுங்கறே?'' என்றாள்.

''முட்டையில்லாம இருக்கிறது!''

''என்னால முடியாதுப்பா!''

''உனக்கு வேற தொழில் ஏதும் தெரியாது. அதை முதல்ல சொல்லு.''

''அப்படித்தான் வெச்சுக்கயேன். என்னைப் புடிக்கலைன்னா ஓடிப் போயிரேன். உன்னை யாரு ஊட்டுக்கு வரச் சொன்னது?''

''உன்னைப் புடிக்குமே அதுதானே பிரச்னை'' என்று பாபு வெளியே வந்தான். வெயில் சுள்ளென்று உறைத்தது. 'பால்குண்டுவை இனிமேல் பார்க்கவே கூடாது' என்று தீர்மானித்தவன், அனுமந்த நகர் பஸ் ஏறி, பார்பர் ஷாப் போய், 'பால்குண்டு வந்தானா?' என்று விசாரித்தான்.

''வந்தாரு. பார்க் போறதா சொன்னாரு.''

பாபு தன்கைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டு கன்னத்தைத் தடவிக் கொண்டான்.

''ஷேவிங் பண்ணிரலாமா?''

''காசில்லைடா.''

''காசெல்லாம் அப்புறம். உக்காருங்க!'' ஒரு நிமிஷம் தயங்கினான். உட்காரலாம் போலத்தான் தோன்றியது. புஸ் புஸ் என்று அடிக்கும் தண்ணீர் பீய்ச்சலிலும் வாசனைத் திரவியங்களிலும் மனசு தங்கி உட்காரத்தான் நினைத்தான். ஏதோ மனமாற்றத்தில் வேண்டாம் என்றான்.

அவன் போய் ஒரு நிமிஷம் கூட ஆகியிருக்காது. மப்டியில் ஒரு போலீஸ்காரர் வந்து, ''பாபுங்கறவன் இங்கே வந்தானா?'' என்றார்.

''இப்பத்தான் வந்துட்டுப் போனாரு.''

''எங்கே போனான்?''

''ஏன் என்ன விசயம்?''

''ஏண்டா! போலீஸ்காரங்களை என்ன விசயம்னு வெசாரிக்கிற அளவுக்கு வந்துட்டியாடா நீ?''

''இல்லைங்க ஒரு பேச்சுக்குக் கேட்டேன்! பாபு பஸ் ஏறிப் போய்ட்டாரு.. டிரஸ்ல இல்லீங்களா, அதனால்...''

''எங்கே போறதாச் சொன்னான்?''

''ஏதும் சொல்லலைங்க!''

''எங்கே போவான் வழக்கமா?''

''ப்யகிள் ராக் ரோடில பொம்பளைங்க காலேஜ் இருக்குது பாருங்க... அங்கே பார்க் பக்கத்தில ரெண்டு பேரும் சுத்துவாங்க.''

''ரெண்டு பேரா?''

''ஆமாங்க, கூட ஒருத்தர் எங்க முதலாளிக்கு வேண்டியவரு.''

''பேரு?''

''பால்குண்டு.''

பாபு பார்க்குக்கு வந்த போது பால்குண்டுவைக் காணவில்லை! கொஞ்ச நேரம் இலக்கில்லாமல் திரிந்தான். சிகரெட் வாங்கிப் பற்றவைத்துக் கொண்ட போது போலீஸ் ஜீப் வருவதைப் பார்த்தான். வந்து அருகில் நின்று ஓர் ஆள் இறங்கி ''நீ தானே பாபு?'' என்று கேட்க, பாபு திகிலடைந்து எதிர்ப்புறமாக ஓடினான். அந்த ஆள் ஜீப்பில் மறுபடி ஏறுவதைப் பார்த்தான். புல்டெம்பின் ரோடிலிருந்து பிரிந்த ஒரு பஸ்ஸில் தொத்திக் கொண்டான். முக்கோணமாகப் பிரியும் இடத்தில் மறுபடி தரை தேய்த்து இறங்கி விட்டான். ஜீப் பஸ் பின்னால் செல்வதைக் கவனித்து நல்ல



வேளை தப்பித்தோம் என்று தோன்றியது. கரங்கள் நடுங்கின. 'எல்லாம் இந்தப் பால் குண்டுவினால்!' கொஞ்ச நாளைக்குப் பெங்களூரை விட்டு விலகிப் போய் விட வேண்டும். யாரிடமும் சொல்லாமல் உடுப்பிப் பக்கம் போய் விடலாம்; இல்லை, திருநெல்வேலி — ...அது எங்கே இருக்கிறது?

இன்ஸ்பெக்டர் தர்மராஜன் "இந்த முறையும் விட்டுட்டோம் கிருஷ்ணப்பா" என்றார்.

"இல்லைங்க, திரியும் அந்த பார்பர் சாப்பு போகலாம்!"

"போயி?"

"வீடு எங்கன்னு கண்டுபிடிக்கலாம். நம்மைப் பார்த்ததுமே ஓடிட்டான் பாத்திங்களா?"

"வீட்டு விலாசம் நிஸ்லார் கொடுத்திருக்காரு."

"அங்கே போய்க் காத்திருக்கறங்க."

"நானும் வர்றேன்" என்றார் தர்மராஜன்.

லட்சுமி குளித்துவிட்டு டிரான்சிஸ்டரில் பாட்டு கேட்டுக் கொண்டே சமைத்துக் கொண்டிருந்தாள். கண்ணாடியில் ஒட்ட வைத்திருந்த பொட்டுக்களில் ஒன்றை எடுத்துக் கொண்டிருந்த போது வாசல் கதவு தட்டப்படுவதையும் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் உள்ளே நுழைவதையும் பார்த்தாள்.

"வாங்க" என்றாள் புன்னகையுடன்.



"ஓ அப்படியா விசயம்?" என்று தர்மராஜன் சுற்று முற்றும் பார்த்தார்.

"என்னங்க இன்ஸ்பெக்டரய்யா, ரெய்டா? சொல்லவே இல்லையே?"

"இது வேறே மாதிரி ரெய்டு. உன்னைய நான் பலமுறை பார்த்திருக்கேனே மாஜிஸ்ட்ரேட்டு கோர்ட்டில்?"

"நாம ரெண்டு பேரும் வேற எங்க சந்திச்சுக்க முடியும்? சொல்லுங்க என்ன விசயம் ஏதாவது மர்டரா?"

"பாபுங்கறது யாரு?"

"எம் பையன். ஆட்டோ ஓட்டறவன். என்ன வேணும்?"

"எங்கே அவன்?"

"வெளியே போயிருக்கான்."

"எப்ப வருவான்?"

"சொல்ல முடியாது! ராத்திரி திங்க வருவான். நிஸ்லார் பாய்னு ஆட்டோ கம்பெனி மானேஜர். அவர்கிட்ட கேட்டா சொல்வாரு."

"அவர்கிட்டதான் விலாசம் வாங்கிட்டு வந்தேன்!"

"என்னங்க ஏதாவது தப்புத்தண்டா பண்ணிட்டானா? பண்ணியிருந்தா தண்டனை கொடுத்துருங்க. தயங்கவே தயங்காதீங்க. எம்மவனா இருந்தாலும் நியாயம்னு ஒண்ணு இருக்குதில்லை."

தர்மராஜன் அவள் சொன்னதைச் சரியாகக் கவனிக்காமல் சுற்று முற்றும் பார்த்து. "அந்தாளு ரூமு இதா?" என்று கேட்டார்.

"அதாங்க."

தர்மராஜன் அந்த அறையைப் பார்த்தார். ஒட்ட வைத்த காலண்டரில் புஜபல அமெரிக்க பாக்ஸிங் சாம்பியன். அவன் தோளைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அழகான பெண்ணின் மேல் 'இண்ட்டு' மார்க்கு போட்டிருந்தான். பெட்டியைத் திறந்து பார்த்தால், ஆண் பெண் சம்போக சம்பந்தமான புத்தகங்களும் ஒரு கஞ்சாக் கட்டையும் இருந்தன. முப்பது நாளில் ஆங்கிலம் பழைய தமிழ்ச் செய்திப் பத்திரிகைகள். அவற்றை ஒவ்வொன்றாகப் பார்த்தார். தொடர்ந்து நான்கு நாட்களுக்கு உண்டான செய்தித்தாள்கள்.

அந்த செய்தி!

கபன் பூங்காவில் கற்பழிப்பு.

ஆட்டோ ஓட்டிகளைப் போலீஸார் தேடல்.

அதில் குறுக்காக, பென்சிலில் "கண்டுபிடிக்கவே முடியாது" என்று எழுதியிருந்தது!

"இண்டரஸ்டிங்" என்றார் தர்மராஜன்.

பெட்டியில் இருந்த மற்ற பொருட்களை ஆராய்ந்தார். ஒரு மோதிரம் கிடைத்தது. உடன் ஒரு சிறிய பொட்டலம். விபூதி பொட்டலம் போல இருந்தது. பிரித்ததில் ஒரு நீண்ட தலைமயிர் இருந்தது.

"என்னங்க ஏதாவது கெடைச்சுச்சா?"

"கெடைச்சுது!"

''எம்மவன் தப்புத் தண்டாவில் உண்டா? அவன் சாதுங்க. கூட பால்குண்டுன்னு ஒரு ஆளு இருக்கான், பொல்லாதவங்க! அவனை முதல்ல அரஸ்ட்டு பண்ணுங்க.''

''சரி! கான்ஸ்டபிள் வாங்க'', என்றார். வெளியே வந்ததும் ''இங்கயே இருங்க. அந்தாளு பாபு வர்ற வரைக்கும் இடத்தை விட்டு விலகாதிங்க. ம சாப்பிடப் போயிரா திங்க. டிவியைப் பார்த்துட்டு வந்துர் றேன். இடையில் பாபு' வந்தா உடனே புடிச்சு அரஸ்ட்டு பண்ணி வையுங்க.''

''இந்தாளுதானுங்களா?''

''இவன்தான். எல்லாம் பொருந்துது.''

டாக்டர் ரகுராம் அம்ருதாவைப் பார்த்துப் புன்னகை புரிந்தார். ''குட்ஈவினிங் மிஸஸ் அம்ருதா.''

''உக்காருங்க. உள்ளே தூங்கிட்டு இருக்காரு.''

''எழுப்பாதிங்க். அப்பறம் வேணா வர்றேன்.''

''உக்காருங்க. எழுந்திருக்கிற நேரம்தான். நீங்க யாருன்னு....?''

''டாக்டர் ரகு.''

''கலீகா?''

''இல்லை. யூனிவர்ஸிட்டியில் இல்லை. நான் 'நிம்ஹான்ஸ்' ல ஒர்க் பண்றேன்.''

அம்ருதா அவரைச் சற்றுத் தெளிவில்லாமல் பார்த்தாள். ''நீங்க மெடிக்கல் டாக்டரா?''

''அப்படின்னும் சொல்லலாம்; சைக்கியாட்ரி பிரிவைச் சேர்ந்தவன்'' என்று வசீகரமாகச் சிரித்தார்.

''என்னைப் பார்க்க வந்தீங்களா?''

''இல்லை. ப்ரொபஸரைப் பார்க்க. அவர்தான் கூப்பிட்டிருந்தார்.''

''எதுக்குப் பொய் சொல்றீங்க? எனக்குப் பைத்தியம். அதுக்கு வைத்தியம் பார்க்க வந்தீங்களா?''

''மிஸஸ் ராம்பிரகாஷ், திஸ் இஸ் பாஸிட்டிவ்லி ராங்!''

''வேற எதுக்கு வீட்டுக்கு வந்தீங்க? அவரைப் பார்க்கணும்னா யூனிவர்ஸிட்டியில் பார்க்கிறது! எதுக்கு வீட்டுக்கு வர்றீங்க? நீங்க எல்லாரும் சதி பண்றீங்க. எனக்குக் கட்டாயமாத் தெரியுது. சதி! சதி! கான்ஸ்பிரஸி! என்னைப் பைத்தியம் பட்டம் கட்டி அந்தப் பொண்ணை என் கணவருக்குக் கட்டிவெக்கச் சதி! சதி!''

''நீங்க என்ன சொல்றீங்க? புரியலை மிஸஸ் ராம்பிரகாஷ்.''

''கெட் அவுட்! எனக்கு உங்க உதவி தேவையில்லை எனக்கு என்னைக் காப்பாத்திக்கத் தெரியும்.''

''அம்ருதா முகம் சிவக்க, மூக்கு நுனி துடிக்க, உச்சக் குரலில் கத்தினாள்:

''கெட்லாஸ்ட் யூ பாஸ்டர்ட்! கெட் அவுட் ஆஃப் ஹியர்!''

அம்ரு!''

அவன் திரும்புவதற்குள் அவள் கன்னத்தில் முழுசாக அறை விழுந்தது.

(தொடரும்)

அடுத்த இதழ்

மேற்கு வங்கத்தில் கல்கி — II



''தமிழகத் தேர்தலில்
இ. காங்கிரஸை வீழ்த்துங்கள்...!''

— மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு
சிறப்புப் பேட்டி

சுற்றிப் பார்த்தோம் சொல்கிறோம்!

— கல்கத்தாவில் ஒரு ரவுண்ட் அப்

கால் பந்தாட்டத்தில் காதல் ஏன்?

— சிறப்புக் கட்டுரை



அமரர் கல்கி எழுதிய குறுநாவல் — அடுத்த இலவச இணைப்பு 21.8.88 இதழுடன் கிடைக்கும்.

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — V
ராஜ்மோகன் காந்தி

1

வீழ்ச்சி வெற்றியாகுமா? ராஜாஜி மனம் வைப்பாரா?

நேருவின் தலைமையில் காங்கிரஸ் கட்சி, 1952—ல் தேர்தல் களத்தில் வட நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சிறப்பான வெற்றிகளைப் பெற்றிருந்தது. ஆனால் தென்னகத்தில் அதற்குப் பெரிய ஏமாற்றங்கள் ஏற்பட்டன. சென்னை மாகாணத்தில் மொத்தம் 375 இடங்களில் காங்கிரஸ் 152 இடங்களையே கைப்பற்றியிருந்தது. முதல் அமைச்சர் குமாரசாமி ராஜாவும் அவருடைய ஐந்து மந்திரிகளும் தேர்தலில் தோல்வி அடைந்திருந்தனர். கம்யூனிஸ்டுகள் அறுபத்தோரு இடங்களைக் கைப்பற்றி இருந்தனர். சுயேச்சைகள் அறுபத்தி மூன்று. மேலும் ஒன்பது கட்சிகளின் பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர்.

சென்னை மாகாணத்தின் மலபார் பகுதியில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்திருந்தது. இருபத்தொன்பது இடங்களில் நான்கு இடங்களையே அதனால் வெல்ல முடிந்தது. தெலுங்கு தேசத்தில் 143 இடங்களில் 43 இடங்களைத்தான் வென்றது. தமிழர் வாழ் பகுதியிலோ 190 இடங்களில் 96 தொகுதிகளைத்தான் கைப்பற்றியது. தெற்குக் கன்னட நாட்டில் பதினோரு இடங்களில் ஒன்பது இடங்களை வென்றது.

முதல்வர் குமாரசாமி ராஜா 118 வோட்டு வித்தியாசத்தில்தான் தோற்கடிக்கப்பட்டிருந்தார். ஆனால் வேறு பல காங்கிரஸ் வேட்பாளர்கள் படுதோல்வி அடைந்திருந்தனர். உதாரணமாக அன்றைய ஆந்திரா காங்கிரஸ் தலைவரும் பின்னாளில் குடியரசுத் தலைவர் பதவி வகித்தவருமான நீலம் சஞ்சீவ ரெட்டி 12,000 வோட்டு வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டிருந்தார். அவரைத் தோற்கடித்தவர் அவருடைய நெருங்கிய உறவினரும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவருமான டி. நாகி ரெட்டி. இவர் சிறைச் சாலையிலிருந்தபடி தமது வேட்பாளர் மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

காங்கிரஸின் இந்த வீழ்ச்சியை அன்று யாருமே எதிர்பார்க்கவில்லை. திகைப்பிலிருந்து விடுபட்டதும் சீக்கிரமே பலப் பலரும் பல காரணங்களை அடுக்கினார்கள்: உணவுப்பற்றாக் குறை; சாமானிய மக்களுடன் தொடர்பு விட்டுப் போனது; கம்யூனிஸ்ட்டுகளுக்கு உள்ள, 'கலங்கிய குட்டையில் மீன் பிடிக்கும்' ஆற்றல். இவை எல்லாவற்றையும் விட முக்கியமான காரணம், ஆந்திரா கேசரி பிரகாசத்தைப் பின்பற்றிய காங்கிரஸ்காரர்கள், ஒட்டு மொத்தமாக அவருடன் சேர்ந்து கிருபளானி கட்சிக்குப் போய் விட்டதுதான். 46—47—ல் சென்னை மாகாண காங்கிரஸ் முதன் மந்திரியாக விளங்கியவர்தான் பிரகாசம். அதிருப்தியும் கருத்து மாறுபாடுகளும் அவரைக் கிருபளானியின் கிஸான் மஜ்தூர் பிரஜா, கட்சியின் பக்கம் தள்ளி விட்டன.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் காமராஜ். ''காங்கிரஸ்தான் ஆளப் போகிறது!'' என்று அறிக்கை விட்டார். 375 இடங்களில் 152 இடங்களை வைத்துக் கொண்டா? ''நாங்கள் ஆள்வோம்'' என்றனர் கம்யூனிஸ்டுகள். வன்முறையைக் கைவிட்டு தேர்தல் மூலமாகவும் கம்யூனிஸ்டுகள் பதவிக்கு வர முடியும் என்பதை உணர்ந்ததில் அவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி. ''காங்கிரஸ் அல்லாத கூட்டணி அரசு அமைவது சாத்தியமே'' என்று சொன்ன நாகிரெட்டி, காங்கிரஸ் வேட்பாளர் அல்லாத நிலப் பிரபுக்களைக் கூடச் சேர்த்துக் கொள்ளத் தயாராக இருந்தார். பிரகாசம் தனிப்பட்ட முறையில் தேர்தலில் தோல்விகண்டிருந்தா

• காமராஜ்:
'காங்கிரஸ்தான் ஆட்சி அமைக்கும்'





• குமாரசாமி ராஜா:
'சிக்கலுக்குத் தீர்வு ராஜாஜியே!'

* பவநகர் மகாராஜா:
'யாரை அழைப்பது?'



* பிரகாசம்:
'166 பேர் என் பக்கம்'



லும் அவர் பின்னால் அவரது ஆதரவாளர்கள் முப்பத்தைந்து பேர் திரண்டனர். இவர்களுடன் அறுபத்தோரு கம்யூனிஸ்ட்கள் இணைந்தனர். மேலும் பல சுயேச்சைகளை ஈர்க்க இந்தக் கூட்டணி முயன்றது. ஆனால் சுயேச்சைகளில் பலர் கம்யூனிஸ்ட்களின் எதிரிகளானதால் சேர முன்வரவில்லை. தமது ஐக்கிய ஜனநாயக முன்னணியில் 166 பேர் இருப்பதாகப் பிரகாசம் சொன்னார். ஆனால் இது நிரூபிக்கப்படவும் இல்லை; பெரும்பான்மை பலமும் ஆகாது.

கவர்னர் யாரை ஆட்சி அமைக்குமாறு அழைப்பது? உள்ளதில் பெரும்பான்மை பலம் பெற்றிருந்த காங்கிரஸையா? அல்லது 166 பேரின் ஆதரவு தமக்கு இருப்பதாகக் கூறிக் கொண்ட பிரகாசத்தையா? பிரகாசம், சீக்கிரமே மேலவையிலோ அல்லது சட்ட மன்றத்திலோ இடம் பெறுவார் என்று வைத்துக் கொண்டால் கூட, அவரை ஆட்சி அமைக்க அழைப்பது நியாயமாகுமா? 166 பேர் என்றாலும் அவர்கள் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள். எனவே, 152 இடங்களைக் கைப்பற்றியுள்ள காங்கிரஸை ஆட்சி அமைக்க அழைப்பது, அதிக நியாயமாக இல்லாவிட்டாலும் சம நியாயமாகத்தான் இருக்கும். ஆளுனர் பவனகர் மகாராஜா, ஜனாதிபதியின் ஆலோசனையைக் கேட்டார்.

காங்கிரஸ் மேலிடம் பிப்ரவரியிலும் மீண்டும் மார்ச் மாதம் நாலு நாட்களும் கூடிப் பேசியது. ஆனால் பிரதமர் நேருவுக்கு சென்னை மாகாணம் தொடர்பாக என்ன ஆலோசனை வழங்குவது என்று அதற்குத் தெரியவில்லை! நேருவுக்கு ஜனாதிபதிக்கு என்ன ஆலோசனை வழங்குவது என்று புரியவில்லை! எனவே ஜனாதிபதிக்கு ஆளுனர் பவநகர் மகாராஜாவுக்கு என்ன பதில் அனுப்புவது என்று தெரியவில்லை!

இந்தச் சூழ்நிலையில்தான் சென்னையில் சில பேருக்குப் பிரச்னைக்கு ஒரு தீர்வு இருப்பதாகத் தோன்றியது. தென்னாட்டின் தலைமகன், முன்னாளில் மகத்தான சாதனைகளைப் புரிந்தவர், இப்போது சும்மா இருந்தார். இல்லை, சும்மா இல்லை.
— ராமாயணம் எழுதிக் கொண்டும், இலக்கிய உரையாடல்களில் ஈடுபட்டபடியும் தமது பஸ்லுல்லா சாலை வீட்டில் வாழ்ந்து வந்தார். அவருக்கு வயது எழுபத்தி மூன்று ஆகி விட்டது என்பது உண்மைதான். ஆனால் அவர் ஒரு மந்திரி சபை அமைத்தால் அது, அவருக்குள்ள பெருமை, கௌரவம் காரணமாக நிலைத்து நிற்கும். பெரும்பாலான சுயேச்சைகளும் உதிரிக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அந்த மந்திரி சபையை ஆதரிப்பார்கள். அவர்கள் காங்கிரஸை விரும்பாதிருக்கலாம்; ஆனால் ராஜாஜியின் எதிரிகள் அல்ல!

பிரச்னைக்கான இந்தத் தீர்வு பலருக்கும் ஒரே சமயத்தில் உதித்ததாகத் தோன்றுகிறது. குமாரசாமி ராஜா தேர்தலில் தோற்றுப் போயிருந்தாலும் காபந்து அரசில் முதல் அமைச்சராக இன்றைக்கும் இருந்தார். எம்.எல்.ஏக்கள் மீது அவரால் செல்வாக்கைச் செலுத்த முடியும். 'அவர் ராஜாஜி பற்றி எண்ணினார். பத்திரிகைச் சட்டம் தொடர்பாக முன்பு ராஜாஜியைப் பலமாக எதிர்த்த கோயங்கா, அதற்கு முன்பாகவே அவர் ஜனாதிபதி ஆகக் கூடாதென்று பிரசாரம் பண்ணியிருந்தார். அவர், ராஜாஜி தான் இன்று தலைமை ஏற்க வேண்டும் என்று விரும்பினார். இன்னும், தேர்தலில் வெற்றி பெற்று வந்திருந்த ஸி. சுப்பிரமணியம், ராஜாஜியுடன் வேதாரண்ய யாத்திரையில் பங்கு கொண்டு, இன்று தினமணி ஆசிரியராக விளங்கிய ஏ.என். சிவராமன் முதலியோர் ராஜாஜியே சிக்கலுக்குத் தீர்வாக அமையக் கூடியவர் என்று கருதினர். சட்டசபை காங்கிரஸ் கட்சியின் தலைமையை ஏற்குமாறு ராஜாஜியைக் கேட்டுக் கொண்டு விருதுநகர் காங்கிரஸ் கமிட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. ஸி. சுப்பிரமணியத்தின் கோரிக்கையும் வெளியானது. அவ்வளவுதான், பச்சைக் கொடி காட்டப்பட்டது போல், ஏராளத் தீர்மானங்கள் நிறைவேறின; கட்டுக் கட்டாகத் தந்திகள் வந்து குவிந்தன!

இதற்கிடையில் பவ நகர் மகாராஜாவின் பதவிக் காலம் முடிந்து, ஸ்ரீ பிரகாசா ஆளுனர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தார். 'ராஜாஜியை உதவிக்கு அழையுங்கள்' என்று கூறிய சக்திகளுக்கு, அவருடைய உற்சாக ஆதரவு இருந்தது. சீக்கிரமே அவர் தில்லிக்குப் பின்வருமாறு எழுத இருந்தார்: "முடிவற்ற விவாதங்களுக்குப் பிறகு, எல்லாருமே ஒரே ஒரு தீர்வுக்குத்தான் வந்தனர். இந்த நெருக்கடி நிலைமையைச் சமாளித்துக் காப்பாற்றக் கூடியவர் ராஜாஜி ஒருவரே என்பதுதான் அந்த முடிவு.

எல்லாம் சரிதான். ஆனால் ராஜாஜி ஒப்புக் கொள்வாரா? இது பெரிய கேள்விக் குறியாக விசுவரூபமெடுத்தது!

(தொடரும்)

தமிழாக்கம்: **ஸி. ராஜேந்திரன்.**



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ. கோவிந்த தீக்ஷிதரவர்களால் 1542ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 85 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க சுமார் ரூ 250/– ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ 2500/– மூலதனம் ஏற்படுத்தியோ அல்லது அவ்வப்போது ரூ 250/– அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹா ராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி
D–76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம்–612 001.

இந்த நன்கொடைக்கு 80G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு.

* "வழி தெரியாதவர்களை வாழ வைப்பவர்" கட்டுரை படித்தேன். அரசியல் பெருச்சாளிகளும், பண முதலைகளும் மலிந்து விட்ட இந்நாளில் மாதவன் என்னும் ஓர் ஏழைப் பங்காளன் கிடைத்தது என் போன்ற எளிய மக்களுக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது. வாழ்க மாதவன்! வளர்க அவர் தொண்டு!!

மயிலாடுதுறை கோ. பானு.

* யாருடைய வாழ்வின் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்றும் யாருடைய சமூக அந்தஸ்து மற்றவர்களுக்குச் சமமாக உயர வேண்டும் என்றும் மகாத்மா விரும்பினாரோ, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, இன்று அவர்கள் என் அருகேயே நாற்காலியில் உட்கார்ந்து பேசுகிறார்களே இதைவிடப் பெரிய பரிசும், பாராட்டும் இருக்க முடியுமா?" எனப் பெருமிதம் கொள்ளும் பி.கே.எஸ். மாதவன் நம் மனதில் நீங்காத இடம் பெறுகிறார்.

சென்னை — 15,

எஸ். அருண் குணா.

* இந்தியாவிற்கு ஒரு மாதவன் போதாது. பல ஆயிரம் மாதவன்கள் வேண்டும் — என்பதே என் பிரார்த்தனை. சரியான நேரத்தில் மிகச் சரியான கட்டுரை வழங்கிய கல்கிக்கு என் மனமார்ந்த பாராட்டுக்கள்.

சாத்தனூர். கோ. மனோரஞ்சிதம்

* கருணாநிதி கூறியதும், கூறாமல் விட்டதும் தலையங்கம் நிச்சயம் அவரை யோசிக்க வைக்கும்.

திருத்துறைப்பூண்டி.

ஜெயந்திப்ரியன்.

* தலையங்கம் மிக அருமை. அரசு ஊழியரின் வேலை நிறுத்தம் பற்றிக் கலைஞர் கூறியதை அழகாய் வெளிப்படுத்தியதோடல்லாமல் அவர் கூறாமல் விட்டதையும் குறிப்பிட்டிருப்பது, தங்கள் நடுநிலைக் கருத்தைத் தெளிவுபடுத்துகிறது.

ஆத்தூர் (சேலம்).

ஆத்தூர் ராஜ்பிரபு.

* இந்திய அமைதிப் படையினரைப் பற்றிச் சமீப காலமாக,



வட்ட மேஜை

ஒரு மாதவன் போதாது

அமைதியை விரும்பாத விஷமிகளால், பரவி வரும் தவறான கருத்துக்கள் போலியானவை என்று 'அமைதிப்படை திரும்பிச் சென்றால் எங்கள் கதி என்ன...?' எனும் கட்டுரை நிரூபித்தது. நன்றி.

சென்னை — 71,

முஹம்மத் லத்தீப் ராஜா.

* ஸ்ரீ ஜயேந்திரரின் இயக்கமான 'ஜனகல்யாண்' மூலம் நாட்டில் நடக்கவிருக்கும் நற்பணிகளுக்கு முன்னுதாரணம் சித்திரைக் குளம் சீரமைப்பு. இருபத்தி ஒன்றாவது நூற்றாண்டின் விடியலில் ஜயேந்திரரைப் போன்ற மடாதிபதியை — நம்மிடையே புகுத்திய இறைவனுக்குத்தான் நாம் நன்றி சொல்ல வேண்டும்!

மன்னார்குடி. ஜி. நீலா.

* 'இவர்கள் புதுக்கவிதை எழுதினால்...?' — கற்பனையாகத் தோன்றவில்லை. அவர்களின் இன்றைய உண்மை நிலையே அது.

மயிலாடுதுறை. கெ. எழில்.

* 'இருள் வரும் நேரம்' — தொடர் கதையில் பால்துண்டு ஒரு பெண்ணைக் கடத்திச் செல்லும் நோக்கத்துடன் புஜத்தைப் பிடித்து இழுப்பதாக வருகிறது. ஆனால் அரஸ் வரைந்துள்ள ஓவியத்திலோ அப்பெண்ணின் முகத்தில் எந்தவிதப் பயமோ அல்லது சிறு எதிர்ப்பு உணர்ச்சி கூட இல்லாமல், 'அதற்கென்ன, வந்தால் போயிற்று' என்கிற மாதிரியும், புஜத்தை அல்லாமல் அப்பெண்ணின் கையைப் பிடித்து இழுப்பது போலவும் உள்ளது.

கோவை — 9. மாருதிப் பிரியன்.

* 'காலுக்குச் செருப்பு இல்லை என்ற கவலை. காலே இல்லாதவனைப் பார்க்கும் வரைதான் இருக்கும்' என்ற ஆன்றோர் வாக்கினுக்குச் சான்றாக அமைந்தது 'சுமைகள்' சிறுகதை. தமக்கு வேண்டியவர்களின் பெரும் பிரச்னைக்கு முன்னால் தம் சிறு பிரச்னை தூசு என்பதை அழகாக எடுத்துக் கூறி இருந்தார் ராம் பிரபு.

திருப்பரங்குன்றம்.

டி. கே. சுப்பிரமணியன்.

* உண்மையான ஆர்வத்தோடு, நிறைமையோடு பரதம் ஆடிய வளரும் கலைஞர் பிரீதாவுக்குத் தங்களின் அறிவுரை மொழிகள், தரமான தங்க வரிகள்.

தஞ்சை. கவிஞர் சுகன்.

* 'பலமும் பலவீனமும்' — காலை ஒன்பது மணிக்கு ஆரம்பித்த கதை... காலை ஒன்பது மணிக்கே முடிவடைகிறது! ஆக பல்லாவரத்திலிருந்து எல். ஐ. சி. வரை பிரயாணம் செய்த நேரம், சண்டையை வேடிக்கை பார்த்தது, கீழே இறங்கியது, தெருவில் இறங்கியதெல்லாம் ஜீரோ மணித்துளிகளா?

குத்தாலம். வி. சுந்தரராமன்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.

முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலே, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3156 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 380/—; விமானத் தபால் ரூ. 680/—.

ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.


கல்கி
7-8-88
இலவச இணைப்பு
அமர வாழ்வு
அமரர் கல்கி

முன்னுரை

பர்மாவிலிருந்து தாய்நாட்டிற்குத் திரும்பி வந்த பிறகு'என் உள்ளம் அமைதி இழந்து அலைப்புண்டிருந்தது. ஓரிடத்தில் நிலையாக இருப்பது சாத்தியமில்லாமல் போயிற்று. என் மனோ நிலையை வியாஜ்மாகக் கொண்டு தேச யாத்திரை செய்யத் தொடங்கினேன். அந்தத் தேச யாத்திரையைப் பெரும்பாலும் வட இந்தியாவிலேயே செய்யும்படி தூண்டிய காரணம் ஒன்றும் இருந்தது.

வீர ராஜபுத்திரர்களின் நாட்டில் அதிசயமான வீரச் செயல்கள் நிகழ்ந்த புராதனமான கோட்டை கொத்தளங்களையும், பாழடைந்த பழைய ஊர்களையும், அழகு குடி கொண்ட புதிய பட்டணங்களையும், அந்தப் பட்டணங்களிலே லீலா விநோதங்களுக்குப் பெயர் போன சிருங்கார அரண்மனைகளையும் சுற்றிப் பார்த்துச் சலித்த பிறகு, கடைசியாக ஆஜ்மீர் ஸ்டேஷனிலிருந்து பம்பாய்க்குப் போவதற்கு டிக்கெட் வாங்கினேன். ஆஜ்மீரில் டிக்கெட் கொடுத்த ஸ்டேஷன் குமாஸ்தா ஒரு எச்சரிக்கை செய்தார். ''வழியில் ரட்லம் சமஸ்தானத்தில் ஏதோ கலாட்டா நடப்பதாகத் தெரிகிறது. கால திட்டப்படி ரயில் போய்ச் சேர்வது நிச்சயமில்லை. நீங்கள் வேறு மார்க்கமாய்ப் போவது நல்லது!'' என்று அவர் சொன்னார்.

அதற்கு நான், ''எத்தனையோ கலாட்டாக்களை நான் பார்த்திருக்கிறேன், ஐயா! பரவாயில்லை. டிக்கெட் கொடுங்கள்!'' என்றேன்.

ஆஜ்மீர் ஸ்டேஷனில் ஜனங்கள் அங்கங்கே கும்பல் கூடிப் பரபரப்புடன் பேசிக் கொண்டிருந்த விஷயம் என்னவென்பது மேற்படி டிக்கெட் குமாஸ்தாவின் எச்சரிக்கையின் மூலம் எனக்குத் தெரிய வந்தது.

ரயில் புறப்பட்ட போது அதில் வழக்கத்துக்கு மாறாகக் கூட்டம் ரொம்பக் குறைவாக இருந்தது. ஏறியிருந்தவர்களில் போலீஸ்காரர்கள், இந்தியச் சிப்பாய்கள், இங்கிலீஷ் டாம்மிகள் ஆகியவர்கள்தான் அதிகமாயிருந்தார்கள்.

இத்தனை நாளும் ரயில் பிரயாணத்தில் கூட்டத்திலேயே கிடந்து அவஸ்தைப்பட்ட எனக்கு இது பெரிதும் உற்சாகத்துக்குக் காரணமாயிருந்தது. ஒருவருமே ஏறியிராத ஓர் இரண்டாம் வகுப்பு வண்டியைக் கண்டுபிடித்து அதில் ஏறிக் கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டேன். பிரயாணத்துக்கான உடையைக் களைந்துவிட்டுக் கம்பளியை இழுத்துப் போர்த்திக் கொண்டு ஹாய்யாகக் காலை நீட்டிக் கொண்டு படுத்தேன். ரயிலும் கிளம்பிற்று.



1. ரட்லம் ஜங்ஷன்

நான் நிம்மதியான நினைவற்ற தூக்கம் தூங்கி எத்தனையோ காலம் ஆயிற்று என்றாலும், ஓடும் ரயிலின் ஓசையும் சுழலும் சக்கரங்களின் சத்தமும் பெரும்பாலும் என்னைக் கண்ணயரச் செய்வது வழக்கம். எத்தனை நேரம் அன்று நான் தூங்கினேனோ தெரியாது. பழைய வாழ்க்கைச் சம்பவங்களைப் பற்றிய கனவு கண்டு திடீரென்று தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு எழுந்தேன். ரயில் ஓடாமல் நிற்கிறது என்று தெரிந்தது. நிற்கிற இடம் ஸ்டேஷன் இல்லை என்றும் என் உள்ளுணர்வு சொல்லிற்று. ஸ்டேஷன் என்றால், அதற்கென்று தனி உரிமையுள்ள சில சப்தங்கள் கேட்கும். வண்டியில் இடம் பிடிக்க ஓடுகிறவர்களின் நடமாட்டம், ஏறி இறங்குகிறவர்களுடைய ஆர்ப்பாட்டம், 'கரம்சா' 'கரம்தூத்' கூப்பாடு, போர்ட்டர்களின் ஆரவாரம், — இவற்றிலிருந்து ரயில் பெரிய ஜங்ஷனிலோ, சிறிய ஸ்டேஷனிலோ நிற்கிறதென்பதைக் கண்டுபிடிக்கலாம். ஆனால், இங்கே அம்மாதிரி சப்தங்களில்லை. எங்கேயோ வெகு தூரத்திலிருந்துஇனந்தெரியாத சப்தங்கள் கேட்டன. வண்டியின் பலகணி ஒன்றைத்திறந்துஉள்ளேகுப் என்று புகுந்த குளிர்ந்த பனிக் காற்றைப் பொருட்படுத்தாமல் வெளியே தலையை நீட்டினேன். என்னைப் போலவே பல தலைகள் வண்டிக்கு வெளியே நீட்டப்பட்டிருந்தன. ஒரு சிலர் கீழே இறங்கி ரயிலோரமாக நடந்துகொண்டிருந்தார்கள். எதிரே கொஞ்ச தூரத்தில் ஒரு பட்டணம் இருப்பது தெரிந்தது. எப்படித் தெரிந்தது என்றால், அந்தப் பட்டணத்தில் ஆங்காங்கே சில வீடுகள் தீப்பிடித்து எரிய, மேற்படி தீயின் வெளிச்சத்திலே பட்டணம் தெரிந்தது! பட்டணம் தெரிந்த திசையிலிருந்து படார், படார் என்று துப்பாக்கிக் குண்டுகள் வெடிக்கும் சப்தம் வந்து கொண்டிருந்தது.

அடுத்த வண்டியிலிருந்து தலையை நீட்டியவரைப் பார்த்து, ''என்ன ஸார், விசேஷம்! ரயில் எங்கே வந்திருக்கிறது?'' என்று கேட்டேன். ''ரட்லம் ஸ்டேஷனுக்கு அருகில் வந்திருக்கிறது; டவுனில் ஏதோ கலாட்டா நடப்



பது போல் காண்கிறது!'' என்றார்.

ஆஜ்மீர் ஸ்டேஷனில் டிக்கெட் குமாஸ்தா சொன்னது சரிதான் என்று நினைத்துக் கொண்டேன்.

சில நிமிஷத்துக்கெல்லாம் ரயில் கார்டின் விசில் சப்தம் கேட்டது. ரயிலும் புறப்பட்டது. மெதுவாக நகர்ந்து சென்று கைகாட்டி மரத்தைத் தாண்டி ரட்லம் ஸ்டேஷனுக்குள் போய் நின்றது. வண்டியிலிருந்த சிப்பாய்கள் முதலியோர் மளமளவென்று கீழே இறங்கினார்கள். பிளாட்பாரத்தில் அங்குமிங்கும் ஜனங்கள் கும்பல் சேர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பக்கம் போன ஸ்டேஷன் அதிகாரி ஒருவரை நிறுத்தி, ''என்ன, ஐயா, விசேஷம்? வண்டி இதற்கு மேல் போகுமா? போகாதா?'' என்று கேட்டேன். அவர் தமது வாயிலிருந்த சிகரெட்டை எனக்குப் பதில் சொல்வதற்காக எடுக்கலாமா வேண்டாமா என்று சிறிது யோசனை செய்துவிட்டு, பிறகு ஒரு தீர்மானத்துக்கு வந்தவராய், ''கொஞ்ச தூரத்திற்கப்பால் ரயில் பாதை சேதமாகியிருக்கிறது. செப்பனிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இனிமேல் பொழுது விடிந்த பிறகுதான் ரயில் புறப்படும்'' என்றார்.

உடனே நான் படுக்கையைச் சுற்றிக் கட்டினேன். களைந்து வைத்த உடுப்பை போட்டுக்கொண்டேன். கஷ்டப்பட்டு ஒரு போர்ட்டரைக் கண்டு பிடித்துப் பெட்டி படுக்கையைத் தூக்கிக் கொள்ளச் செய்தேன். மேல் பாலத்தில் ஏறி இறங்கி முதல் நம்பர் பிளாட்பாரத்தில் இருந்த வெயிட்டிங் ரூமுக்குப் போய்ச் சேர்ந்தேன்.

வெயிட்டிங் ரூமில் விளக்கு எரியவில்லை. வெளியில் பிளாட்பாரத்து விளக்கிலேயிருந்து மங்கலான வெளிச்சம் வந்தது. அறை அடியோடு காலி என்று முதலில் தோன்றியது. அப்புறம் சுற்றுமுற்றும் நன்றாய்ப் பார்த்ததில் அந்த எண்ணம் தவறு என்று தெரிந்தது. சுவர் ஓரமாகக் கிடந்த தாழ்ந்த பிரம்புக் கட்டிலில் ஒரு மனிதர் படுத்துக் கொண்டிருந்தார். அவருடைய முகம் சுவரின் பக்கமாகத் திரும்பியிருந்தது. அவர் யார், இன்ன மாதிரி மனிதர் என்று இனம் தெரிந்து கொள்ள முடியவில்லை.

ஒரு வட்ட மேஜையும் அதன் இரண்டு பக்கங்களில் இரண்டு நாற்காலிகளும் கி ந்தன. சாமான்களைக் கீழே வைக்கச் சொல்லி விட்டு ஒரு நாற்காலியில் நான் உட்கார்ந்தேன். போர்ட்டரிடம், மறுபடியும் ரயில் கிளம்பும் போது வந்து கூப்பிடும்படி சொன்னேன்.

போர்ட்டர் போன பிறகு சிறிது நேரம் வட்டமேஜை மீது கைகளை ஊன்றிக் கொண்டு உட்கார்ந்திருந்தேன்: என் பிறப்பு, வளர்ப்பைப் பற்றியும், வாழ்க்கையில் நான் அடைந்த அனுபவங்களைப் பற்றியும் ஏதேதோ எண்ணங்கள் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. இந்த மாதிரி முன்பின் தெரியாத ஒரு வடநாட்டு ரயில்வே ஸ்டேஷனில், ஒரு நாள் நள்ளிரவில், நான் தன்னந்தனியாக உட்கார்ந்திருப்பேன் என்று நாலைந்து வருஷங்களுக்கு முன் யாராவது சொல்லியிருந்தால், சொல்லியவர்களுக்குப் பைத்தியக்காரப் பட்டம் சூட்டியிருப்பேன்.

என்ன அர்த்தமற்ற காரியம் இது? என் வாழ்க்கையே இப்படி அர்த்தமற்றதாகத்தான் போய் விடுமோ?

'டப் டப் டபார்' என்று துப்பாக்கி வெடிச் சத்தம் மறுபடியும் கேட்டது. சுவருக்கருகில் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த மனிதர் ஒரு தடவை புரண்டு படுத்தார். மறுபடியும் ஒரு நொடிப் பொழுதில் அவருடைய முகம் சுவரின் பக்கமாகத் திரும்பி விட்டது.

2. ஜெ ஹிந்த்!

என்னுடைய கண்ணிமைகளும் இலேசாக வளைந்து கொடுக்கத் தொடங்கின. படுக்கையைத் தரையிலே விரித்துக் கொண்டு படுக்கலாமென்று எண்ணி நாற்காலியிலிருந்தபடியே குனிந்து படுக்கையைப் பிரித்தேன். அப்போது யாரோ ஒருவர் அந்த அறைக்குள்ளே வருவது தெரிந்தது. குனிந்தபடியே கடைக்கண்ணால் வருவது யார் என்று கவனித்தேன். அவ்வளவுதான்; என் கைகள் வெடவெடவென்று நடுங்கத்தொடங்கின. படுக்கையைக் கட்டியிருந்த தோல் வாரைக் கழற்ற முடியவில்லை. வெளியே எங்கேயோ தூரத்தில் கேட்ட துப்பாக்கி வெடியின் சப்தம் இப்போது என் நெஞ்சுக்குள்ளே வெடிப்பது போல் கேட்டது. சட்டென்று ஒரு பெருமுயற்சி செய்து மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தேன். உள்ளே வந்த மனிதர் சுவர் ஓரமாகப் பெட்டி படுக்கையை வைத்து விட்டு வந்து எனக்கெதிரே வட்டமேஜைக் கருகில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தார்.

முதலில் அவர் என்னைப் பார்க்கவில்லை. வெயிட்டிங் ரூமின் வாசல் வழியாகப் பிளாட்பாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். சிறிது நேரத்துக்குப் பிறகு, நான் அவரையே உற்று நோக்கிக் கொண்டிருந்ததை உணர்ந்ததினால்தானோ என்னவோ, என் பக்கமாகப் பார்த்தார்.

முதலில் அசட்டையாகப் பார்த்தார்; பிறகு உற்றுப் பார்த்தார்.

"ஜே ஹிந்த்!" என்றார்.

அந்தக் குரலும் வார்த்தைகளும் என் உள்ளத்தில் அடங்கிக் கிடந்த எத்தனையோ உணர்ச்சிகளைப் பொங்கும்படி செய்தன. மிகவும் பிரயத்தனப்பட்டு உள்ளத்தில் பொங்கிய உணர்ச்சிகளையும் கண்களிலே துளிக்கப் பார்த்த கண்ணீரையும் அடக்கிக் கொண்டு கம்மிய குரலில் நானும் "ஜே ஹிந்த்!" என்று வாழ்த்தினேன்.

"தமிழர் போலிருக்கிறது!" என்றார்.

"ஆமாம்!" என்றேன்.

"நாம் எங்கேயாவது சந்தித்திருக்கிறோமா? உமது முகம் பார்த்த முகமாய்த் தோன்றுகிறது; ஆனால் எங்கே பார்த்தோமென்று ஞாபகம் வரவில்லை!" என்றார்.

அவருக்கு ஞாபகம் வராததற்கு மங்கலான வெளிச்சத்தைத் தவிர வேறு காரணமும் உண்டு என்பதை நான் அறிந்திருந்தேன். பேச்சைத் திருப்ப விரும்பினேன்.



"பர்மா அல்லது மலாயில் பார்த்திருக்கலாம். அந்தக் குழப்பமான காலத்தில் பார்த்த பதினாயிரம் முகங்களில் எதையென்று ஞாபகம் வைத்துக் கொள்ள முடியும்?" என்று சொல்லி, மேலே அவர் பேச இடம் கொடாமல், "இந்த இருளடைந்த ஸ்டேஷனிலிருந்து ரயில் எப்போது கிளம்பும், ஏதாவது தெரியுமா?" என்று கேட்டேன்.

"அதுதானே தெரியவில்லை. நீங்கள் எந்தப் பக்கம் போக வேண்டுமோ?"

"பம்பாய்ப் பக்கம் போகிறேன்."

"நான் தில்லிக்குப் போக வேண்டும்."

"தில்லிக்கா? நீங்கள் தில்லி செங்கோட்டையில் நடந்த விசாரணையில்....." என்று தயங்கினேன்.

"இல்லை; நான் செங்கோட்டைக் கைதியில்லை. பர்மாவிலிருந்து நேரே வந்தவன். செங்கோட்டையிலிருந்து விடுதலையான ஒரு மனிதரைத் தேடிக் கொண்டு பம்பாய்க்குப் போனேன். அதற்குள்ளே அவர் பம்பாயிலிருந்து கிளம்பிப் போய்விட்டதாகத் தெரிந்தது... உங்களுக்கு மேஜர் ஜெனரல் குமரப்பாவைத் தெரியுமா!" என்று அவர் திடீரெனக் கேட்டார்.

"குமரப்பாவைத் தெரியாமல் இருக்க முடியுமா? நேதாஜிக்கு அடுத்தபடியாக ஐ.என்.ஏ. வீரர்களின் பக்தியைக் கவர்ந்த மகாபுருஷர் அல்லவா?"

"ஆமாம்; அந்த மகாபுருஷரைத் தேடிக் கொண்டுதான் போகிறேன். எதற்காகத் தெரியுமா?"

"தெரியவில்லையே?" என்று தயங்கிக் கூறினேன்.

அவர் தம்முடைய கால் சட்டையின் பைக்குள்ளே கையை விட்டு ஒரு ரிவால்வரை எடுத்து என் முகத்துக்கு நேரே அதைப் பிடித்தார்.

"இதிலே ஆறு குண்டுகள் இருக்கின்றன. ஆறில் ஐந்து குண்டுகளையாவது குமரப்பாவின் மார்பில் செலுத்துவதற்காகத்தான். ஒன்று, இரண்டு, மூன்று......"

என்னுடைய உள்ளத்தில் அப்போது குமுறி எழுந்த அலைகளை அடக்கிக் கொண்டு, "இது என்ன பேச்சு பேசுகிறீர்கள்? தயவு செய்து ரிவால்வரைச் சட்டைப் பைக்குள் போட்டுக் கொள்ளுங்கள்!" என்றேன்.

அவர் அப்படியே செய்தார். பிறகு இரண்டு கைகளாலும் சிறிது நேரம் முகத்தை மூடிக் கொண்டிருந்தார்.

"ஏதோ ரொம்பவும் மன வேதனைக்கு ஆளாகியிருக்கிறீர்கள் போலிருக்கிறது. அதைப் பற்றி என்னிடம் சொல்லலாம் என்றால் சொல்லுங்கள்!" என்றேன்.

அவர் தமது முகத்தை மூடியிருந்த கைகளை எடுத்துவிட்டு, "இந்தப் பிரயாணம் தடைப்பட்டதினால் ரொம்பவும் மனத்தளர்ச்சி அடைந்து விட்டேன். தயவு செய்து மன்னியுங்கள்!" என்றார்.

"ரயில் இன்று இரவு கிளம்பப் போவதில்லை. நம் இருவருக்கும் தூக்கம் வரவுமில்லை. நீங்கள் உங்கள் அனுபவங்களைச் சொன்னால், நானும் பிற்பாடு என் கதையைச் சொல்கிறேன். ராத்திரி பொழுதும் போகும்" என்றேன்.

"நீரும் ஐ. என். ஏ. சகோதரர்; அதிலும் தமிழ்நாட்டாராயிருக்கிறீர். உம்மிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வது? ஆனால் கதையை எந்த இடத்தில் ஆரம்பிக்கிறது என்றுதான் யோசிக்கிறேன்!"

"சுதந்திரப் படையில் தாங்கள் சேர்ந்ததிலிருந்து ஆரம்பிக்கலாமே?" என்றேன்.

"இல்லை, இல்லை; கதையைச் சொல்வதாயிருந்தால் முதலிலிருந்தே தொடங்குவதுதான் சரி!" என்று சொல்லிவிட்டு, சுவர் ஓரமாகக் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த மனிதரைத் திரும்பிப் பார்த்தார்.

"அவர் அசந்து தூங்குகிறார். மேலும் யாரோ வடக்கத்தி மனுஷர் என்று தோன்றுகிறது. நாம் தமிழில் பேசினால் அவருக்கு என்ன தெரியப் போகிறது?" என்றேன்.

இன்னும் கொஞ்சம் தாஜா பண்ணிய

பிறகு, அவர் தமது கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.

3. கர்னல் குமரப்பா

கதாநாயகனுடைய பெயர் டாக்டர் ராகவன். செல்வக் குடும்பத்தில் பிறந்தவன். அவனுடைய தகப்பனார் ஒரு பிரபல டாக்டர். தமது புதல்வனும் தம்மைப் போல் வைத்தியத் தொழிலில் பிரபலமாக வேண்டுமென்று அவர் விரும்பினார். தந்தையின் விருப்பத்தைப்புதல்வன் வெகு நன்றாகநிறைவேற்றி வைப்பான் என்று தோன்றியது. வைத்தியக் கல்லூரியில் படித்து மிகச் சிறப்பாகத் தேறினான். பிறகு அவன் தமக்கு உதவியாகப் 'பிராக்டிஸ்' செய்ய வேண்டுமென்று தந்தை விரும்பினார். ஆனால் பையனுக்கு வைத்திய சாஸ்திரத்தில் ஏற்பட்டிருந்த அபார மோகமானது அதற்குக் குறுக்கே நின்றது. ''நமது மெடிகல் காலேஜில் இப்போது சொல்லிக் கொடுப்பதெல்லாம் பத்து வருஷத்துக்கு முன்னாலிருந்த வைத்திய சாஸ்திரம். சென்ற பத்து வருஷத்தில் எத்தனையோ அதிசயங்களை மேனாட்டு வைத்திய நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். நான் அமெரிக்காவுக்குப் போய் அவற்றைக் கற்றுக் கொண்டு வருகிறேன்'' என்றான். பிள்ளையின் பிடிவாதமான கோரிக்கைக்குத் தகப்பனாரும் சம்மதிக்க வேண்டியிருந்தது.

ராகவன் அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்த பிறகும் அவன் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கக்கூடவில்லை. பெரிய கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரியில் சம்பளமில்லாத உதவி ஸர்ஜனாகச் சேர்ந்தான். அவ்விதம் ஆஸ்பத்திரியில் வேலை செய்தால்தான் தன்னுடைய வைத்திய சாஸ்திர அறிவு விசாலித்துப் பரிபூரணம் அடையும் என்று சொன்னான்.

மகனுடைய நோக்கத்தை அறிந்து தகப்பனார் பெருமையடைந்தார். ''இவன் வெறுமே பணம் சம்பாதிப்பதற்காக வைத்தியம் செய்யப் பிறந்தவன் அல்ல; வைத்திய சாஸ்திரத்தையே விரிவுபடுத்தி மனித வர்க்கத்துக்கு நன்மை செய்யப் பிறந்தவன்'' என்று தீர்மானித்து அப்படியே செய்ய அனுமதி கொடுத்தார். அனுமதி கொடுத்துச் சில காலத்துக்கெல்லாம் அவர் வைத்தியம் என்பதே தேவையில்லாத மேல் உலகத்துக்குச் சென்றார்.

தந்தையினுடைய சரமக் கிரியைகளைச் சரிவரச் செய்வதற்குக் கூட டாக்டர் ராகவனுக்கு அவகாசம் கிடைக்கவில்லை. அவ்வளவு தூரம் அவன் வைத்தியக் கலை அறிவின் வளர்ச்சியில் முழுகிப் போயிருந்தான். அவன் வேலை செய்த பெரிய ஆஸ்பத்திரியில் அவனுடைய இலாகாவுக்குத் தலைவராயிருந்தவர் கர்னல் குமரப்பா என்பவர். அவர் ஐ.எம்.எஸ். வர்க்கத்தைச் சேர்ந்தவர். சென்ற யுத்தத்தின் போது போர்க்களத்துக்குப் போய் வந்தவர். பிற்



பியூன்: மானேஜர் ரொம்ப பிஸியா இருக்கார்! இப்போதைக்குப் பார்க்க முடியாது!

வந்தவர்: லஞ்சம் கொண்டு வந்திருக்கேன்னு போய்ச் சொல்லு... என்னை எதிர் கொண்டு அழைக்க வருவார்!

— மணியன் தர்மலிங்கம்.



வந்தவர்: புகார் ஒண்ணு செய்யணும் ஸார்!

ஆபீஸர்: அந்தப் புகாரை அப்படியே எழுதிப் புகார் பெட்டியில் போடுங்க, போதும்!

வந்தவர்: அந்தப் புகார் பெட்டி இல்லை. அதுதான் என் புகார்!

— மீனம் தனுசு.

''இவர்தாங்க 'வாரிய' தலைவர்...!''

''இப்ப ஏது வாரியம்...?''

''நான் சொல்றது அரசியலில் காலை 'வாரிய' தலைவர்.....!

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா.



பாடு ஐரோப்பாவுக்குச் சென்று வியன்னா நகரிலும் பெர்லின் நகரிலும் இருந்த பிரபலமான வைத்திய சாலைகளில் கொஞ்ச காலம் இருந்து தமது வைத்தியக் கலை ஞானத்தை வளர்த்துக் கொண்டு திரும்பியிருந்தார். எனவே, வைத்திய உலகத்தில் அவருக்கு மிகவும் பிரசித்தமான பெயர் ஏற்பட்டிருந்தது. ''யமதர்ம ராஜனுக்கு ஏதாவது ஆபரேஷன் பண்ணிக் கொள்ள நேர்ந்தால் அவன் கூடக் கர்னல் குமரப்பாவிடம் வந்துதான் ஆக வேண்டும்'' என்று சொல்வார்கள்.

அத்தகையவரின் கீழே வேலை செய்வதால் தன்னுடைய வைத்திய ஞானத்தையும் அனுபவத்தையும் வளர்த்துக் கொள்ளலாம் என்று டாக்டர் ராகவன் எண்ணியிருந்தான். ஆனால் இது விஷயத்தில் சீக்கிரத்திலேயே ஏமாற்றம் அடைந்தான். கர்னல் குமரப்பா இரண சிகிச்சையில் பெரிய நிபுணராயிருக்கலாம்; ஆனால் அவருக்கு வைத்தியக் கலையில் அவ்வளவு சிரத்தையில்லை என்று தோன்றியது; பல முக்கியமான ரணசிகிச்சைக் கேஸ்களை அவர் தமக்கு உதவியாக அமர்ந்த டாக்டர்களிடம் விட்டு வந்தார். ஏதாவது சந்தேகம் கேட்டால் சரியாகப் பதில் சொல்வதில்லை. கேள்வியை மனத்தில் சரியாக வாங்கிக் கொள்ளாமலே எதையோ கேட்பதற்கு எதையோ பதில் சொல்வது வழக்கமாயிருந்தது.

கர்னல் குமரப்பா இப்படி மெய் மறந்து எதிலும் சிரத்தையில்லாமல் ஏனோ தானோ என்றிருப்பதற்கு ஒரு கெடுதலான காரணத்தைச் சிலர் கற்பித்துச் சமிக்ஞையாகப் பேசினார்கள். முதலில் அதை டாக்டர் ராகவன் கொஞ்சங்கூட நம்பாததோடு அப்படிப் பேசினவர்களைக் கடுமையாகக் கண்டித்தான்.

அந்த விஷயம் பின்வருமாறு; மெடிகல் காலேஜில் படித்துத் தேறியிருந்த டாக்டர் ரேவதி என்ற பெண் சென்ற வருஷத்தில் அந்த ஆஸ்பத்திரியில் ஒரு வருஷப் பயிற்சி பெறும் பொருட்டு 'ஹவுஸ் ஸர்ஜ'னாக வந்திருந்தாள். அவள் தேசத் தொண்டில் பிரசித்தி பெற்றிருந்து காலமான ஒரு தேசபக்தரின் மகள். கர்னல் குமரப்பா அந்தப் பெண்ணிடம் அளவுக்கு அதிகமான அபிமானம் காட்டுகிறார் என்று பொறாமைக்காரர்கள் சிலர், புகார் செய்தார்கள். இதைக் குறித்து ஆஸ்பத்திரிக்குள்ளேயும் வெளியேயும் சிலர் ஜாடை மாடையாகப் பேசினார்கள். இந்த மாதிரி பேச்சு காதில் விழுந்தபோதெல்லாம் டாக்டர் ராகவன் பளீச்சென்று, ''இந்த தேசத்தில் மனத்தில் அசுத்தம் உள்ளவர்கள் யாரைப் பற்றியாவது ஏதேனும் அவதூறு சொல்லிக் கொண்டுதான் இருப்பார்கள். தங்களுடைய மனத்திலுள்ள அசங்கியத்தைப் பிறர் மேல் ஏற்றி வைத்துப் பேசுவார்கள்'' என்று கூறி வம்புக்காரர்களின் வாயை அடைத்து விடுவான்.

4. காதல் யாத்திரை

எனினும் டாக்டர் ரேவதியின் மேல் கர்னல் குமரப்பாவின் விசேஷ அபிமானத்தைப் பற்றிக் கேட்ட பிறகு அவனுடைய கவனம் டாக்டர் ரேவதியின் மீது அதிகமாகச் செல்ல ஆரம்பித்தது. இது ரேவதியின் கவனத்தையும் கவர்ந்தது. முதல் தடவை பேசின உடனேயே ரேவதிக்கும் ராகவனுக்கும் சிநேகப் பான்மை ஏற்பட்டு விட்டது. இதைக் 'காதல்' என்று யாராவது சொல்லியிருந்தால் சுத்தப் பைத்தியக்காரத்தனம் என்றுதான் டாக்டர் ராகவன் சொல்லியிருப்பான். ஆயினும் வர வர, காவியங்களிலே காதல் என்பதற்கு என்னென்ன இலட்சணங்கள் கூறப்பட்டிருக்கின்றனவோ, அவையெல்லாம் ராகவன் — ரேவதியினுடைய நடவடிக்கைகளில் காணப்படலாயின. ஏதாவது ஒரு காரணத்தைக் கற்பித்துக் கொண்டு ஒருவரையொருவர் அடிக்கடி சந்திக்கப் பிரயத்தனப்பட்டார்கள். ஒருவருடைய பேச்சு இன்னொருவருடைய காதுக்கு மிகவும் இனிமையளித்தது. தங்களை அறியாமலே ஒருவருடைய கண்கள் இன்னொருவருடைய கண்களை நாடிச் சென்றன.

அதோடு நின்று விடவில்லை. சில நாளைக்கெல்லாம் டாக்டர் ராகவனுடைய மனத்தில் பொறாமை என்னும் தீ பற்றி எரியத் தொடங்கியது. டாக்டர் ரேவதி வேறு எந்த ஆண் டாக்டரோடாவது நெருங்கிப் பேசுவதைப் பார்த்தால் ராகவனுக்குக் கோபம் வந்தது. எந்த ஆண் நோயாளியிடமாவது ரேவதி அதிக சிரத்தை எடுத்துக் கவனித்தாலும் கூட ராகவனுக்குப் பொறுக்க முடியவில்லை.

இந்த நிலைமையில் டாக்டர் குமரப்பாவையும் ரேவதியையும் பற்றிய வம்புப் பேச்சுக்கள் ராகவனுடைய நினைவுக்கு அடிக்கடி வந்து உறுத்தத் தொடங்கின. அவற்றில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கலாமென்று அவன் மனம் யோசனை செய்யத் தொடங்கியது. டாக்டர் குமரப்





பாவைத் தனிமையாக அவருடைய அறையில் பார்த்து விட்டு ரேவதி திரும்பும் போது ராகவன் அவளைக் கவனமாகப் பார்க்கத் தொடங்கினான். அப்போதெல்லாம் வழக்கத்தைக் காட்டிலும் அதிக படபடப்புடன் அவள் வருவதையும் சில சமயம் அவளுடைய கண்கள் கலங்கிக் கண்ணீர் துளித்திருப்பதையும் பார்த்த போது அவனுடைய உள்ளம் கொதித்தது. ரேவதியை இதைப் பற்றிக் கேட்டே விடுவது என்று அவன் முடிவாகத் தீர்மானித்திருந்த சமயத்தில், அவளே ஒருநாள் அவனிடம் வந்து, "டாக்டர்! நான் பெரிய அபாயத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறேன். தங்களுடைய யோசனையும் உதவியும் எனக்கு வேண்டும்" என்று பரபரப்புடன் கூறினாள். அன்று மாலை ஆஸ்பத்திரி வேலை முடிந்தவுடன் தன்னுடைய வீட்டுக்கு வந்து சந்திக்கும்படி சொன்னான் ராகவன்.

அப்படியே அன்றிரவு ரேவதி ராகவனுடைய வீட்டுக்குச் சென்று தன் வாழ்க்கை வரலாற்றைக் கூறினாள். வாழ்நாளெல்லாம் தேசத் தொண்டு செய்த தன் தந்தை எப்படிப் பூர்வீக பிதிரார்ஜித சொத்தையெல்லாம் செலவழித்து விட்டுக் குடும்பத்தை நிராதரவாய் விட்டு விட்டுக் காலமானார் என்பதையும், தன்னைத் தக்க இடத்தில் கலியாணம் செய்து கொடுக்கத் தன் தாயார் செய்த பிரயத்தனங்கள் எப்படிப் பலனளிக்காமற் போயின என்பதையும், தன்னுடைய சொந்த முயற்சியால் அனாதைப் பெண்கள் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து தேறி மெடிகல் காலேஜிலும் சேர்ந்து படித்து டாக்டர் ஆனதையும் பற்றித் தெரிவித்தாள். கர்னல் குமரப்பா முதலில் தன்னிடம் காட்டிய அன்பைக் குறித்துப் பெருமையடைந்து வந்ததையும், மற்றவர்களின் அவதூறான ஜாடை மாடைப் பேச்சுக்களை அலட்சியம் செய்து வந்தது பற்றியும் குறிப்பிட்டாள்.. கடைசியாக ரேவதி சொன்னாள்: "டாக்டர் ராகவன்! கொஞ்ச நாளாக எனக்கே இது விஷயத்தில் சந்தேகம் உண்டாகியிருக்கிறது. கர்னலின் நடை உடை பாவனைகள் அவ்வளவு நன்றாயில்லை. அவரை நான் தனியாக அவருடைய அறையில் சந்திக்க நேரும்போதெல்லாம், என் முதுகில் தட்டிக் கொடுத்தும், கன்னங்களைத் தொட்டும், முகவாய்க்கட்டையைப் பிடித்துக் கொண்டும், 'ரேவதி! உன்னைத்தான் நான் முழுக்க முழுக்க நம்பியிருக்கிறேன். ஒரு சமயம் வரும்; அப்போது என்னை நீ நம்பி, நான் சொன்னபடி கேட்க வேண்டும். கேட்பாயல்லவா?' என்று இவ்விதமெல்லாம் சொல்கிறார். இன்றைக்கு அவர் 'ரேவதி! நான் மறுபடியும் வெளிநாட்டுப் பிரயாணம் செய்யலாம் என்று எண்ணியிருக்கிறேன். என்னோடு நீ கிளம்பி வருகிறாயா?' என்று கேட்ட போது, எனக்கு ஆத்திரம் உண்டாகி, என் கண்களில் கண்ணீரும் வந்து விட்டது. அதைப் பார்த்த கர்னல், 'ஆ! நீ ரொம்ப நல்ல பெண்ணாயிருந்தாய். உன்னிடம் நான் எவ்வளவோ எதிர்பார்த்தேன். என்னுடைய காரியத்துக்குக் கை கொடுப்பாய் என்று நம்பியிருந்தேன். அந்த மூடன் ராகவன் உன் மனத்தைக் கெடுத்து விட்டான்!' என்றார். பிறகு அங்கே நிற்க முடியாமல் விரைந்து வந்து விட்டேன்!"

இவ்விதம் ரேவதி கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த ராகவன் சிறிது நேரம் மௌனமாக ஆலோசனையில் இருந்தான். பிறகு, "என் அருமை ரேவதி! ஒரு விஷயம் கேட்கிறேன். அதற்குச் சங்கோசப்படாமல் பதில் சொல்ல வேண்டும். கர்னல் குமரப்பா மனைவியை இழந்தவர் என்பது உனக்குத் தெரியும். ஒருவேளை உன்னை இரண்டாந் தாரமாகக் கலியாணம் செய்து கொள்ள அவர் விரும்பலாம் அல்லவா?" என்றான்.

"அந்த சந்தேகம் என் மனத்திலும் சில சமயம் தோன்றியதுண்டு" என்று ரேவதி சொன்னாள்.

"அப்படியானால் அதைப் பற்றி உனக்கு என்ன ஆட்சேபம்? கர்னல் குமரப்பாவை மணந்து கொள்ளும் பாக்கியம் தள்ளக் கூடியதல்லவே?" என்று கூறி, ரேவதியின் பதிலை ஆவலுடன் எதிர்பார்த்தான் ராகவன்.

"ஒருவேளை மூன்று மாதத்துக்கு முன்னால் அவர் கேட்டிருந்தால் அதில் எனக்கு ஆட்சேபமிருந்திராது. இப்போது ஆட்சேபமிருக்கிறது" என்றாள் ரேவதி.

"அது ஏன்? மூன்று மாதத்துக்குள் அதற்கு விரோதமாக என்ன காரணம் ஏற்பட்டிருக்கிறது?"

"தங்களுடன் சிநேகம் செய்து கொண்டதுதான்!" என்று ரேவதி கூறிய போது, என்னதான் அவள் கல்வியும் நாகரிகமும் படைத்த நவயுகப் பெண் ஆனாலும் கொஞ்சம் தலை குனியத்தான் செய்தாள்.

ரேவதி இவ்விதம் தன் மனோநிலையை ஒருவாறு குறிப்பிட்ட பிறகு, பரஸ்பரம் இருவரும் தத்தம் இருதயத்தை நன்றாய்த் திறந்து காட்டுவதற்கு வழி ஏற்பட்டது. ராகவனுடைய வாழ்க்கையோடு தன்னுடைய வாழ்க்கையை என்றென்றைக்கும் பிணைத்துக்

கொள்ளவும், அவனுக்காகத் தன்னுடைய உயிரையே தியாகம் செய்யவும் ரேவதி சித்தமாயிருந்தாள் என்று ஏற்பட்டது. ராகவனோ ரேவதியின் கடைக் கண் பார்வைக்காக, பாரதியார் வாக்கின் பிரகாரம் நூற்றிரண்டு மலைகளைப் பொடிப் பொடியாக்கவும் காற்றிலேறி விண்ணைப் பிளக்கவும் தயாராயிருந்தான்.

கடைசியில், ராகவன் சொன்னான்: ''என் கண்ணே! பொறாமையும் பொய்யும் பித்தலாட்டமும் நிறைந்த இந்த தேசமே எனக்குப் பிடிக்கவில்லை. அமெரிக்காவிலிருந்து திரும்பி வரும் வழியில் நான் மலாய் நாட்டில் இறங்கிச் சில நாள் தங்கியிருந்தேன். பூலோகத்தில் சொர்க்கம் உண்டு என்று சொன்னால் அது மலாய் நாடுதான். அந்த நாட்டுக்கு நாம் போய் விடலாம், வருகிறாயா?''

மேற்படி யோசனையை மறு பேச்சின்றி ரேவதி ஒப்புக் கொண்டாள். தீர்மானம் செய்த ஒரு மாதத்துக்கெல்லாம் இருவரும் கப்பலேறி மலாய் நாட்டை அடைந்தார்கள். கோலாலம்பூரில் ஜாகை ஏற்படுத்திக் கொண்டு வைத்தியத் தொழில் செய்ய ஆரம்பித்தார்கள். ஒன்றரை வருஷ காலம் அவர்களுடைய வாழ்க்கை உண்மையில் சொர்க்க வாழ்க்கையாகவே இருந்து வந்தது.

5. நேதாஜி விஜயம்

நிர்மலமான நீல வானத்திலிருந்து திடீரென்று இடி விழுந்தது போல், ஒரு நாள் ஜப்பான் அமெரிக்காவைத் தாக்கி யுத்தம் தொடங்கிய செய்தி வந்தது. அதன் பலனாக பிரிட்டன் ஜப்பான் மீது போர் தொடங்கியது. சிங்கப்பூரில் இரண்டு பிரம்மாண்டமான பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் ஜப்பான் ஆகாச விமானிகளால் தாக்குண்டு கடலுக் கடியில் சென்றன. சில நாளைக்கெல்லாம் மலாய் நாட்டின் மீது ஜப்பானின் படையெடுப்புத் தொடர்ந்தது. சரித்திரத்திலேயே இல்லாத மிகவும் சொற்ப காலத்தில் மலாய் நாடு ஜப்பானுடைய வசமாயிற்று. அப்போதெல்லாம் ராகவனும் ரேவதியும் ஒரே பீதியிலும் கவலையிலும் ஆழ்ந்திருந்தார்கள். ஜப்பானியக் கொலைகாரர்களின் ஆட்சி ஏற்பட்ட பிறகு ஒவ்வொரு நாளும் பயங்கர விபத்தை எதிர்பார்த்து கொண்டிருந்தார்கள். அந்தத் தலைவெட்டி ராஜாங்கத்தில் எந்த நிமிஷம் யாருடைய தலைக்கு ஆபத்து வருமோ, யார் கண்டது? சாக நேர்ந்தால் இருவரும் கை கோத்துக் கொண்டு சாக வேண்டுமென்று அவர்கள் திடசங்கல்பம் செய்து கொண்டிருந்தார்கள். இப்படிச் சில மாத காலம் சென்றது. பிறகு, அந்த மகத்தான சம்பவம், உலக சரித்திரத்தையே மாற்றியமைக்கக்கூடிய சம்பவம், ஏற்பட்டது. ஸ்ரீ சுபாஷ்சந்திர போஸ் மலாய் நாட்டுக்கு வந்து சுதந்திர இந்திய அரசாங்கத்தை ஸ்தாபித்தார். அவருடைய அரசாங்கம் ஆட்சி புரிவதற்கு அப்போது ஒரு சாண் அகல பூமி இல்லாவிட்டாலும், மலாய் நாட்டிலுள்ள இந்தியர்கள் எல்லாரும் தாங்கள் சுதந்திர இந்திய அரசாங்கத்தின் கீழ் வாழ்கிறோம் என்ற உணர்ச்சி பெற்றார்கள். அவர்களுடைய தோள்கள் பூரித்து உயர்ந்தன; அவர்கள் மார்புகள் விசாலித்து நிமிர்ந்தன; இதற்கு முன் எக்காலத்திலும் அறிந்திராத பெருமித உற்சாகமும் குதூகலமும் அவர்களுடைய உள்ளத்தில் பொங்கித் ததும்பின.

நேதாஜியின் சுதந்திர இந்திய அரசாங்கத்தைப் பல தேசத்து அரசாங்கங்கள் அங்கீகரித்தன. அதற்கு முன்னால் இந்தியர்களைப் புழுக்களைப் போல் மதித்து நடத்திய ஜப்பானியர், நேதாஜியின் வருகைக்குப் பிறகு இந்தியரிடம் மிக்க மரியாதை காட்டத் தொடங்கினார்கள். இந்தியரின் உயிருக்கும் சொத்து சுதந்திரங்களுக்கும் தக்க பாதுகாப்பு ஏற்பட்டது.

நேதாஜியின் நோக்கம் என்னவென்பது சீக்கிரத்திலேயே தெரிய வந்தது. இந்திய சுதந்திர சைன்யம் ஒன்றை அமைத்துக் கொண்டு இந்தியாவுக்குப் படையெடுத்துச் சென்று பிரிட்டிஷாரைத் துரத்தி விட்டுப் புது டில்லியில் பூரண சுதந்திரக் கொடியை உயர்த்துவதுதான் அவருடைய உத்தேசம் என்று தெரிந்தது. இந்த எண்ணத்துடன் நேதாஜி இந்திய சுதந்திரப் படை திரட்டத் தொடங்கினார். அதுவரையில் எச்சிற் கையினால் காக்கை ஓட்டாத லோபிகளாயிருந்தவர்கள் உள்பட மலாயிலும் பர்மாவிலும் வாழ்ந்த இந்தியர்கள் பதினாயிரம், லட்சம் என்ற கணக்கில் பணத்தை அள்ளிக் கொடுத்தார்கள். கனவிலேகூடப் போர்க்களம் செல்வது பற்றி எண்ணி அறியாதவர்கள் நேதாஜியின் சுதந்திரப் படையில் சேரத் தொடங்கினார்கள். அப்படிச் சுதந்திரப் படையில் முதன் முதலில் சேர்ந்தவர்களில் டாக்டர் ராகவனும், டாக்டர் ரேவதியும் இருந்தனர். தங்கள் மூலமாகப் பாரதத் தாயின் விடுதலை நடைபெற வேண்டியிருக்கிறதென்றும் அதனாலேதான் தங்களைக் கடவுள் மலாய் நாட்டில் கொண்டு வந்து சேர்த்தார் என்றும் இப்போது அந்தத் தம்பதிகள் பூரணமாக நம்பினார்கள். மலாயிலிருந்து பர்மாவுக்குப் போன முதல் கோஷ்டியோடு புறப்பட்டுச் சென்றார்கள்.

சில தினங்களுக்கெல்லாம் ரங்கூனிலிருந்து இந்திய சுதந்திரப் படையானது, ''ஜே ஹிந்த்!'' ''டில்லி சலோ!'' என்று வானளாவக் கோஷமிட்டுக் கொண்டும்,

''கதம் கதம் படாயே ஜா
குஷீகே கீத காயே ஜா''

என்னும் சுதந்திரப் போர் கீதத்துடனும் அஸ்ஸாம் எல்லைப்புறத்தை நோக்கிக் கிளம்பியது.

கிளம்பிய போது அந்தப் படையைச் சேர்ந்தவர்களின் உற்சாகத்துக்கு அளவே கிடையாது. நேதாஜி நேரில் வந்திருந்து அவர்கள் புறப்படும் போது பேசிய பேச்சு

மரக்கட்டைக்குக்கூடச் சுதந்திர வீர உணர்ச்சியை ஊட்டக் கூடியதாயிருந்தது. அப்படியிருக்க, ஏற்கெனவே தாய் நாட்டின் விடுதலைக்காக உடல் பொருள் ஆவியைத் தத்தம் செய்யச் சித்தமாயிருந்தவர்களைப் பற்றிக் கேட்பானேன்? புது டில்லியில் சுதந்திரக் கொடியை உயர்த்தி நேதாஜியை இந்தியக் குடியரசின் முதல் அக்கிராசனராகச் செய்யும் வரையில் முன் வைத்த காலைப் பின் வைப்பதில்லையென்று பிரதிக்ஞை செய்துகொண்டு அவ்வீரர்கள் கிளம்பினார்கள். அத்தகைய சுதந்திர ஆவேச வெறி டாக்டர் ராகவனையும் கொள்ளை கொண்டிருந்தது. ஆயினும் அவனுடைய உற்சாகத்தை ஓரளவு குறைப்பதற்குரிய இரு காரணங்கள் ஏற்பட்டிருந்தன. அவற்றில் ஒன்று ரேவதியைப் பிரிந்து போக வேண்டியிருக்கிறதே என்பது. ஏனெனில், ரேவதி சேர்ந்திருந்த பெண்கள் படை போர் முனைக்கு உடனே அனுப்பப்படவில்லை.

இவ்விதம் ஒருவரையொருவர் பிரிய நேர்ந்தது அவர்கள் இருவருக்குமே மன வேதனையை அளித்தது என்றாலும், அவர்கள் ஈடுபட்டிருந்த மகத்தான இலட்சியத்தை முன்னிட்டு ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு பிரியத் தயார் ஆனார்கள். மறுபடியும் சந்தித்தால் சுதந்திர பாரத தேசத்தில் சந்திப்பது, இல்லாவிடில் வீர சொர்க்கத்தில் சந்திப்பது என்று ஒருவருக்கொருவர் வாக்குறுதி கொடுத்து விட்டுப் பிரிந்தார்கள்.

ரேவதியின் பிரிவினால் ஏற்பட்ட மனச் சோர்வை ஒருவாறு ராகவன் சமாளித்துக் கொண்டான். ஆனால் வேறொரு காரணத்தினால் மனத்தில் ஏற்பட்ட சங்கடம் அவ்வளவு சுலபமாகச் சமாளிக்கக் கூடியதாயில்லை. அந்தக் காரணம் ராகவன் சேர்ந்திருந்த சுதந்திரப் படையின் தலைவர் மேஜர் ஜெனரல் குமரப்பா என்பதுதான்!

முதலில் இந்த உண்மை தெரிந்ததும் ராகவன் ஆச்சரியத்தினால் திகைத்துப் போனான். விசாரித்து அவர் எப்படி இந்திய சுதந்திரப் படையில் மேஜர் ஜெனரல் ஆனார் என்பதைத் தெரிந்து கொண்டான். பர்மாவை ஜப்பானியரிடமிருந்து பாதுகாப்பதற்காக முதன் முதலில் ரங்கூனுக்கு வந்த மதராஸி படையில் ஐ.எம்.எஸ். டாக்டர் என்ற முறையில் அவர் வந்தார். அந்தப் படை வந்து சேர்ந்த சில நாளைக்குள்ளே ஜப்பானியரால் நாலுபுறமும் சூழப்பட்டுச் சரணாகதி அடைய நேர்ந்தது. சரணாகதி அடைந்தவர்கள் எல்லாரும் முதலில் சிறையில் வைக்கப்பட்டிருந்தார்கள். பிறகு, அவர்களிலே நேதாஜியின் சுதந்திரப் படையில் சேர இசைந்தவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். அப்படி விடுதலையானவர்களில் கர்னல் குமரப்பாவும் ஒருவர். நேதாஜியின் விசேஷ அபிமானத்துக்கு அவர் சீக்கிரத்தில் பாத்திரராகி, சைன்யத்தின் டாக்டராக இருப்பதற்குப் பதிலாக மேஜர் ஜெனரல் என்ற பட்டத்



துடனே ஒரு பெரிய சைன்யப் பகுதிக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இதையெல்லாம் அறிந்த பிறகு ராகவனுடைய ஆச்சரியம் நீங்கிற்று. ஆனால் மனத்தில் ஒருவிதத் திகில் மட்டும் இருந்து கொண்டிருந்தது. மேலும் ஜெனரல் குமரப்பா நமது கதாநாயகன் ராகவனை ஏற்கனவே தெரிந்தவர் என்பதாகவே காட்டிக் கொள்ளவில்லை. இது ராகவனுடைய மன அமைதி குலைவதற்குப் பெரிதும் காரணமாயிருந்தது.

6. கிராதகன் உள்ளம்

வழிப் பிரயாணத்தில் நேர்ந்த சகிக்க முடியாத கஷ்டங்களையெல்லாம் உள்ளத்தின் உறுதியினால் சகித்துக் கொண்டு ராகவனுடைய படை காட்டுப் பாதைகளிலும், மலை வழிகளிலும் பல நூறு மைல் தூரம் பிரயாணம் செய்து கிட்டத்தட்ட அஸ்ஸாமின் எல்லைப்புறத்தை அடைந்தது. அந்த வீர சுதந்திரப் படைக்கு அங்கே ஒரு பெரிய ஏமாற்றம் ஏற்பட்டது. அந்தப் படையைச் சேர்ந்த ஒவ்வொரு வீரனும் அதற்குள்ளாகப் புது டில்லியை அடையப் போகிறோம் என்ற எண்ணத்தை விட்டு விட்டான். இந்தியாவின் எல்லைக்குள்ளே அடி எடுத்து வைத்து இந்தியாவின் சுதந்திரத்துக்காகவும் நேதாஜிக்காகவும் ஒரு துப்பாக்கி வேட்டாவது தீர்த்து விட்டுச் சாக வேண்டும் என்றுதான் ஆசைப்பட்டான். ஆனால் அந்த ஆசை நிறைவேறுவது கூட முடியாத காரியம் என்று தெரிய வந்தது.

அவர்களுக்கு முன்னால் வந்திருந்த இந்திய சுதந்திர சேனையின் வீரர்கள் ஏற்கெனவே இந்தியாவின் எல்லைக்குள்ளே பிரவேசித்து இம்பால் போர் முனையில் மகத்தான வீரப் போர் புரிந்தார்கள். அவர்களுக்குள்ளே எத்தனையோ அரவான்களும் அபிமன்யுக்களும் இணையில்லாத தீரத்தைக் காட்டினார்கள். உயிரைத் திரணமாக எண்ணிப் பத்து பிரிட்டிஷ் வீரருக்கு ஒரு சுதந்திர வீரர் வீதம் சில இடங்களில் நின்று சண்டையிட்டார்கள். ஆனாலும் என்ன பிரயோசனம்? காந்தி மகானின் அஹிம்சா மார்க்கத்திலேயே பாரத தேசம் சாத்விக் சுதந்திரத்தை அடைய வேண்டும் என்று இருக்கும் போது அவர்களுடைய முயற்சி எவ்விதம் பலிதமடையும்?

பிரிட்டிஷ் கட்சிக்குத் துணையாக அமெரிக்க ஆகாச விமானங்கள் ஆயிரக்கணக்கில் வந்து சேர்ந்தன. இந்திய சுதந்திர வீரர்களுக்கும் ஜப்பானிய வீரர்களுக்கும் துணையாகப் போதிய ஜப்பானிய ஆகாச விமானங்கள் வந்து சேரவில்லை. சின்னஞ்சிறு ஜப்பான் தன்னுடைய சக்திக்கு மேலே காலை அகட்டி வைத்து விட்டது! நாலா புறமும் சூழ்ந்து தாக்கிய எதிரிகளுக்கு ஈடு கொடுக்க அதனால் முடியவில்லை. இதன் காரணமாக, இந்தியாவில் பிரவேசித்த ஜப்பானிய வீரர்களும் சுதந்திர இந்திய வீரர்களும் பெரும்பாலும் அங்கேயே உயிர் துறக்க நேர்ந்தது. ஒரு சிலர் இந்தியாவின் எல்லையை மறுபடியும் பின்புறமாகக் கடந்து பர்மாவில் பிரவேசிக்க வேண்டியதாயிற்று.

இப்படியாக முன்னணியில் சென்றிருந்த படையில் இறந்தவர்கள் போக மற்றவர்கள் பின்வாங்கி வந்து கொண்டிருந்த சமயத்தில் காப்டன் ராகவனுடைய படை இந்தியாவின் எல்லைக்குச் சமீபத்தில் வந்து தங்கியது. சைனியம் தங்கிய இடம் காட்டுப் பிரதேசம்; கையோடு கொண்டு வந்திருந்த உணவுப் பொருள் வெகு சீக்கிரம் கரைந்து போய்க் கொண்டிருந்தது. அந்தச் சைனியத்திலிருந்த வீரர்கள் ஒவ்வொருவரும் முன்னால் போகப் போகிறோமா பின்னால் போகப் போகிறோமா என்று தெரியாமல் சொல்ல முடியாத வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தனர்.

டாக்டர் ராகவனும் அதே மனோ நிலையிலேதான் இருந்தான்.

ரங்கூன் வீதிகளில் இந்திய சுதந்திரப் படை அணி வகுத்துச் சென்ற போது இரு புறமும் சமுத்திரம் போல நின்ற ஜனங்கள் —பர்மியர்களும் இந்தியர்களும்,—எவ்வளவு உற்சாகம் காட்டினார்கள்! எப்படிப் பூமாரி பொழிந்து வாழ்த்துக் கூறி வழி அனுப்பினார்கள்.

புது டில்லிக்குப் போய்க் கொடி போடுவதற்குப் பதிலாகத் திரும்பவும் ரங்கூனுக்கே போய்ச் சேர்ந்தால், அந்த ஜனங்கள் எப்படி நம்மை வரவேற்பார்கள்?

நல்லது; ரேவதிதான் என்ன சொல்வாள்?... ஆகா! சுதந்திர முழக்கத்துடன் கிளம்பிய இந்திய சுதந்திரப் படை இத்தகைய முடிவுக்கு ஆளானதைக் கேட்டால் அவள் மனம் எப்படித் துடிக்கும்? அவள் இப்போது எங்கே இருக்கிறாளோ? நேற்றுப் புதிதாக வந்திருப்பதாகச் சொன்னார்களே, அந்தப் பெண்கள் படையில் ஒருவேளை அவள் இருப்பாளோ? அவளையாவது சந்திக்க முடிந்தால், இந்த மனோ வேதனைக்கு ஒரு மாற்றாக இருக்கும்.

இப்படிப்பட்ட சிந்தனைகளில் காப்டன்

"ஏன் டாக்டர்! அதிகமா பீஸ் பில் பண்ணியிருக்கீங்க?"

"இதுவரைக்கும் என்னோட எட்டு தெர்மாமீட்டர்களை முழுங்கியிருக்கீங்க பீஸோட அதோட விலையையும் சேர்த்துக்கிட்டேன்.....!"

— மணியன் தர்மலிங்கம்.





ராகவன் ஆழ்ந்திருந்த சமயம், மேஜர் ஜெனரல் அவனைக் கூப்பிடுவதாகச் செய்தி வந்தது. "எதற்காகக் கூப்பிடுகிறார்?" என்ற அதிசயத்துடன் ராகவன் குமரப்பாவிடம் சென்றான்.

காப்டன் ராகவனை அவர் ஏற இறங்கப் பார்த்தார். பிறகு, "காப்டன்! உம்மிடம் மிக முக்கியமான ஒரு வேலையை ஒப்புவிக்கப் போகிறேன்" என்றார்.

ராகவன் கம்பீரமாக, "மிக்க வந்தனம், ஜெனரல்! என் உயிரைக் கொடுத்தாவது கட்டளையை நிறைவேற்றுவேன்!" என்று சொன்னான். ஆனால் அவன் மனத்திற்குள் ஏனோ திக், திக் என்றது.

"உயிரைக் கொடுக்கிறேன் என்று சொல்வதில் பயனில்லை. இந்தியாவின் வருங் காலத்தையே உம்மிடம் ஒப்புவிக்கப் போகிறேன். ஒரு கடிதம் கொடுப்பேன்; அதைக் கொண்டு போய்ப் பத்திரமாய்ச் சேர்க்க வேண்டும். வழியில் உயிருக்கு அபாயத்தைத் தேடிக் கொள்வது துரோகம் செய்வதாகும்....."

"கடிதம் யாருக்கு?" என்று ராகவன் கேட்ட போது அவனுடைய குரல் தழுதழுத்தது.

"வேறு யாருக்கு? நமது மகோந்நதத் தலைவருக்குத்தான். தற்சமயம் நேதாஜி அந்தமான் தீவில் இருக்கிறார். ஆகாச விமானத்தில் போய்க் கடிதத்தைக் கொடுத்து விட்டுப் பதிலும் வாங்கி வர வேண்டும்."

சற்று முன்னால் ராகவன் மனத்தில் குடி கொண்டிருந்த பயமெல்லாம் பறந்தது. குமரப்பாவிடம் சொல்ல முடியாத நன்றி அவனுடைய உள்ளத்தில் ததும்பியது.

"ரொம்ப வந்தனம்! இதோ புறப்படத் தயார்!" என்று எக்களிப்புடன் சொன்னான்.

"ஆனால் இந்த முக்கியமான கடிதத்தை அவ்வளவு சுலபமாக உம்மிடம் ஒப்புவிக்க முடியாது. அதற்கு முன்னால் உமக்கு ஒரு சோதனை இருக்கிறது. அதில் நீர் தேறியாக வேண்டும்."

சிறிது நேரம் ராகவனுடைய மனத்தை விட்டு அகன்றிருந்த சந்தேகங்கள், பயங்கள் எல்லாம் திரும்பவும் அதி விரைவாக வந்து புகுந்தன. "என்ன சோதனை?" என்று ஈனஸ்வரத்தில் கேட்டான்.

"நாலு நாளைக்கு முன்பு இங்கு வந்து சேர்ந்த படையில் ஒருவர் மீது பிரிட்டிஷ் ஒற்றர் என்ற சந்தேகம் ஏற்பட்டது. விசாரித்ததில் அது நிச்சயமாயிற்று. நமக்குள்ளேயிருந்து கொண்டு ஒற்று வேலை பார்ப்பவர்களுக்கு என்ன தண்டனை தெரியுமல்லவா?"

"தெரியும்; மரண தண்டனை."

"அந்த தண்டனையை நீர் நிறைவேற்ற வேண்டும்."

ராகவன் மனத்தில் பெரும் திகில் உண்டாயிற்று. மேலே எதுவும் பேச முடியாமல் நின்றான்.

"ஒற்று வேலை பார்த்தது ஒரு பெண்; அவள் உமக்கு அறிமுகமுள்ள பெண் தான்!"

ராகவனுக்கு இப்போது எல்லாம் வெட்ட வெளிச்சமாகி விட்டது. அவள் ரேவதியாகத்தான் இருக்க வேண்டும்; சந்தேகமில்லை. ஆ! இந்தக் கொடிய கிராதகன் இந்த முறையில் இருவர் மேலும் பழி தீர்த்துக் கொள்ளப் பார்க்கிறான். இத்தனை நாள் ஒன்றுமே வெளியில் காட்டிக் கொள்ளாமல் வேஷம் போட்டதெல்லாம் இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துத்தான்.

ராகவன் ஒரு நிமிஷ நேரம் யோசனை செய்தான். படைத் தலைவர்களின் கட்டளைகளை மறு வார்த்தை பேசாமல் நிறைவேற்றுவதாகச் செய்து கொடுத்த பிரதிக்ஞையை ஞாபகப்படுத்திக் கொண்டான். அதை நிறைவேற்றி விட்டு நேதாஜியையும் கடைசி முறையாகத் தரிசித்து விட்டுப் பிறகு தன் சொந்தப் பழியைத் தீர்த்துக் கொள்வதென்று முடிவு செய்தான்.

"என்ன யோசனை செய்கிறீர்? ஒப்புக் கொள்கிறீரா, இல்லையா?" என்று அதிகாரக் குரலில் கேள்வி வந்தது.

"கட்டளையை நிறைவேற்றுகிறேன்!" என்று ராகவன் பல்லைக் கடித்துக் கொண்டு சொன்னான்.

"ரொம்ப சரி: இதோ துப்பாக்கி! இதில் ஐந்து குண்டு இருக்கிறது: ஐந்தையும் தீர்த்து விட வேண்டும். ஒருவேளை கை நடுக்கத்தினால் குறி தவற இடமிருக்கக் கூடாதல்லவா?"

இவ்விதம் சொல்லிக் கொண்டே குமரப்பா மேஜை மேல் கிடந்த துப்பாக்கியை எடுத்து நீட்டினார். ராகவன் அதற்குள் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டிருந்தான். சிறிதும் கை நடுக்கமின்றித் துப்பாக்கியை வாங்கிக் கொண்டான்.

காப்டன் ரேவதியின் கண்ணைக் கட்டி ஒரு பாறையின் பக்கத்தில் நிறுத்தியிருந்தார்கள்.

ராகவன் அவளுக்கு எதிரில் முப்பது அடி

தூரத்தில் நின்று கொண்டான். துப்பாக்கியைக் குறி பார்த்து விட்டுக் கண்ணை மூடிக் கொண்டான். விசையை இழுத்தான்.

ஒன்று, இரண்டு, மூன்று, நாலு, ஐந்து!

ஐந்து வெடியும் ராகவனின் தலையின் உச்சியில் ஐந்து இடி விழுந்தது போல் வெடித்தன.

அவனுடைய தலை சுழன்றது. மறுபடியும் ஒரு பெரு முயற்சி செய்து சமாளித்துக் கொண்டான். கண்ணைத் திறந்து பார்த்த போது ஏற்கெனவே ரேவதி நின்ற பாறை ஓரத்தில் புகை சூழ்ந்திருப்பதைக் கண்டான். அந்தப் புகையினிடையே தரையில் ஓர் உருவம் கிடந்தது!

அங்கிருந்து காப்டன் ராகவனை மிக அவசரமாய் விமானக் கூடத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.

அதன் பிறகு அவன் குமரப்பாவைப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. கடிதம் அவனிடம் கொண்டு வந்து கொடுக்கப்பட்டது. விமானம் தயாராய்



நின்ற இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டான். அதில் ஏறுவதற்கு யத்தனித்த சமயத்தில் ராகவனுடைய நண்பன் ஒருவன் வந்து அவன் காதோடு ஒரு செய்தியைச் சொன்னான். அதை அவனால் நம்ப முடியவில்லை. "ஆஹா! ஏன் பொய் சொல்லி என்னை ஏமாற்றப் பார்க்கிறாய்? என் புண்பட்ட நெஞ்சில் வேலை எடுத்துக் குத்துகிறாய்?" என்று கேட்டான். "இல்லை, ராகவன்! நான் உன்னை ஏமாற்றவில்லை. நான் சொன்னது சத்தியம்" என்றான் நண்பன். மேலே பேசுவதற்கு அவகாசம் இல்லை. விமானத்தின் காற்றாடிச் சிறகுகள் சுழலத் தொடங்கின.

7. விமானம் மறைந்தது!

அந்தமான் தீவில் சென்று விமானம் இறங்கியதும் நேதாஜியைத் தேடிக் கொண்டு ராகவன் அதிக தூரம் போக வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஏனெனில், அவன் இறங்கிய விமான கூடத்தின் பக்கத்திலேயே நேதாஜியும் இருந்தார். அவரைச் சுற்றி இந்திய சுதந்திர சர்க்காரின் மந்திரிகள் சிலரும் மற்றவர்களும் இருந்தார்கள்.

அவர்களைப் பார்த்தால் ஏதோ ஒரு மிக முக்கியமான முடிவுக்கு வந்தவர்களைப் போலத் தோன்றியது. எல்லோருடைய முகத்திலும் சோகக் குறி காணப்பட்டது.

சில மாதத்துக்கு முன்பு வீர லக்ஷ்மி தாண்டவமாடிய நேதாஜியின் பூரண சந்திரனையொத்த முகத்தை இப்போது சோகக் கிரகணம் பிடித்திருந்தது.

காப்டன் ராகவன் தான் கொண்டு வந்த கடிதத்தை நேதாஜியிடம் கொடுத்தான். நேதாஜி அதைப் படித்த போது அவருடைய சோகச்சாயை படர்ந்த சௌந்தரிய வதனத்தில் புன் சிரிப்பின் ரேகை காணப்பட்டது.

படித்து முடித்ததும் அவர் சொன்னார்: "ஆகா! எல்லாரும் இப்படித்தான் சொல்கிறார்கள். 'நாங்கள் உயிரை விட்டு விடுகிறோம்; நீ மட்டும் எப்படியாவது தப்பிப் பிழைத்து உயிரோடிருக்க வேண்டும்' என்கிறார்கள். 'பாரதத்தாயின் விடுதலைக்காக' என்று சேர்த்துக் கொண்டு சொல்கிறார்கள்.... காப்டன் ராகவன்! நீ திரும்பிப் போக வேண்டிய அவசியமில்லை. உன்னுடைய ஜெனரலுக்கு முன்னமே நான் கடிதம் அனுப்பி விட்டேன். உன்னைப் பற்றிக் குமரப்பா ரொம்பப் பாராட்டியிருக்கிறார். அவருடைய சிபார்சின்படி உனக்கு லெப்டினண்ட் கர்னல் பதவி அளிக்கிறேன். ஜே ஹிந்த்!" என்றார்.

அங்கிருந்தவர்கள் அனைவரும் "ஜே ஹிந்த்!" என்று முழங்கினார்கள்.

"நண்பர்களே! சுதந்திர இந்தியாவின் சேனாதிபதி பதவியிலிருந்து நான் செய்த கடைசிக் காரியம் இதுவாக இருக்கலாம்..." என்று நேதாஜி சொன்ன போது சுற்றி நின்றவர்களில் ஒருவர் குறுக்கிட்டு, "இல்லை, நேதாஜி, இல்லை! ஒருநாளும் இல்லை. பாரத பூமியில் புது டில்லியில் தாங்கள் சுதந்திர இந்திய சைன்யத்தின் மாபெரும் சேனாதிபதியாக விளங்கும் காலம் கட்டாயம் வரும்!" என்றார்.

"உங்களுடைய வாக்குப் பலிக்கட்டும்! நண்பர்களே! இப்போதைக்கு நான் விடை பெற்றுக் கொள்கிறேன். நான் எங்கே போனாலும் என்ன செய்தாலும் உங்களையெல்லாம் மறக்க மாட்டேன். வருங்கால வேலையைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்ததும் ரேடியோ மூலம் தெரிவிப்பேன். பாங்காக்கிலிருந்தோ, டோக்கியோவிலிருந்தோ, வேறிடத்திலிருந்தோ பேசுவேன். எல்லாரும் அந்தச் செய்தியை எதிர்பார்த்துக் கொண்டிருங்கள். அதன்படி செய்யுங்கள்."

"அப்படியே செய்வோம், நேதாஜி! ரேடியோவில் தங்களுடைய வீர கர்ஜனைக் குரல் எப்போது கேட்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்போம்!"

நேதாஜி கம்பீரமாக நடந்து சென்று தயாராய்க் காத்திருந்த ஆகாச விமானத்

தில் ஏறிக் கொண்டார். விமானத்தின் இறகுகள் சட சட வென்று சுழன்றன. விமானம் முதலில் விர்ரென்று சக்கரங்களில் சுழன்று சென்றது. பிறகு வானத்தில் ஏறத் தொடங்கியது. சுற்றிச் சுற்றி வந்து மேலே மேலே மேலே சென்றது.

விமானம் வானத்தில் ஒரு சிறிய கரும் புள்ளியைப் போல் ஆகும் வரையில் எல்லாரும் மேலேயே பார்த்துக் கொண்டிருந்தார்கள். கர்னல் ராகவனும் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தான். கடிதத்தை நேதாஜியிடம் ஒப்புவித்ததும் தன்னுடைய சொந்த விஷயத்தை அவரிடம் சொல்லி மேஜர் ஜெனரல் குமரப்பாவைப் பழி வாங்க அனுமதி கேட்க வேண்டுமென்று அவன் எண்ணிக் கொண்டிருந்தான். அதற்குச் சந்தர்ப்பம் சரியாக இல்லை என்பதைக் கண்டான். நேதாஜியும் அவருடைய துணைவர்களும் கண்ட ஒரு மகத்தான கனவு — பாரத சுதந்திரக் கனவு, — துகள் துகளாகப் போய்க் கொண்டிருந்த சமயம் அது. எல்லாரும் அவ்வளவு மகத்தான விஷயத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கும் போது தன்னுடைய சொந்த விஷயம் அற்பத்திலும் அற்பமானதாக அவனுக்குத் தோன்றியது. ஏற்கெனவே அவன் நேதாஜியைப் பார்த்திருந்த போதிலும் இவ்வளவு நெருக்கத்தில் பார்த்ததில்லை. எடுத்த காரியத்தில் அத்தகைய பெரும் ஏமாற்றம் ஏற்பட்டிருந்த சமயத்தில் அவருடைய தீரமும் கம்பீரமும் அவனுடைய உள்ளத்தை முழுக்க முழுக்கக் கவர்ந்துஜன்மஜன்மங்களிலேயும் அப்பேர்ப்பட்ட தலைவரின் கீழ் அடிமைத் தொண்டு செய்யலாம் என்று உறுதி கொள்ளச் செய்தது. அவர் ஏறிய ஆகாச விமானம் உயரக் கிளம்பிய போது அவனுடைய உயிரானது உடலை மட்டும் இந்த பூமியில் விட்டு விட்டு மேலேறிச் செல்வது போலத் தோன்றியது. விமானத்தின் உருவம் கொஞ்சம் கொஞ்சமாகச் சின்னதாகி, சிறிய கரும்புள்ளியாகி, கடைசியில் அவனுடைய பார்வையிலிருந்து மறைந்த போது, கர்னல் ராகவன் சற்று நேரம் ஸ்மரணையற்று ஸ்தம்பித்து நின்று கொண்டிருந்தான். எல்லாரையும் போல் 'ஜே ஹிந்த்!' கோஷம் செய்வதற்குக் கூட அவனுடைய நா எழவில்லை. அவனுடைய கண்களில் கண்ணீர் ததும்பி நின்றது. கண்ணீரைத் துடைத்துக் கொள்ளக் கையை உபயோகிக்கும் சக்தியைக் கூட அவன் இழந்து விட்டிருந்தான்.

நங்கூரம் இல்லாமல், சுக்கான் இல்லாமல், மாலுமிகளும் இல்லாமல் நடுக் கடலில் அலைகளால் மோதப்பட்டுக் காற்று அடித்த திசையில் அங்கு மிங்கும் அலைந்து மிதந்து கொண்டிருக்கும் கப்பலைப் போல் சில காலம் லெப்டினெண்ட் கர்னல் ராகவன் பர்மாவில் அலைந்து திரிந்து கொண்டிருந்தான். மேஜர் ஜெனரல் குமரப்பாவும் அவர் தலைமையிலிருந்த சுதந்திர சேனையின் வீரர்களும் பிரிட்டிஷாரால் சிறை பிடிக்கப் பட்டதாகச் செய்தி வந்தது. காப்டன் ரேவதி



மனைவி: என்னங்க உங்க நண்பர் வந்த வரைக் காணலை? போய் விட்டாரா? அவருக்கு நான் காப்பி தயார் செய்துக்கிட்டிருந்தேன்.

கணவன்: அதைத் தெரிஞ்சுக்கிட்டுத்தான் புறப்பட்டுப் போய் விட்டான் போல் இருக்கு!

— மீனம் தனுசு.



"எல்லோர்க்கும் அதிர்ஷ்டம் ஒரு தடவையாவது கதவைத் தட்டும் என்பாங்க. ஆனால் இவருக்கு அந்த வாய்ப்பும் இல்லாமல் போயிட்டுது!"

"ஏன்....?"

"இவரோட வீட்டுக்குக் கதவே இல்லையே.....?"

— கடுவை. கோபால்சாமி.

யைப் பற்றி யாதொரு தகவலும் தெரியவில்லை. பாறை ஓரத்துப் பயங்கர சம்பவத்துக்குப் பிறகு ஆகாய விமானத்தில் ஏறும் சமயத்தில் அவனுடைய நண்பன் ஒருவன் வந்து காதோடு சொன்ன செய்தி உண்மையா இல்லையா என்று தெரிந்துகொள்ளவும் அவனால் முடியவில்லை. குழப்பமும் ஏமாற்றமும் துயரமும் குடிகொண்டு அலைப்புண்ட உள்ளத்தோடு லெப்டினண்ட் கர்னல் ராகவன் தாய் நாட்டுக்கு வந்து சேர்ந்தான். ஒருவித நோக்கமும் இலட்சியமும் இன்றி அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்த போது, டில்லி செங்கோட்டையிலிருந்து மேஜர் ஜெனரல் குமரப்பா விடுதலையானார் என்று ஒருநாள் பத்திரிகையில் படித்தான். பின்னர் அவரைத் தேடிக் கொண்டு அலைந்தான். அந்தத் தேட்டம் முற்றுப் பெறாத நிலையிலேதான் ரட்லம் ஜங்ஷனில் அன்றிரவைக் கழிக்கும்படி நேர்ந்தது.

8. வேஷம் கலைந்தது!

லெப்டினண்ட் கர்னல் ராகவன் சொன்ன கதையை முழுதும் கேட்டுக் கொண்டிருந்த பிறகு, "தாங்கள் கூறிய வரலாறு மிகவும் பரிதாபகரமாயிருக்கிறது; மேலே என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கேட்டேன்.

"தற்சமயம் என்னுடைய வாழ்க்கையின் நோக்கம் ஒன்றே ஒன்றுதான். மேஜர் ஜெனரல் குமரப்பாவை நான் சந்தித்தாக வேண்டும். அதற்குப் பிற்பாடுதான் வேறு எந்த விஷயத்தைப் பற்றியும் என்னால் யோசிக்க முடியும்" என்றார் கர்னல் ராகவன்.

"குமரப்பாவை நீங்கள் சந்திக்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. உங்கள் பிடிவாதத்தை விட்டு விடுவதே நல்லது" என்று சொன்னேன்.

"அது மட்டும் முடியாது. குமரப்பா யமனுலகத்துக்கே போயிருந்தாலும் அங்கேயும் போய் அவரைக் கண்டுபிடித்தே தீருவேன்!" என்றார் ராகவன்.

"கண்டுபிடித்து என்ன செய்வீர்கள்?"

"கண்டுபிடித்து, 'அட பாதகா! என் ரேவதி எங்கே? அவளை என்ன செய்தாய்?' என்று கேட்பேன். சரியான பதில் சொன்னால் விட்டு விடுவேன். இல்லாவிடில் இதோ இந்தக் கைத்துப்பாக்கியிலுள்ள ஆறு குண்டுகளையும் ஒன்று, இரண்டு, மூன்று, நாலு, ஐந்து என்று எண்ணி அவர் மார்பில் செலுத்துவேன்!"

"கர்னல்! இது என்ன பைத்தியக்காரத்தனம்!"

"ஆம்; இங்கே உட்கார்ந்து நான் உம்மிடம் பேசிக் கொண்டிருப்பது பைத்தியக்காரத்தனந்தான். இத்தனை நேரம் உம்மிடம் பேசி வியர்த்தமாக்கினேனே?" என்று சொல்லிக் கொண்டே கர்னல் ராகவன் எழுந்தார்.

அவரை நான் "அவசரப்பட வேண்டாம்; உட்காருங்கள்!" என்று சொல்ல வாயெடுத்தேன். ஆனால் நெஞ்சில் எண்ணியது வாயில் வரவில்லை; அப்படி என்னைப் பேச முடியாமல் செய்த சம்பவம் ஒன்று அப்போது நேர்ந்தது.

சுவர் ஓரத்தில் இத்தனை நேரமும் படுத்திருந்த மனிதர் சட்டென்று எழுந்தார். நாங்கள் உட்கார்ந்திருந்த இடத்தை நோக்கி நடந்து வந்தார். வெளியிலேயிருந்து வந்த மங்கிய விளக்கின் ஒளி அவர் முகத்திலே பட்டபோது, என்னைத் தூக்கி வாரிப் போட்டுத் திகைப்படையச் செய்தது.

ஏனெனில், அந்த மனிதரை எனக்கு நன்றாய்த் தெரியும்; அவர் மேஜர் ஜெனரல் குமரப்பாதான்!

'என் கண்களை என்னால் நம்ப முடியவில்லை' என்று சாதாரணமாய்க் கதைகளில் எழுதுகிறார்களே, அது இப்போது என் விஷயத்தில் முற்றிலும் உண்மையாயிற்று. நிஜமாக அவர் குமரப்பாதானா? இத்தனை நேரமும் அந்த மூலையில் படுத்திருந்தவர் அவர்தானா?

குமரப்பாவின் குரல் எப்போதுமே கனமாகவும் கம்பீரமாகவும் இருக்கும். இப்போது வழக்கத்தை விட அதிக கனமும் கம்பீரமும் பொருந்திய குரலில் அவர் "கர்னல் ராகவன்! உம்முடைய நண்பர் கூறியது தவறு. இதோ நானே, சாக்ஷாத் மேஜர் ஜெனரல் குமரப்பாவே, ஆஜராகியிருக்கிறேன். உம்மை மிகக் கடுமையான சோதனைக்கு நான் உட்படுத்தியது வாஸ்தவந்தான். அதற்குப் பரிகாரம் செய்யவே இதோ வந்திருக்கிறேன். உம்முடைய கைத்துப்பாக்கியிலுள்ள குண்டுகளை என் மார்பிலே செலுத்த நீர் விரும்பினால் அப்படியே செய்யலாம். அவை நிஜக் குண்டுகள்தானே? புகைக் குண்டுகள் அல்லவே?" என்று கூறிவிட்டு நகைத்தார். அந்த நகைப்பு ஏனோ எனக்குப் பயங்கரத்தை உண்டாக்கிற்று.

ராகவனுடைய முகத்தைப் பார்த்தேன். அந்த முகத்தில் குரோதமும் அசூயையும்

"அதோ போறாரே அவர் ஒரு நாலு படத்துல வக்கீலா நடிச்சார்... அடிச்சது யோகம்.....!"

"இப்போ ஹீரோவா நடிக்கிறாரா?"

"ஊகூம். இப்போ ஒரு படத்தில் நீதிபதியா புரொமோஷன் கொடுத்துட்டாங்க!"

— கடுவை. கோபால்சாமி.





''என்னங்க! நாம் நாலு காசு சம்பாதித்து நல்ல நிலைமைக்கு வரணுமா? வேண்டாமா?''

''வரணும்!''

''உங்க ஆபீஸ் பத்து கிலோ மீட்டர் தூரத்தில் தானே இருக்கு தினம் நடந்தே போயிட்டு வந்துடுங்களேன்.....''

— மணியன் தர்மலிங்கம்.

ஆங்காரமும் கோர தாண்டவம் ஆடின. கண்கள் நெருப்புத் தணலைப் போல் ஜொலித்தன. ஏதோ பேசுவதற்கு முயன்றார். ஆனால் உதடுகள் துடித்தனவே தவிர வார்த்தைகள் வெளி வரவில்லை. துப்பாக்கியை எடுத்துக் குமரப்பாவின் மார்பிற்கு எதிரே நீட்டிய போது அவர் கைகள் சிறிது நடுங்கின.

சட்டென்று நான் குதித்து எழுந்து ''ராகவன்! ஒரு நிமிஷம் பொறுங்கள்!'' என்று கூவிய வண்ணம் அவர் கையைப் பிடித்துக் கொண்டேன். என் கை பட்டதும் ராகவனுக்கு ரோமாஞ்சனம் உண்டானதை உணர்ந்தேன். எனக்கும் அதேவிதமான அனுபவம் ஏற்பட்டது.

குமரப்பா ராகவனைப் பார்த்து, ''ரேவதி எங்கே என்று என்னைக் கேட்கிறீரே? உம்முடைய சிநேகிதரைக் கேட்பதுதானே?'' என்றார்.

நான் பதற்றத்துடன், ''ஆம்! நான் சொல்கிறேன். கர்னல் ராகவன் ஒரு நிமிஷம் பொறுப்பதாக வாக்களித்தால் சொல்கிறேன்'' என்றேன்.

பிறகு என் முகத்தை ஒரு நிமிஷம் வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டு — (சொல்வதற்குக் கூச்சமாயிருக்கிறது)— அது வரையில் என் மேலுதட்டின் மேற்புறத்தை அலங்கரித்துக் கொண்டிருந்த 'ஹிட்லர்' மீசையை எடுத்து எறிந்தேன். தலையை நன்றாக மூடியிருந்த 'மப்ளரை'யும் கையில் எடுத்துக் கொண்டேன். (எங்கும் குழப்பமாயிருந்த அந்த நாட்களில் தொந்தரவுக்குள்ளாகாமல் பிரயாணம் செய்வதற்காகச் சில சமயம் நான் அப்படி வேஷம் தரிப்பது வழக்கம்.)

வேஷம் நீங்கிய என் முகத்தைப் பார்த்ததும் ''ஆஹா! ரேவதியா?'' என்று ராகவன் கூச்சலிட்டார்.

''ஆம்! ரேவதிதான்!'' என்றேன்.

''இத்தனை நேரம் என்னை ஏமாற்றி என் வாயைப் பிடுங்கி என் மனத்திலிருந்ததையெல்லாம் கொட்டும்படி செய்தாயல்லவா? உன்னை என்ன செய்கிறேன், பார்!''

இருந்தாலும் இந்தப் புருஷர்களுக்குக் கொஞ்சமாவது கூச்சம், சங்கோசம் என்பது கிடையாது! எனக்குந்தான் மனத்திற்குள் எவ்வளவோ ஆர்வம் இருந்தது. அதையெல்லாம் நான் கட்டுப்படுத்திக் கொண்டு இத்தனை நேரம் சும்மா இருக்கவில்லையா?

ஆனால் புருஷர்கள் எல்லாரையுமே நான் குறை சொல்லக் கூடாது. சமய சந்தர்ப்பத்தைப் பார்த்து ரஸக் குறைவு ஏற்படாமல் நடந்து கொள்கிறவர்களும் இருக்கத்தான் இருக்கிறார்கள். மேஜர் ஜெனரல் குமரப்பா அப்படித்தான் நடந்து கொண்டார். ஒரு நிமிஷங்கூட அங்கே நிற்காமல் சுவர் அருகே சென்று சால்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டு புறப்பட்டார். அவர் வாசற்படியைக் கடக்கும் போதுதான் இவருக்குச் சுய அறிவு வந்தது! நானும் என்னை விடுவித்துக் கொண்டு அப்பால் நகர்ந்தேன்.

''ஜெனரல்! ஜெனரல்! எங்களை மன்னிக்க வேண்டும்!'' என்று ராகவன் அலறினார்.

மேஜர் ஜெனரல் திரும்பிப் பார்த்து, ''உங்களை நான் மன்னிப்பதற்கு என்ன அவசியம் இருக்கிறது? நீங்கள் தான் என்னை மன்னிக்க வேண்டும்!'' என்றார்.

''ஜெனரல்! ஒரு விஷயம் தயவு செய்து சொல்ல வேண்டும். நம் அருமைத் தலைவர் நேதாஜி மரணமடைந்தது உண்மையா?'' என்று ராகவன் பரபரப்போடு கேட்டார்.

குமரப்பாவின் முகத்தில் அப்போது அதி விசித்திரமான ஒரு புன்னகை தவழ்ந்தது.


''ராகவன்! நீரா இப்படிப்பட்ட கேள்வி கேட்பது? இந்திய சுதந்திரப் படையைச் சேர்ந்த வீரர்களுக்கு மரணம் என்பது உண்டா? அமர வாழ்வு பெற்றவர்கள் அல்லவா நாம்? அதிலும் நம் நேதாஜிக்கு மரணம் ஏது?''

இவ்விதம் சொல்லிவிட்டு மேஜர் ஜெனரல் குமரப்பா வெயிட்டிங் ரூமின் வாசற்படியைக் கடந்து சென்றார்.

அவரைப் பின் தொடர்வதற்காக அடி எடுத்து வைத்த ராகவனை நான் கையைப் பற்றி நிறுத்தினேன்.

முடிவுரை

லெப்டினண்ட் கர்னல் ராகவனும் நானும் மதராஸ் மெயில் வண்டியில் சென்னையை நோக்கிப் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது குமரப்பாவைப் பற்றியே நாங்கள் அதிகமாகப் பேசும்படி இருந்தது. சென்னை ஆஸ்பத்திரியில் அவர் கீழ் வேலை பார்த்தபோது அவரைப் பற்றி நான் எண்ணியது பெருந்தவறு என்று பின்னால் தெரிந்து கொண்டேன். குமரப்பா ஐரோப்பாவுக்குப் போயிருந்த போது வியன்னாவில் ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸைச் சந்தித்து அவரிடம் பக்தி கொண்டாராம். சுபாஷ் பாபு இந்தியாவிலிருந்து மறைந்த பிறகும் அவருடைய காரியங்களைப் பற்றிக் குமரப்பாவுக்குச் செய்தி வந்து கொண்டி



ருந்ததாம். நான் ஒரு பெரிய தேச பக்தருடைய மகளாதலால் என்னையும் நேதாஜியின் சேவைக்குப் பயன்படுத்தலாம் என்று குமரப்பா நினைத்தாராம். அதைத்தான் நான் தவறாக அர்த்தம் செய்து கொண்டு அவஸ்தைப்பட்டேன். என்னைப் பாறையடியில் நிறுத்தி ராகவனைச் சுடும்படி செய்தது உண்மையில் ஒரு சோதனைதான். அந்தத் துப்பாக்கியில் வெடி குண்டு கிடையாது; புகைக் குண்டுதான் இருந்தது. இதைப் பற்றியெல்லாம் திரும்பத் திரும்ப அலுப்பில்லாத அதிசயத்துடன் நாங்கள் பேசிக் கொண்டு போனோம்.

''நமது வாழ்க்கையின் அதிசய சம்பவங்களுக்குள்ளே மிகவும் அதிசயமானது, ரட்லம் ஜங்ஷனில் அன்றிரவு நாம் குமரப்பாவைச் சந்தித்ததுதான்!'' என்று ஒரு முறை நான் சொன்னேன்.

''அதே இடத்தில் நாம் இருவரும் சந்தித்ததைக் காட்டிலுமா?'' என்றார் என் அருமைக் காதலர்.

''ஆமாம்; அதைவிடக்கூட அதிசயந்தான்!''

கர்னல் ராகவன் சிறிது கோபத்தோடு, ''அது எப்படி?'' என்று கேட்டார்.

என்னுடைய பெட்டிக்குள்ளே சில நாளாகப் பத்திரப்படுத்தி வைத்திருந்த ஒரு தினசரிப் பத்திரிகையை எடுத்துக் கொடுத்தேன். அதில் வெளியாகியிருந்த ஒரு செய்தியைச் சுட்டிக் காட்டினேன். அதைப் படித்தும் ராகவனுக்கு எல்லையற்ற வியப்பு ஏற்பட்டதென்பதை அவருடைய முகக்குறி உணர்த்திற்று. மேற்படி பத்திரிகைச் செய்தி வருமாறு:

''இந்திய சுதந்திரப் படையில் மிகவும் பொறுப்பு வாய்ந்த பதவி வகித்தவரும், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமான ஆப்தருமான மேஜர் ஜெனரல் குமரப்பா சென்னை... ஆஸ்பத்திரியில் நேற்று சேர்க்கப்பட்டார். சிகிச்சை எதுவும் பயன்படாமல் இன்று மாலை அவர் மரணமடைந்த செய்தியை அறிந்து பெரிதும் வருந்துகிறோம்.''

லெப்டினண்ட் கர்னல் ராகவன் திரும்பத் திரும்ப மேற்படி செய்தியைப் படித்துப் பெருமூச்சு விட்டார்.

''தேதியைப் பார்த்தீர்களா?'' என்று கேட்டேன்.

''ஆம்; ரட்லம் ஜங்ஷனில் நாம் சந்தித்ததற்கு மூன்று தினங்களுக்கு முன்னால்!'' என்றார் ராகவன்.

''அன்றிரவு அவரைப் பார்த்த போதே எனக்கு ஏதோ ஒரு மாதிரி இருந்தது!'' என்று நான் சொன்னேன்.

''அமர வாழ்வைப் பற்றி ஜெனரல் குமரப்பா கூறியதின் உண்மைப் பொருள் இப்போதுதான் எனக்கு நன்றாய் விளங்குகிறது!'' என்றார் என் உயிர்த் துணைவர்.

ஷாப்பிங் இடையே.



உணவிற்கு இடையே.

உங்களுக்கு சிறிது பசியெடுக்கும் பொழுது அது உணவருந்தும் நேரமாக இல்லாவிடில் குளிர்ச்சி நிறைந்த கிரேட் ஷேக் அருந்துவீர்.

இது திருப்தி தரும் செழுமையான சோயா மில்க் பானம். உங்கள் தேர்வுக்கென பலவித அருமையான சுவைகளில் வருகிறது.

வெறும் கலோரிகள் மட்டுமின்றி இது உங்களுக்கு உன்னத தரம் கொண்ட புரதம், வைட்டமின்கள் மற்றும் கனிஜப் பொருட்களை அளிக்கிறது.

வேறு என்ன வேண்டும்? இதர பால்களைப் போல் அல்லாது இதில் கொழுப்புச் சத்து மிகக் குறைவாக உள்ளது. தவிர கொலஸ்ட்ரால் சிறிதளவும் கிடையாது.

அருமையான சுவைகளில்.

Great Shake

கிரேட் ஷேக். சோயாவின்
நற்குணங்கள் நிறைந்த உணவு பானம்.

Enterprise/NS/256 Tm A

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

உங்கள் பற்களின் பாதுகாவலன்




ஸிபாகா ஃப்ளோரைட்

குழந்தைகள் என்றால் எப்போதும் குழந்தைகள்தான்... ஆடிப்பாடி, வாழ்க்கையில் கிடைக்கிற இனிப்புகளைச் சுவைத்து மகிழ்கின்றனர். இந்த ஆரம்ப ஆண்டுகளிலேதான், உங்கள் குழந்தைகளின் பற்கள் சிதைவடையக் கூடும். ஆகவே விசேஷ பாதுகாப்பு அவசியம்.

1988ல், இந்தியாவில் நடைபெற்ற பல சர்வதேச மாநாடுகளில், உலக சுகாதாரக் கழக (WHO), ஓரல் ஹெல்த் தலைமை அதிகாரி, டாக்டர் டேவிட் பார்ம்ஸ், ஃப்ளோரைட் டூத்பேஸ்ட் உபயோகம் குறித்து, பலத்த சிபாரிசு செய்துள்ளார். "பற்களில் சொத்தை விழுவதை, ஃப்ளோரைட் தீவிரமான முறையில் தடுக்கிறது" என்றும் அவர் கருத்தறிவித்துள்ளார்.

ஸிபாகா ஃப்ளோரைட் டூத்பேஸ்ட் இதைத்தான் செய்கிறது...

ஸிபாகா ஃப்ளோரைட் பல் எனாமலோடு கலந்து, அமிலம் உறபத்தி செய்யும் கிருமிகள் மற்றும் பற்சிதைவுகளில் இருந்து பற்பாதுகாப்பைத் தருகிறது.





ஹிந்துஸ்தான் ஸிபா-காய்கீயின் தரமான தயாரிப்பு

ULKA-TP-1-88 TAM